T. 1745

SRI VENKATESVARA ORIENTAL SERIES—No. 18.

EDITOR :—PROF. P. V. RAMANUJASWAMI, M.A.

# TIRUVENKATA THALAPURANAM

## (TIRUPATI MAHATMYAM)

### TAMIL PROSE VERSION

(SUPPLEMENT)

BY

T. P. PALANIAPPA PILLAI, B.O.L.

READER IN TAMIL

SRI VENKATESVARA ORIENTAL INSTITUTE

TIRUPATI.

1949

# திருவேங்கட தலபுராணம்

## (திருப்பதி மான்மியம்.)

T. P. பழனியப்ப பிள்ளை, B.O.L.

(தமிழ் ஆராய்ச்சியாளர், திருவேங்கடேசுவரன் ஆராய்ச்சிக் கழகம்)

எழுதியது.

திருமலை-திருப்பதி தேவஸ்தானம் கமிட்டியாரின் உத்திரவின்படி

கமிஷணர்

A. ஜெயராம் நாயுடு அவர்கள் B.A.

பதிப்பித்தது.

1948

விலை அணா 0-8-0.

PRINTED AT

TIRUMALAI-TIRUPATI DEVASTHANAMS PRESS

TIRUPATI

3000 Copies—7-5-'48.

# முகவுரை.

ஸ்ரீ பாகவத புராணம் கூறியவாறு திராவிட தேசத்தில் புண்ணிய நதிதீரப் பிரதேசங்களில் ஆழ்வார்கள் திரு அவதாரம் செய்து நூற்றெட்டுத் திவ்ய திருப்பதிகளில் எழுந்தருளியுள்ள எம்பெருமான்கள் மீது திருப்பாசுரங்கள் அருளிச்செய்து திருமால் பத்தியை உலகு எங்கும் பரவச் செய்தனர். அவற்றுள் கோயில், திருமலை, பெருமாள் கோயில் மூன்றும் சிறந்தன. இவைகளுள் நடுநாயகம் ஆகி விளங்கும் திருவேங்கட தலத்தின் புண்ணிய வரலாறுகள் பல வடமொழிப் புராணங்களுள் உள்ளன. தமிழ், தெலுங்கு, கன்னடம் முதலிய மொழிகளில் இவ்வரலாறுகள் இல்லை. நூறு ஆண்டுகளுக்கு முன்பு இவற்றைத் திரட்டித் தேவார நகரம் - மதுரகவி - ஸ்ரீ வீரராகவ ஸ்வாமி ஐயங்கார் என்ற பெரியார் 1500 தமிழ்ச் செய்யுள் ஆகத் திருவேங்கட தலபுராணம் என்ற பெயரால் ஒரு நூல் பாடினர். அந்நூலின் பொருளைப் பக்தகோடிகள் எளிதாகப் படித்து உணர்ந்து கொள்ளுமாறு செய்யத் திருமலை-திருப்பதி தேவஸ்தானத்து அதிகாரிகள் விரும்பிப் பணித்தபடி வசன நடையில் எழுதினேன். தேவஸ்தானத்தாரால் நம் நாட்டு மொழிகளில் இத்தல வரலாறு இது வரை வெளியிடப் பெறவில்லை. இத்தகைய நூல் தமிழில் வெளி வருவது இதுவே முதல் தடவை ஆகும். செய்யுள் நூல் பின்பு வெளியாகும். இது விரைவில் வெளி வரும்படி ஊக்கம் கொண்டு உதவிய தேவஸ்தானத்து அச்சுக் கூடத்துத் தலைவர் ஸ்ரீ T. R. நரஸிம்ஹாசாரியர் B.A., அவர்களுக்கு என் நன்றி உரியது ஆகும். குற்றங்கள் இருப்பின் பொறுத்தருளப் பெரியோர்களை வேண்டிக் கொள்ளுகிறேன்.

தி. பொ. பழனியப்ப பிள்ளை.

# பொருள் அடக்கம்

அத்தியாயம் பக்கம்


| | | |
|---|---|---|
| 1. | நாரதர் திருப்பாற்கடல் அடைந்தது ... | 1 |
| 2. | திருமலை தோற்றம் உரைத்தது ... ... | 3 |
| 3. | ஸ்ரீநிவாசன் நாராயண முனிக்கு அருள் செய்தது ... | 4 |
| 4. | இடபாசுரனைக் கொன்றது ... ... | 5 |
| 5. | அஞ்சனாதேவி தவநிலை உரைத்தது ... | 7 |
| 6. | வேங்கடாசலப் பெயர் நிகழ்த்தியது ... | 9 |
| 7. | சோழனுக்குச் சக்கரவர்த்தி பிறந்தது ... | 10 |
| 8. | சக்கரவர்த்தி அரசு புரிந்தது ... ... | 11 |
| 9. | தொண்டைமான் சக்கரவர்த்தி திருப்பணி உற்சவம் நடத்தியது ... ... | 13 |
| 10. | கிருஷ்ண சர்மாவின் சரித்திரம் உரைத்தது ... | 15 |
| 11. | மேருபுத்திரன் என்பதை விளங்க உரைத்தது ... | 17 |
| 12. | சாமி புட்கரிணியின் பெருமை உரைத்தது ... | 19 |
| 13. | வாயு அகத்தியன் சங்கனுக்கு அருள் புரிந்தது ... | 21 |
| 14. | தீர்த்த மகிமை உரைத்தது ... ... | 23 |
| 15. | தீர்த்த விவரம் உரைத்தது ... ... | 24 |
| 16. | தொண்டைமான் சக்கரவர்த்திக்குத் திருவாழி திருச்சங்கு ஈந்தது ... ... | 26 |
| 17. | தீர்த்த யாத்திரையின் விவரம் உரைத்தது ... | 29 |
| 18. | தான விசேடம் உரைத்தது ... ... | 30 |
| 19. | சற்சங்கத்தால் வந்த மகிமை உரைத்தது ... | 32 |
| 20. | தும்புருவுக்கு அருள் செய்தது ... ... | 34 |
| 21. | பெரிய திருவடி பரமபதத்திலிருந்து கிரீடாசலம் கொண்டு வந்தது ... ... | 35 |
| 22. | யாக மகிமை குமாரதாரிகை மகிமை உரைத்தது ... | 36 |
| 23. | சங்கன் என்னும் அரசன் சாமித்துவம் அடைந்தது ... | 38 |
| 24. | இராமன் என்னும் பிராமணன் சித்தி பெற்றது ... | 39 |
| 25. | சக்கரவர்த்தி திருமகன் வேங்கடம் அடைந்தது .. | 40 |
| 26. | தேவர்களுக்கும் தசரத சக்கரவர்த்திக்கும் வரம் கொடுத்தது ... ... | 43 |
| 27. | பிரமன் உற்சவம் நடத்துவித்தது... ... | 46 |
| 28. | சக்கர வேந்தன் வெற்றி உரைத்தது ... | 48 |
| 29. | இராமானுசன் பிரார்த்தனைப்படி சீநிவாசன் சங்கு சக்கரம் தரித்தது ... ... | 51 |
| 30. | வைணவச் சிறப்பு உரைத்தது ... ... | 52 |
| 31. | தத்துவம் கன்மம் ஞானம் பிரபத்தி மார்க்கம் உரைத்தது ... ... | 53 |

அத்தியாயம் பக்கம்

32. சௌனகாதியர் திருவேங்கடத்தானை ஆராதித்து வரம் பெற்றது ... ... 56
33. சேடகிரி நான்கு யுகத்துக்கு நான்கு பேர் பெற்றது... 57
34. வராகப் பெருமான் மந்திரசித்தி உரைத்தது ... 59
35. அலர்மேல்மங்கை அவதரித்தது... ... 61
36. ஸ்ரீநிவாசன் வேட்டையாடி வந்து பதுமினியைக் கண்டது ... ... ... 62
37. வகுளமாலிகை பதுமினியிடத்தில் தூது சென்றது ... 63
38. பதுமினி கலியாணத்திற்கு நகர வர்ணனை உரைத்தது 67
39. ஸ்ரீநிவாசன் அலர்மேல்மங்கை நாச்சியாரை மணம் புரிந்தது ... ... ... 69
40. குருவைநம்பி, தொண்டைமான் சக்கரவர்த்தி மோட்சம் பெற்றது ... ... 73
41. பிரயாகையின் மான்மியம் உரைத்தது ... 75
42. சண்முகன் தவம் உரைத்தது ... ... 78
43. இந்திரன் சாப விமோசனம் பெற்றது ... 79
44. விச்சுவசேனர் உற்பத்தி உரைத்தது ... 81
45. பெரிய திருவடியையும் வாயுவையும் திருமலையில் நிறுவியது ... ... 82
46. அகத்தியர் முதலிய முனிவர் திருமலை வலம் வந்தது ... 84
47. சங்கராசன் தவமும் உபரிசரவசுவின் கதையும் உரைத்தது ... ... 87
48. அகத்தியர் முதலிய ரிஷிகளுக்கும் தேவர்களுக்கும் குரு சுக்கிரன் வசு இவர்களுக்கும் சேவை தந்து வரம் கொடுத்தது ... ... 88
49. கங்கையினும் சிறந்தது சாமி புட்கரிணி என்று மார்க்கண்டருக்குப் பிரமன் உபதேசித்தது ... 90
50. சுகப்பிரம ரிஷிக்கு ஸ்ரீநிவாசன் சேவை சாதித்தது ... 92
51. சூலி நாகலிங்க உபாசனை செய்ததும் பதுமசரசின் பெருமையும் சுகர் சரித்திரமும் உரைத்தது ... 98
52. சுவர்ணமுகி கல்வியை நதி மகிமை உரைத்தது ... 98
53. சங்கன் சரித்திரமும் அஞ்சனை வரம் பெற்றதும் உரைத்தது ... ... 99
54. மார்க்கண்டர் கருடனால் திருமலை அடைந்தது ... 100
55. மார்க்கண்டரும் சுத்தரும் ஸ்ரீநிவாசன் சேவை பெற்றது ... ... ... 102
56. அருந்ததி தவநிலை உரைத்தது ... ... 103
57. வீட்டுமாசாரியர் தருமனுக்குத் திருமலையில் ஸ்ரீநிவாசன் வரவு உரைத்தது ... 105

# திருவேங்கடநாதன்

25 OCT 1951
TRIPLICANE P.O. MADRAS




ஸ்ரீநிவாசன் துதி.

மண்டல மகிழப் பாலார் வாரியின் பற்று நீக்கி
எண்டவர் பலரும் வேண்ட எழிற்பணி மலைமேல் யாழ்கைக்
கொண்டுறை முனிசொற் கேட்டுக் கோனேரிக் கரையி னின்றோன்
முண்டக மலர்ப்பா தத்தை முறையினிற் றொழுதல் செய்வாம்.

ஸ்ரீ



திருவேங்கடமுடையான் திருவடிகளே காப்பு.

# திருவேங்கட தலபுராணம்.

## 1. நாரதர் திருப்பாற்கடல் அடைந்த அத்தியாயம்.

நைமிசாரண்யத்தில் காமம் முதலிய குற்றங்களை நீக்கி இருந்த சௌனகாதி முனிவர்கள் சூத முனிவரை அடிவணங்கித் திருமால் நிலவுலகில் அர்ச்சையாக எழுந்தருளியுள்ள புண்ணிய திருப்பதிகளுள் சிறந்தது யாது என வினவ, அவர் "நாரத முனிவர் முன்னம் பிருகு முனிவருக்கு அருளியதை வியாசமாமுனிவர் எனக்கு உரைத் தருளினர்: அதனை நான் கூறுகின்றேன்: கேளும்; பிருகு முனிவர் நாரத முனிவரை நோக்கி "நிலவுலகில் சிறந்த பதி எது? கூறுக;" என்றார். அதற்கு அவர் பல தீர்த்தங்களால் சிறந்து எப்பாவமும் போக்கிப் பெரும்பயன் அளிக்க வல்லதும், அருந்தவர்கள் புகழ்வதும், இந்திரன், தேவர்கள், யானைமுகன், முருகவேள், சிவன், பிரமன் இவர்கள் எப்போதும் பணிவதும், எல்லா மங்களமும் நல்குவதும் ஆகிய வேங்கடமலை ஒன்று உண்டு. சிவனும், பிரமனும் அதன் சிறப்புக் கூறினும் முடிவுறாது. உலகிலுள்ள புண்ணிய நதிகள் எல்லாம் ஏத்துமாறு உயர்ச்சி பெற்ற கோனேரித் தீர்த்தக்கரையில் ஸ்ரீ வைகுந்தநாதன் திருமகளுடன் என்றும் தங்கியுள்ளான்" என,

பிருகு அப்பெருமான் அங்கு உறைவதற்குக் காரணம் வினவினர். அதற்கு நாரதர், "யான் திருமாலை வணங்கும் ஆர்வத்தாலே திருப் பாற்கடல் நோக்கிச் செல்லுங்கால் சுவேத துவீபத்தின் அழகுகளைக் கண்டேன். பாரிசாத மலர்மணம் கலப்பத் திருப்பாற்கடல் நடுவில் எண்ணில்லா மணித்தூண்களுடன் மண்டபம், மாடம், கூடம், மாளிகை, கோபுரம், விமான தலங்கள் எல்லாம் கோடிசூர்யப்பிரகாச மாயிருப்பக் கண்டேன். கருடன், விஷ்வக்சேனர் முதலிய நித்திய சூரிகள் சூழவும், சுகன், மார்க்கண்டன், பாரத்துவாசன், புண்டரீ கன், யாஞ்ஞவல்கியன், மாருதி, சாபாலி முதலிய முத்தர்கள் இரு கைகூப்பி மறையால் துதிக்கவும், பிரமன் சிவன், இந்திரன் முதலிய தேவர்கள் எல்லாரும் மனத்தால் தியானித்து வாக்கால் துதித்து வணங்கவும், சனக சனந்தனர் முதலோர் பூசனை செய்யவும், பல் கோடி சந்திரரைப்போல் திருமுகம் விளங்கத் திருக்கண்களில் கருணை துலங்க ஆதவன் ஆயிரம் கதிர்போல் விளங்கும் ஆதிசேடன் என்ற திருஅணையின் மீது மேகம் போலத் திருமேனி இலங்க, ஊழி ஒரு கணமாகச் செல்லப் பள்ளிகொண்டு சீதேவி பூதேவி நீளாதேவியர் திருவடி மலரை வருடத் திருமேனியில் கவுத்துவ மணியின் ஒளி பரவ, திருமார்பின் வலப்பால் சீவற்சம் விரவ வைசயந்தி வனமாலை தயங்கப் பிரம்ம சூத்திரம் மின்கொடி போலத் திருத்தோள்களில் விளங்கச் சுதர்சனம், நாந்தகம், சார்ங்கம், கௌமோதகி, பாஞ்சசன்னியம் ஆகிய பஞ்சாயுதங்கள் துலங்கப் பொன்னுலகோர் பொழி மலர்மழை மலிய விளங்கிய திருப்பாலாழி நாதனை மெய்சிலிர்க்கக் கண்டு ஆனந் தத்தால் ஆடிப் பாடி அடிமலர் சூடிப் பணிந்து நின்ற என்னை அப்பெரு மான் தன் திருக்கண்ணால் நோக்கி, 'பிரம புத்திர! நிலவுலகில் யான் திருவிளையாடல் புரியத் தக்க இடம் யாது எனத் தெரிந்து சொல் லுக' எனக் கட்டளை யிட்டார். யான், 'எம்பெருமான்!—நீ அறி யாத் தலம் உளதோ: எனினும் வினவுக்கு உரைக்கின்றேன்: உமது திருவடியில் பிறந்த கங்கைப் பிரதேசத்தின் தெற்கே தண்டக வனம் உளது: முந்நூறு யோசனைப் பரப்பு உடையது. தென்கடலுக்கு வட மேற்காய்க் கீழ்கடற்கு மேற்காய் நான்கு யோசனைக்கு அப்பால் மிக்க அழகு வாய்ந்த நன்னிலம் உலகின் நடுத்தலம் ஆம். அந்நிலத்தோர் உன் திருநாமத்தை என்றும் நினைத்திருப்பார்: ஆதலால் அந்நிலப் பரப்பில் பிரமன் முதல் எவ்வுயிர்க்கும் திருவருள் செய்யுமாறு தேவ

ரீர் எழுந்தருளத் தக்கது ஆம்" என்றேன். அப்போது எம்பெருமான்—'சோழன் புதல்வன் ஆகி ஆணைமன்னனாய் எம்மீது பத்தியுடையனாய் இனித் தோன்றும் அவனைக் காப்பது காரணமாக நீ கூறிய புவியில் யாம் எழுந்தருளுவோம்' என்று மொழிந்தருளினார் என்று பிருகுமுனிவருக்கு நாரதர் உரைத்தார். இவ்வாறு சூத முனிவர் கூறச் சௌனகாதியர் கேட்டு உள்ளம் களித்துச் சீநான் அங்கு வந்தடைந்த செய்திகளை எல்லாம் எங்கட்கு உரைப்பீராக என வேண்டிக்கொள்ள இவை எல்லாம் பதினெண் புராணங்களில் ஒன்றாகிய பிரமாண்ட புராணம் கூறும் என்றார்.

## 2. திருமலைத் தோற்றம் உரைத்த அத்தியாயம்.

திருப்பாற்கடல் நாதன் அனந்தாழ்வானை நோக்கி, "அனந்த! நாரதன் என்னிடம் சொல்லியவற்றை நீ கேட்டிருந்தாய்: அதன்படி யான் சென்று தங்க விரும்பினேன்: நீ மலையுருக் கொண்டு விளங்குக என்று ஆணையிட்டனன். அவ்வாறே அனந்தாழ்வான் திருமலை யுருக்கொண்டு நின்று ஐயனே! நீவிர் கட்டளையிட்ட தானத்தில் மலையாய் நின்றேன். நீவிர் என் தலையின்மீது திருமகள் நிலமகள் நீளை ஆகிய திருத்தேவியார் நும் மலரடி போற்றி நிற்க யார்க்கும் விரும்பியவற்றை அளித்து உதவத் தூய தீர்த்தங்கள் தோன்றுமாறு அருள்க என்று வேண்ட அவ்வாறே வரம் ஈந்து பின்னர் தன் தேவியார்க்கும் ஆங்குச் செல்லுமாறு கட்டளையிட்டுச் சேனை முதலியைப் பார்த்துப் பிரமன், அரன், இந்திரன், விண்ணவர் சூழ ஆதிசேடன் மலையாய் நின்ற இடத்து அடையுமாறு பணித்தனன். இறைவன் பெரிய திருவடியின்மீது விளங்கித் தேவியர் மன்றல் கமழ் ஒளி மேனியராய் விலகாது பொருந்தி யிருக்க அரன், பிரமன், இந்திரன் முதலியோர் ஒருங்கு அடைந்து வணங்கிப் போற்ற அவர்களுக்குத் திருவருள் சுரந்து சீநிவாசனாக அமர்ந்தருளினான். நாரதன் கூறிய இதனைக் கேட்ட பிருகுமுனி, சேடமலையில் தலை எது? உடல் எது? வால் எது? ஆதிசேடன் உலகில் இம்மலையான புதுமையையும் கூறுக" என்று வேண்ட, நாரதன், "ஆதிசேடனுடைய தலையே வேங்கடத் திருமலை: ஸ்ரீசைலமே அவனுடைய வால்: நரசிங்க மூர்த்தி எழுந்தருளியுள்ள அகோபிலமே உடல்" என்று அருளிப்

பின்னரும் "அகத்தியர் முதலிய அருமுனிவர்கள் அம்மலைத் தீர்த்தங்களில் தோய்ந்து பல நாளாக மனம் அலையாமல் இந்திரியங்களை யடக்கித் தவம் புரிகின்றார்கள்: ஆயிர நாமனுடைய திருமேனியே திருமலை: அனந்தாழ்வான் தானே மலையாகி நின்றான். அத்திரு மலையை அன்பால் விரும்பி ஆனந்தம் பொங்க வந்து நித்தர், முத்தர், சித்தர், பிரமன், சிவன், இந்திரன், முனிவர், யோகர், யாவரும் சாரசரங்கள் ஆகி வணங்கிப் பணிந்து எக்காலமும் உறைகின்றார்கள் என்றால் அதன் திறம் கூறக் கூடுமோ" என்று சூதமுனி சௌனகாதியர்க்குச் சொன்னார். இச்செய்திகளெல்லாம் பிரமாண்ட புராணத்து உள்ளன.

## 3. சீநிவாசன் நாராயண முனிக்கு அருள்செய்த அத்தியாயம்.

சீநிவாசன் திருமலையில் செய்த திருவிளையாடல் எல்லாம் நான் அறியுமாறு சொல்க என்று பிருகு முனிவர் கேட்க நாரதன் கூறுவானாகி "நாராயண முனிவர் ஸ்ரீமந் நாராயணனைக் காண வேண்டி எவ்வுலகினும் திரிந்து உழன்று பிரமனை நோக்கித் தவம் செய்து "அரி பதத்தைக் காண எனக்கு அருள்க" என்று வேண்டினாராகப் பிரமன், "உலக காரண மூர்த்தி திருமகளோடும் சேடாசலத்தில் திருக்கோனேரிக் கரையில் எழுந்தருளி யுள்ளான்: ஆகையால் அத்தெய்வத் திருமலைமேல் தவம் புரிவாயாக" என்றனன். அவ்வாறே முனிவர் அத்தீர்த்தக்கரை அடைந்து ஐம்புலன் அடக்கித் திருமகள் கேள்வனை உள்ளத்து இருத்தி யோகத்தில் அமர்ந்தார்; அவ்வளவில் அனந்த கல்யாண குணமூர்த்தி திருமகளும் ஐம்படையும் திகழ்ந்து நிற்கத் தான் பெரிய திருவடியின் மீது எழுந்தருளி முனிவர்க்குக் காட்சியளித்தான். முனிவர் ஆனந்த அனுபவத்தால் ஆடிப் பாடிப் பராவிப் பணிந்து பரவசம் உற்று நின்றார். அப்போது இறைவன் அவரை நோக்கி, "முனிவ! நீ என்னைக் குறித்து யோகம் இயற்றிய விருப்பத்தினை உரைப்பாயாக" என, முனிவர், "ஆதிமூலமே! நின்னைக் கண்ணால் காண வேண்டிப் பல நாளாக வருந்தி உழன்றும் காண்கிலனாகிப் பிரமன் உபதேசத்தாலே இங்கு அடைந்து யோகத்து அமர்ந்து உன் திருமேனியைக் கண்டு தொண்டன் ஆயினேன். நில

உலகில் உள்ளோர்கள் வருத்தம் தரும் யோக மார்க்கத்தில் நிற்கச் சரீர வன்மை இல்லாதவர்கள்: ஆகையாலே தேவரீர் இங்கு எவ்வுயிர்க்கும் அருள் சுரந்து காட்சி அளிக்க அகலாது இருக்க வேண்டும்: மேலும் இம்மலைக்கு எளியேன் பெயர் அமைய வேண்டும்" என்று வேண்டினார். இறையவன் அவ்வாறே வரம் ஈந்து அருளினன். பின்னர் அம்முனிவர் பாபதம் அடைந்தார். திருமகள் நாயகன் திருக்கோனேரிக் கரையில் இவ்வாறு எழுந்தருளி வேண்டுவார்க்கு வேண்டியவற்றை ஈந்து ஆனந்த நிலைய விமானத்து அமர்ந்துள்ளான் என்று நாரதர் பிருகுவுக்கு உரைத்தார்.

## 4. இடபாசுரனைக் கொன்ற அத்தியாயம்.

நாரதன் பிருகுவுக்குக் கூறிய திருமகள் கேள்வன் கதையமுதத்தைச் சொல்லுக என்று பின்னரும் சௌனகர் கேட்கச் சூத புராணிகர் கூறுவார். திருமலை நாதனை சீநிவாசன் சேனைநாதரைப் பார்த்து, "வேட்டைமேல் செல்லக் கருதினோம்; நீ உன் சேனையோடு வருக" என்று ஆணையிட்டுக் குதிரைமீது ஏறிச் சென்றார். சேனைநாதன் பல படைக்கலங்களுடன் விரைந்து போயினன். வன விலங்குகளை வேட்டம் ஆடிக் களைந்தனர். பின் மணங்கமழ் சோலையொன்றின் வழியில் வருங்கால் குன்றென உயர்ந்த தோளனும், சிவபத்தி உடையானும், சீசைலத்தின் தென்பால் உறைபவனும் ஆகிய இடபன் என்ற பெயரினன் இடையே தோன்றி இறைவனை அறியாது "ஏ மானுடா! இவ்வனம் என்னுடையது: ஒருவரும் இதன் உள்புகார்: நீ சிறிதும் அச்சம் இன்றி என் சார்பில் வந்தனை; உன்னை ஓர் அம்பினால் எய்து கொல்வேன்' என்றான். அப்போது திருமலை நாதன் தன்னுடன் வேட்டம் போந்த சவார் தலைவன் ஆகிய சம்பரனை அழைத்து இடபனுடன் போரிட ஏவினார். சம்பரனும் இடபனும் கடும்போர் புரிய இடபன் சம்பரனைத் தாக்கி வீழ்த்திக் குதிரைமீது அமர்ந்துள்ள திருமாலைச் சினமுடன் நோக்கி வந்தான். அப்போது இறைவன் சேனை முதலியைப் போர் செய்ய ஏவுதலும் சேனை முதலி ஏவிய அம்புகளைத் தடுத்து இடபன் எதிர் போர் செய்தான். பின் கடும்போர் நிகழ்ந்தபோது இடபன் சேனைநாதன் முன் நிற்க அஞ்சித் தன் மாயையாலே விண்ணில் மறைந்து சாமாரி

சொரிய இறைவன் அவன் மாயையை அறுத்தற் பொருட்டுத் தன் சக்கரப் படையை ஏவினான். அப்படைக்கலம் கோடிசூரிய ஒளி கொண்டு வாலும் அசுரன் மெய்ந்நடுங்கி, "இஃது ஆதி பராபரன் ஆழியே : என் உடல் அறும் ; ஆவி பரமபதம் எய்தும் : என் பேதைமையால் எதிர்த்ததும் தீது அன்று ; முன் தவப்பயனே" என்று எண்ணி இறைவன் திருமுன் அடைந்து "உலகங்களை எல்லாம் உண்டு உமிழ்ந்த பெருமானே! பிரமாதியர் காணாத நின் திருவுருவை நான் என் விழிக்கு எதிர் காணக் கிடைத்தனன் ; உன் சக்கரப் படையால் என் உடலத்தை அறுத்து ஒழித்து எனக்குப் பரமபதம் அருளி இந்தத் திருமலைக்கு என் பெயரிட வேண்டும்" என்று இறைஞ்சிப் பணிந்தான். அப்போது இறைவன் அவனை விளித்து "நீ மரண காலத்தில் என்னைப் பரன் எனக் கருதிக் கரணங்கள் ஒருமையுற்றுத் துதித்துச் சரணம் அடைந்தமையால் உனக்கு அப்பதம் தந்தேன் : இம்மலைக்கும் உன் பெயர் ஆகுக" என்ற அளவில் சக்கரப்படை அவன் உடலை அறுத்துத் தள்ளியது. இடபன் பட்டதற்கு விண்ணவர் பூமழை சொரிந்தனர். அறம் தழைத்தது : திருமலை நாதனும் உவந்து மலையில் எழுந்தருளினான். அன்று தொட்டு அம்மலைக்கு இடபாசலம் என்ற பெயரும் நிலைபெற்றது என்று நாரதர் பிருகுவுக்குக் கூறி மேலும் தொடர்ந்து, முன்பு திரேதாயுகத்தில் கேசரி என்பான் சிவபிரானை உள்ளத்தில் நினைந்து புதல்வன் பேறுதலை விரும்பி அருந்தவத்தை மேற்கொண்டானாக, அத்தவத்தை உகந்து சிவபிரான் அவன்முன் தோன்றி "உன் தவத்தை உவந்தோம் ; விரும்பியது யாது? புகல்" எனக் கேசரி சிவனை நோக்கி "வெற்றியும் திறலும் மிக்கானாய் எவரானும் சாதல் இல்லாத ஒரு வீரப் புதல்வனை வேண்டினேன்" என்றான். அதற்குச் சிவபிரான், "உனக்கு ஒரு புதல்வி உண்டாவாள் : அவளுக்குச் சிலகாலம் கழித்து அருந்திறல் ஆண்மகவு ஒன்று நீ விரும்பியவாறு உண்டாம்" என்று அருளிக் கைலைக்கு ஏகினான்.

சிவன் அருளிய வரத்தின்படி கேசரிக்கு ஒரு பெண் பிறந்தாள். அவளைக் கண்ணுங் கருத்துமாய் வளர்த்து அஞ்சனை எனப் பெயரிட்டுப் பாராட்டி வர அவள் கன்னிப் பருவம் எய்தினாள். அப்போது ஒரு வானரத் தலைவன் கேசரியின்பால் எய்தி அக்கன்னியைத் தனக்குரிய மணமகளாக விரும்பக் கேசரியும் உவந்து மணம் புரிவித்தான்.

பின்னர் அஞ்சனையும் அவள் கணவனும் பூங்காவினும் குன்றங்களினும் தடத்தும் களித்து விளையாடி யிருந்தனர் என்று நாரதன் பிருகுவுக்குக் கூறினார் எனச் சூத பௌராணிகர் நைமிசாரணிய முனிவர்கட்கு உரைத்தார்—இது பிரமாண்ட புராணத்து உள்ளது.

## 5. அஞ்சனாதேவி தவநிலை உரைத்த அத்தியாயம்.

மேலும் பிருகுவுக்கு நாரதர் கூறுவாராகி அஞ்சனை தன் கணவனுடன் பலகாலம் கூடியிருந்தும் புதல்வற்பேறு இல்லாமையால் துயரம் உற்றாள். தருமதேவதை இவள் துயரம் ஒழிக்கக் கருதிக் குறமகள் வேடம் பூண்டு கையில் கோலும் இடையில் குழந்தையும் கொண்டு அஞ்சனை முன்தோன்றி அவளை நோக்கி "நீ மகப்பேறு இல்லாக் குறையால் மிகவும் துயர் உற்றாய்; உனக்கு அளவில்லா வலிமையுடைய மகன் பிறப்பான்: நீ வேங்கட மலையை அடைந்து தவம் புரிக" என்று கூறி அவளுக்கு மகிழ்வூட்டிடத் தன் மனக் கருத்தைச் சொன்ன குறமகளுக்குப் பல பரிசில் தர அவள் பெற்றுச் சென்றாள். பின்னர் அஞ்சனை திருமலையை அடைந்து விண்ணவர் முதலியோர் வேண்டி அடைகின்ற ஆகாய கங்கைத் தீர்த்தத்தில் நீராடி இந்திரியங்களை யடக்கிக் காற்றை உணவாகக்கொண்டு அரியை உள்ளத்தில் இருத்தித் தவம் மேற்கொண்டாள். மழை, பனி, வெய்யில் இவற்றால் சலிப்பு அடையாது தவத்தைப் பேண வாயுபகவான் அவளுக்குத் தான் உணவாதலை உவந்து மேலும் நாள்தோறும் ஒரு கனியைக்கொணர்ந்து அவள் கையில் பெய்ய அஞ்சனை உண்டு தவத்தில் நிலைபெற்றாள். இங்ஙனமாக ஒருநாள் சிவன் தன் தேவியுடன் ஆங்கு அடைந்து வசிக்க ஒரு கடுவன் தன் மந்தியோடு இன்புற்றிருந்ததை நோக்கி இணைவிழைச்சினுள் மனம் தாழ்ந்தது. பார்வதியினிடம் இதனைச் சொல்லித் தாம் இருவரும் வானர உருக்கொண்டு கலவியில் திளைத்தனராக ஒழுகிய வீரியத்தை ஓர் இலையுள் பெய்து வாயுதேவன் அஞ்சனையின் கையில் சேர்ப்பிக்க அவள் அதனைக் கனியெனக் கருதி உண்டனள். பின்னர் தவநிலை முடிதற்கு உரிய நாள் கிட்டியது: கருப்பம் முதிர வயிறு கனத்து நிற்க மிக்க அதிசயம்

அடைந்து பதைபதைத்து இம்மலையில் தவம் புரிந்தது அல்லாமல் விருப்பம் வேறு அடைந்திலனே ; இங்ஙனம் கருவுண்டாயது என்னை? என நினைவு கூர்ந்திருக்க அந்தரவாணி தோன்றி " அஞ்சனை ! உன் வயிற்றிடை உள்ள கரு சிவபிரானது ; உனக்குப் பிறக்கும் பிள்ளையின் பெருமையை நான் கூறுவது கேள். சூரிய குலத்தில் சக்கரதரன் இராமனாய்த் தோன்றி அறம் வளர்க்க வருவான் ; அவன் திருவடி தாங்கும் பேறு உடையான் நின் பிள்ளை ; உன் துயரினை விடுக" என்று கூறி மறைய அஞ்சனை மகிழ்வொடு தன் தந்தையை அடைந்து நிகழ்ந்தவற்றை உரைத்தாள். பின்பு பத்துத் திங்களும் நிறைந்த அளவில் வானர உருக்கொண்ட புதல்வனைப் பெற்றாள். அவன் உதய கால சூரியனை ஒரு கனியெனக் கருதிப் புசிக்கத் தாவிப் பற்றிய அளவில் விண்ணவர்கள் அலறப் பிரமதேவன் அவனை விலக்குதற்குப் பிரமாஸ்திரத்தை விடுத்தான். அதனால் தாக்குண்ட புதல்வன் மண்ணின்மேல் மயங்கி விழ அஞ்சனை பரிந்து ஓடி மடிமிசை ஏந்திக் கண்ணீர் விட்டுக் கடவுளரை நோக்கி," என் சிசுவைக் கொல்லப் பிரமாஸ்திரத்தை ஏவியது என்னை ? என்னைப்போல மகவு பெற்றுணர்ந்திலீரோ " என்று அழுதாள். அப்போது தேவர்கள் தம் காரியமாகச் சிவன் வீரியமே அவதரித்த உண்மையை அறிந்து அஞ்சனையை நோக்கி, " உன் பிள்ளை புத்தி வித்தைகளால் யாரினும் பெரியவன் ஆவான் ; விண்ணவர் மண்ணவர் விலங்கு பறவை படைக் கலங்கள் முதலியவற்றால் மரணம் அடையான் ; திருமாலுக்குப் பக்தனாய்ப் புகழ் பெருகுபவன் ; ஆதலால் நீ துயரம் அடைய வேண்டா ; உன் மகனுக்குக் குறைவற்ற தோள்வலியும் வரமும் கொடுத்தோம் ; அவன் மிக்க வலி பெற்று எழுவான் " என்று சொல்லிச் சிவன் பிரமனுடன் அடைந்தார். பிரமனும் அஞ்சனையை நோக்கி " நீ சேடாசலத்தில் நெடுங்காலம் தவம் புரிந்து உலகுக்கு உபகாரமான பிள்ளையைப் பெற்றாய் ஆதலால் உன் பெயரையும் இம்மலை அடையும் " என்று அருள்செய்து தன்னுலகம் சென்றான். அஞ்சனையும் தன் பிள்ளையுடன் தன்னுலகு அடைந்தாள். இச்செய்தி யெல்லாம் நாரதன் பிருகுவுக்கு உரைத்தார் எனச் சூத புராணிகர் நைமிச முனிவர்க்கு உரைத்தார். இது பிரமாண்ட புராணத்துள் உள்ளது.

## 6. வேங்கடாசலப் பெயர் நிகழ்த்திய அத்தியாயம்.

பிருகு முனிவர் நாரதரைப் பார்த்து இந்தச் சேடகிரியை வேங்கடாசலம் எனச் சொல்லுவது எதனால் என்று கேட்க, அவர் கூறுவாரானர். ரீசைலத்தின் மேற்புறத்தில் நந்தனபுரம் என்று ஒரு நகர் உண்டு. அந்நகரில் நந்தன் என்ற அரசன் வருணாசிரம தர்மங்கள் குறைவு பெறாமல் அரசாண்டு வரும் நாளில் வேதவித்தாகிய புரந்தரன் என்ற பிராம்மணனுக்குப் பிறந்த மாதவன் என்னும் பெயர் வாய்ந்த பிள்ளை கலைஞனாய் விளங்கினான். அப்போது சந்திரரேகை என்ற தன் மனைவியோடு இல்லறத்தில் இன்புற்றிருந்தான். இவர்கள் இருவரும் தடங்கள், நதிகள், கிரிகள் முதலியவற்றில் காம இன்பம் நுகர்ந்து வருங்கால் ஒரு தாமரைத் தடத்தின் அருகே களித்திருந்தார்கள். அப்போது தீவினை முழுதும் ஒரு புலைப் பெண்ணுருவம் அடைந்து விதியினால் செலுத்தப்பெற மாதவன் முன்பு அவள் எய்தினாள். அவளைக் கண்டு காதல் நோய் மிக்க அப்பிராமணன் தன் மனைவியை விடுத்து அவளை இரந்து பின்னின்றான். அப்புலைச்சியும் அவன் காதல் மொழிக்கு இணங்கினாள். மறையவனும் அதிபாதகம் என்று அஞ்சாதும் இகழ்ச்சி எண்ணாதும் அச்சண்டாளப் பெண்ணோடு மருவிக் கோமாம்ச பக்ஷணம், மதுபானம் முதலிய தீமையெல்லாம் புரிந்து வழியில் சென்றிடும் பிராம்மணர் கூட்டத்தைத் தடியால் தாக்கிப் பொருள் கவர்ந்து அவளிடம் கொடுத்து வாழ்ந்து பின்னர் நோயுற்று வருந்திப் பேதுற்று ஓய்ந்து தணியப் புலைச்சி யவனை இகழ்ந்து கடிந்து நீக்கினாள். கொடிய பாவங்களைச் சுமந்த அம்மாதவன் பித்தனாகிப் பலவிடம் அலைந்து பின்னர் சேடகிரியின் பக்கத்தில் அடைந்தான். அவன் அனந்தன் வடிவாகிய அம்மலையின்மீது ஏறும்போது அக்கினி தேவன் அவன் முடிமுதல் அடிவரை பற்றி எரிக்க, அவன் பாவம் முழுதும் சடசட என்று ஓசை யிட்டுச் சாம்பராய்ப் பொடியுற்றன. அவனும் புடம் இட்ட பொன்போல் பிரம்ம தேஜசு பெற்று விளக்கமுற முனிவர் யாவரும் அவனை அதிசயித்துப் பார்த்து அருகில்போய் அவன் வரலாற்றை வினவினர். அவன் தன் பிறப்பு முதல் சரிதத்தைச் சொன்னான். மாதவன் என்ற மறையவன் பாவமானது இம்மலையின் மாண்பினாலே வெந்து

நீறுன படியை உணர்ந்து முனிவர்கள் இம்மலைக்கு வேங்கடாசலம் என்றும் பெயர் வைத்தனர். எதனால் எனில் வே என்ற எழுத்து தொகுதியாய பவத்தைக் குறிக்கும். கட என்ற இரண்டாம் பதம் கொளுத்தப்படும் என்று பொருள் தரும். வெம்பவம் வெந்து ஒழியச் செய்வதால் வேங்கடமலை யெனப் பெயர் எய்தியது என்று கூறி முனிவர் யாவரும் தங்கள் ஆசிரமங்கட்குச் சென்றார்கள். பிரம்ம தேசு பெற்ற மாதவனும் அம்மலைமீது அளவில் காலம் இந்திரியங்களை யடக்கி அருந்தவம் ஆற்றித் திருமகள் கொழுநன் அருள் பெற்றுப் பரமபதம் எய்தினன். இவ்வாறு பிருகுவுக்கு நாரதர் இச் சரிதத்தைச் செப்பினர் எனச் சூதபுராணிகர் கூறினர்.

## 7. சோழனுக்குச் சக்கரவர்த்தி பிறந்த அத்தியாயம்.

பிருகு முனிவர் நாரதரை நோக்கி, இறைவன் முன்பு நியமித்த சோழ அரசன் புதல்வன் பூமியில் எங்கு உள்ளான்; அவன் யாவன்? அவன் சேடாசலத்தின் மீது அன்புற்ற வரலாறு யாது கூறுக எனக் கூறுவார். இக்கலியுகத்தில் அறம் வழுவாதபடி சோழ அரசன் உலகினைப் புரக்குங்கால் விலங்கு வேட்டத்தை விரும்பிப் படைஞருடன் பல காடுகளில் யானை முதலிய பல விலங்குகளை வேட்டையாடிப் பின்னர் சேடகிரி வனங்களில் நாடித் திரியும்போது மின்னொளி வாய்ந்த கன்னி யொருத்தியைக் கண்ணுற்றான். அவள் அழகு எல்லாம் திரண்டு உரு வாய்ந்த அணங்கு. அவளைக் கண்டு காதலுற்ற அரசனை மலர்கொய்து கொண்டு வந்த அம்மாதும் கண்டு மையலுற்று நின்றாள். அரசன் அவ்வணங்கினை அணுகி இக்காட்டில் தனித்து வந்த நீ யார்? உன்னைப் பெற்றவர் யாவர்? எவர் உன்னை மணக்க நின்றார்? நீ யாவர் பக்கல் மணம் விரும்புகின்றாய்? என்று வினவ, அவள், "என் தந்தை நாகர் உலக வேந்தனாகிய தனுசன் என்பான்; என் தந்தை நிலவுலக வேந்தருள் உயர்குணம், அழகு, கல்வி, வெற்றி இவை வாய்ந்த அரசற்குக் கொடுக்க விரும்புகின்றார்: நீவிர் அவரை அணுகிக் கேட்பீராக" என்றாள். அப்போது அரசன் அணங்கே நீ சொல்வது மெய்யுரை யாயினும் யான் சொல்வதனைக் கேட்பாயாக: பாதாள லோகம் சென்று உன் தந்தையாரின் அனு

மதி கேட்கும்வரை யான் பொறுக்கல் ஆற்றேன்; ஆதலால் அறிஞர்களால் உரைக்கப்பட்ட எண்வகை மணங்களுள் காந்தருவ மணம் ஆகிய சிறந்த மணமுறையினுலே அரச கன்னியர் பலர் முன்பு மணம் உற்றிருக்கின்றபடியே நீயும் அக்கந்தருவ மணமுறைக்கு இசைவாயாக" என்று இரந்து வேண்டினுன். அப்போது அணங்கு அனையாளும் அரசன்மீது ஆராக் காதலுடையாளாய் இசைந்து நின்ருள். இருவரும் இதயம் ஒத்தவராய் மாதவிப் பந்தர்க்கீழ் மருவி இன்புற்றனர். பின்னர் சோழ அரசனின் ஆணையாலே அந்நாகருலக மாது தன்னுலகம் சென்று சோழ அரசன்பால் நிகழ்ந்தவற்றை எல்லாம் தன் தந்தைக்கு உரைத்தாள். நாக வேந்தனும் தக்க மணம் எனக் கருதி மகிழ்வுற்றிருந்தான். நாக கன்னிகை கருப்பம் உற்றுச் சில நாளிற் கருப்பம் முதிர்ச்சிக்கு உரிய குறிகளை அடைந்தாள். பின்னர் பத்தாவது மாதத்தின் இறுதியில் எவ்வுலகத்தையும் புரக்கும் தகையனுய்த் திருமால் திருவடியில் மெய்ப்பற்று உடையனுய் அறங்களைப் பாலிக்கும் இலக்கணம் வாய்ந்தவனுயுள்ள ஒரு புதல்வனைப் பெற்ருள் என்று நாரதர் பிருகு முனிவருக்கு உணர்த்தினுர்.

## 8. சக்கரவர்த்தி அரசுபுரிந்த அத்தியாயம்.

நாரத முனிவர் பின்னரும் பிருகுவுக்கு உரைப்பாராய் நாகர் வேந்தன் தன் புதல்வி ஈன்றெடுத்த புதல்வனின் சாதகமும் வடிவும் கண்டு உலக அரசர்கள் யாவர்க்கும் அரசன் ஆவான் என அறிந்து மகிழ்ந்து பேணி வளர்க்குங் காலத்தில், பால பருவம் அடைந்த அக் குழந்தை ஒரு நாள் தன் அன்னையின் அடிகளை வணங்கி "என் தந்தை யாவர்? அவர் பதி யாது?" என வினுவினுன். அதற்கு அவன் அன்னை "நிலவுலகத்தில் அரசு புரியும் சோழபூபதி என்பார் நின் தந்தை. ஒரு நாள் வேங்கடமலைச் சோலை ஒன்றில் என்னைக் கண்ணுற்றுக் கந்தருவ முறையால் மணந்தனர்" என மொழிந்தாள். அப்போது தந்தையைக் காண வேண்டும் என்று எழுந்த பேரவாவால் அன்னையின் ஆசி பெற்று நிலவுலகம் புக்குத் தந்தை நாட்டினை அடைந்து அவனைத் தாள் பணிந்து தன் வரலாறு முழுதும் உரைத்து நின்ருன். சோழன் சற்றுத் திகைப்புற்றிருக்க ஆகாச

வாணி தோன்றி "சோழ மன்னனே! நீ ஐயுற வேண்டா. உனக்கு நாக கன்னிகை பெற்ற புதல்வன் இவனே. இவன் இம்மாநில மன்னர் மன்னன் எனப் புகழ் எய்தித் தருமமும் நீதியும் தழைக்க அரசு புரிந்து சக்கரவர்த்தி ஆவான். திருவேங்கட மலைமீது விளங்கும் திருமாலுக்கு அடியனாய்த் திருத்தொண்டு புரிந்து விழா முதலிய சிறப்புச் செய்து பெரும்பிரான் ஆவான்; ஆதலால் நீ தடையின்றி அவனுக்கு முடி சூட்டுவாயாக" என்று அவை யமைச்சர் முதலியோர் யாவரும் வியக்கக் கூறியது. அசரீரி வாக்கின்படியே அரசன் அவனுக்கு முடிசூட்டி நில்வுலகாள நியமிக்க இவனும் புகழ் நிலவப் பூமியைப் பரிபாலித்து வந்தான். இவ்வாறு இவன் வாழும் காலத்தில் ஒரு நாள் பல இடைக்குல மாந்தர் அரசன் திருமுன்பு எய்தி "அரசே! உமது ஆணையினால் சோலை சூழ்ந்த வேங்கட மலையில் நாங்கள் ஆநிரையை மேய்த்து வாழ்வோர்: சமுகத்துக்குத் தவறுதல் இன்றிப் பால்குடங்களைக் கொண்டு வரும் வழியில் ஒரு புற்றுண்டு: அங்கு நாள் தோறும் அக்குடங்கள் எல்லாம் முறை முறையாக இரண்டாய்ப் பிளந்து விழுகின்றன. இந்த அதிசயத்தைத் தெரிவிக்க வந்தோம்" என்றார்கள்: இதைக் கேட்ட அரசன் வியப்புற்றான்; அன்று இரவில் ஒரு கனவும் கண்டான். ஆதலின் விடியற் காலையில் தன் சபாமண்டபம் அடைந்து அமைச்சர்களைக் கூட்டி அமரச் செய்து "அமைச்சர்களே" யான் இரவில் ஒரு கனாக் கண்டேன்: அது ஆவது கரிய மேகம் போன்ற மேனியில் மின்னொளி போன்ற பெண்ணுருவுடனும் வில்லுடனும் தாமரைச் செங்கண்ணனாய்ப் பொன்னாடை புனைந்த பரமபுருடனாய் ஒருவன் என்முன் தோன்றி நிற்க, நீர் யாவர்? இங்கு அடைந்த காரியம் என்ன? என்று யான் வினவினேன்: அவன் 'திருமலைமேல் வைகும் சீநிவாசப்பெருமான் என்னை நோக்கி உன்னை இப்பொழுதே அழைத்து வரப் பணித்தான்' என்றான். நானும் உடல் பூரித்து உள் மகிழ்ந்து சேடகிரிக்கு அவனுடன் சென்றேன். அங்கு ஒளிமிக்க விமானத்தின்கண் 'திருமகள் நிலமகள் நீளையோடு சதுர்ப்புயமும், சக்கர சங்கமும், மகரக் குழையும், துளவ மாலையும் விளங்கச் சூரியர் ஆயிரவர் உதயஞ் செய்தது ஒப்ப இறைவன் தோற்றம் கண்டு இதயம் உருகி இறைஞ்சினேன்' என்றான். மந்திரிகள் அரசன் வாய்மொழி கேட்டு, "அத்திருமலைமேல் ஒரு புற்றின்கண் இறைவன் மேவி

அமர்ந்துள்ளான்: அப்புற்றினைப் பாலால் திருமஞ்சனம் செய்து கரைத்தால் அவன் வெளிப்பட்டுத் திருவருள் பாலிப்பன்" என்றார்கள். அச்சமயத்தில் ஒரு வேட்டுவன் அரசனை அடைந்து "அரசே: திருமலைமேல் நத்தை விதையைத் தேடி யெடுத்து இடித்து மாவை நாள்தோறும் மனைவி மக்கள் சுற்றம் எல்லாம் உண்டு வாழ்கின்றோம். என் வீட்டை நாள்தோறும் ஓர் ஆண் வெண் பன்றி அடைந்து அதனைத் தின்று விட்டு விரைவில் போய் விடுகின்றது. என் புதல்வனைக் காவல் வைத்து வேட்டைமேல் சென்று மீளுகின்ற ஒரு நாளில், அம்மாவை வெண்ணெயொடு கலந்து உண்டு கொண்டிருந்த என் சிறுவனை நோக்கி, "அடா! ஆதி பகவான் உவப்ப அமுது செய்யாது உண்ணலை நாங்கள் தவிர்ந்துள்ளோம்; நீ அதனை அறிந்தும் நீ அவனுக்கு அமுது செய்யாது உண்கின்றாய்" என்று சினந்து வாள் ஓச்சி வெட்ட அணுகுங்காலை ஆகாசத்தில் இடியொலி போல "மகனைக் கொல்லாதே! சர்வகுணோத்தமன் உன்பால் கிருபையால் நத்த வித்தை யமுது செய்தான்: இவை எல்லாவற்றையும் அரசனிடம் தெரிவிப்பாய்: அவன் கணுக் கண்டுள்ளான்" என்று கூறிற்று என்று வேட்டுவன் சொன்னான். இடையர் கூறியதும், கனவு கண்டதும், மந்திரியர் கூறியதும் உணர்ந்து எல்லோரும் திருமலை சென்று மறுநாள் பால்குடங்களை எல்லாம் அங்குக் கொணருமாறு கட்டளை பிறப்பித்தான். இவ்வாறு நாரதன் பிருகுவுக்குச் சொன்னான் எனச் சூத புராணிகர் கூறினர். இது பிரமாண்ட புராண வரலாறு.

## 9. தொண்டைமான் சக்கரவர்த்தி திருப்பணி உற்சவம் நடத்திய அத்தியாயம்.

பின்னர் நாரதர் பிருகுவுக்குக் கூறத் தொடங்கினர்: தொண்டைமானுக்கு அந்த வெண்பன்றி செல்லும் இடத்தை வேடுவன் சொல்ல அதனைக் காண எங்கும் தேடிச் செல்லும் போது புன்கம் விதையை உண்ணும் அப்பன்றியைக் கண்டு வியப்புற்று நோக்கும் சமயத்தில் அது ஒரு புற்றுக்குள் நுழைய வேட்டுவன் அரசனைப் பார்த்து இரணியாட்சன் முன்பு கடலுள் பூமியைப் பெயர்த்துச் செல்லுங்கால் அவன் உடலைக் கிழித்து இப்பூமியைத் தாங்கிக் கொண்டு வந்த

ஆண் பன்றி தான் இது: ஐயமில்லை: இப்போது இப்புற்றினைத் தோண்டி எறிந்தால் அப்பரமன் வெளிப்படுவான் என்று சொல்ல, அரசன் கேட்டு உன் மொழிப்படி செய்யின் பிழைபாடு ஆகும் என்று கூறி நீங்கிப் பத்திமையுடன் இடையர்கள் கொண்டு வந்த பாலினால் அப்பெரிய புற்றைக் கரைத்த அளவில், மிக்க ஒளிவாய்ந்த அற்புத மான விமானத்தைக் கண்டு கைதொழுது பத்தியொடு நிற்க அந்த விமானத்தின் இடையில் நித்தமூலப் பாஞ்சுடராகிய நின்மலனின் திருமார்பு தோன்ற அவ்வாரக மூர்த்தியைத் தரிசித்து அஞ்சலி செய்து துதித்து ஆனந்தக் கடலுள் நின்றான். அரசனை வராக மூர்த்தி திருக்கண்ணால் நோக்கி 'அரசனே' எமக்குத் தெற்குப் பாகத்தில் சாமி புட்கரிணி தீர்த்தத்தின் மேற்குப் பாகத்தில் அமைந்த மணி விமானத்தில் திருப்புளிய மரத்தின் கீழாகத் திருமகள் திரு மார்பத்தில் இலகத் தன் இரு முழந்தாள்கள்வரை புற்று வளர்ந் திருக்கச் சீநிவாசன் எழுந்தருளி யிருக்கிறான். நிமித்தம் யாது எனின், பரமபதத்தில் ஆர்த்த சப்தத்துக்கு உவந்து திருச்செவி கொடுத்துப் பாற்கடலில் துயின்று சராசரங்கள் புரியும் பவத்தொடர் பைத் தொலைத்து இகபர நலங்கள் தருதற்கு என்று இத்தலத்தில் அடைந்து உள்ளான்: ஆகையால் அவனை அடைந்து அஞ்சலி செய்து ஆங்குத் திருப்பணிகள் புரிந்து புட்கரிணி மேற்சார்பில் சீநிவாசன் கோயிலுக்கு வடக்கு எனக்குத் திருக்கோயில் அமைத்து நாள்தோறும் ஆராதனைகள் செய்வாயாக என்று கூறி மறைந்தருளி னான். இவற்றைக் கேட்ட அரசன் அந்தத் திருப்புளிய மரத்தின் கீழ் எழுந்தருளிய சீநிவாசனைப் பாலால் திருமஞ்சனம் செய்யப் புற்றினின்று அப்பெருமான் வெளியாகிக் காட்சி ஈந்தருளினான். அரசன் உள்ளம் குழைந்து சீநிவாசனைப் பரவி நின்றான். அப்போது இறைவன் அரசனை நோக்கி உனக்கு உரிய வரம் கேட்க என, அரசன் மாதவரும் காண அரியது ஆகிய இத்திரு வடிவத்தை நாட்டில் உள்ளோர் யாவரும் தொழும்படி இங்கு என்றும் இருக்க வேண்டும் என்று இறைஞ்சினான். சீநிவாச மூர்த்தியும் "யாம் இந்தத் திருமலைமேல் என்றும் உறைவோம். உன்னைப்போல் பத்தி புரிவோர் இல்லை. எனக்கும் வராக மூர்த்திக்கும் திருக்கோயில் திருப்பணிகள் நடத்தி மூன்று காலமும் ஆராதன முறைகள் தவறாமல் சான்றோ ரைக் கொண்டு செய்க" என்று ஆணையிட்டருள, அரசன் அவ்வாறே

மூன்று காலத்திலும் வைபவத்தோடு நடத்தி நித்திய விழா, பக்ஷ விழா, மாத விழா, முதலியவும் நிகழ்த்திப் பிரம்மோற்சவத்தைத் திருவேங்கட நாதனுக்குச் செய்விப்பதற்குக் கன்னி மாதத்தில் கொடியேற்றம் செய்ய விண்ணவரும் மண்ணவரும் வியந்து நயந்து கொண்டாடினர். இத்திருவிழா ஒன்பதாம் நாளாகிய திருவோணத்தில் சாமி புட்கரிணியில் திருவாழியாழ்வான் தீர்த்தம் ஆடிய பின் அன்று இரவில் கொடி யிறக்கம் செய்து தீப தூப நைவேத்தியம் முடித்துப் பன்னிரண்டு திருவாராதனத்துடன் புட்ப யாகமும் விதியால் நடத்தி முடித்தான்—இறைவனும் ஆனந்த நிலைய விமானத்தில் எழுந்தருளித் தொழுவார்க்கு எல்லாம் திருவருள் சுரந்து நின்றான். அரசனும் தன் அரண்மனை சென்றான்.

## 10. கிருஷ்ண சர்மாவின் சரித்திரம் உரைத்த அத்தியாயம்.

நாரத முனிவர் மேலும் பிருகுவுக்கு உரைக்கத் தொடங்கினர்: திருவேங்கடத்து இறைவனுக்குப் பிரம்மோற்சவத்தை நிறைவேற்றிய அரசன் உலகில் அறங்கள் விளங்க அரசு புரியும் காலத்தில் ஒரு வேதியன் தன் மனைவியுடன் தன் முன்வர அவன் வரலாற்றை அரசன் வினவினன். அந்தணனும் " நான் தென்திசையில் உள்ள சக்ரபுரியில் கூர்மன் என்னும் பிராம்மணன் புதல்வன். என் பெயர் கிருஷ்ண சர்மா : என் மனையாள் பெயர் சுதாமணி. மூன்று மாதக் குழந்தையைக் கையில் ஏந்திக்கொண்டு தீர்த்த யாத்திரையாகப் போந்த என்னுடன் வந்தவள் நடத்தல் ஆற்றாது வருந்துகின்றாள் : காசி யாத்திரை செல்லும் நான் மீண்டு வரும்வரை அவர்களை இங்கு உமது காப்பில் வைத்துச் செல்லுகிறேன். திரும்பி வந்து அழைத்துச் செல்லுகிறேன் " என்றான். அரசன் உடன்பட்ட அளவில் அந்தணன் யாத்திரைக்குச் சென்றான். அரசன் அப்பார்ப்பினியையும் குழந்தையையும் ஒரு வீட்டில் நன்றாயிருக்கச் செய்து ஆறு மாத காலத்துக்கு உரிய உணவுப் பொருளும் பிறவும் திரட்டிக் கொடுத்து அவளை நோக்கி 'அம்மையே இந்த இல்லத்தை விட்டு வெளியே போகாமல் நாள்தொறும் வேண்டுவ உண்டு தங்குக' என்று கூறி

அம்மனையின் புறக்கதவைத் தாளிட்டு முத்திரையிட்டுத் தன் கோயில் சென்று ஆட்சி முறையில் மனம் செலுத்தியிருந்தான். கிருஷ்ண சன்மன் கங்கையாடித் திரும்பி அரசனிடம் வந்து 'அரசே! என் மனையாட்டியையும் பிள்ளையையும் உம்மிடம் அடைக்கலப் படுத்திக் கங்கையாடிக் கயையில் சிராத்தம் புரிந்து முன் சொன்னபடித் திரும்பி வந்தேன். என் மனைவியும் மகனும் எங்குள்ளார்கள்' என்று வினவினன். அரசனும் திடுக்கிட்டு அடைக்கலம் கொண்ட அவர்களைப்பற்றி இத்துணைக் காலம் கருதாமல் இருந்து விட்டோமே என்று அஞ்சி அருகு நின்ற பணியாளனிடம் திறவுகோலைத் கொடுத்து அம்மனையில் சென்று பார்த்து வா அனுப்பினன். அவன் கணத்தில் திரும்பி வந்து தாயும் சேயும் இறந்து விட்டார்கள் என்று தெரிவிக்க, அரசன் ஐயோ! பிரம்மகுல ஸ்திரீ ஹத்தி சிசு ஹத்தி தோஷங்கள் என்னைப் பற்றினவே என்று துயர் கொண்டு வேங்கடத்து இறைவனை மனத்தில் தியானித்து எதிரில் நின்ற வேதியனை நோக்கி, "மறையோரே! உம்மனைவி குழந்தையோடு என் ஆணையினால் வேங்கடத்து இறைவனைத் தொழுதற்குச் சென்றுள்ளாள்: நாளை நீ இங்கு வந்து கூட்டிச் செல்வீர்" என்று கூறிவிட்டு நொந்து திருமலைமேல் ஓடிச் சென்று இறைவன் அடியிணைப்பற்றி இறைஞ்சிப் பலவாய்த் துதித்து, "ஈசனே! கொடும் பாவம் செய்து வந்தேன். இப்போது அது விலக அருள் செய்க. ஒரு மறையோன் கங்கையாடித் திரும்ப வேண்டும்: அதுவரை என் மனைவியையும் குழந்தையையும் உன்பால் ஒப்புவித்தேன்: என்று விடுத்துச் செல்ல, அவர்களுக்கு ஒரு தனி விடுதி அமைத்து இருக்கச் செய்தேன். ஆறுமாத காலத்துக்கு வேண்டிய உணவையும் சித்தம் செய்தேன். பின் அரச பார நோக்கத்தினால் அவர்களை மறந்து விட்டேன். பின்பு கங்கையாடி மீண்ட வேதியன் வந்து அவர்களை அனுப்புமாறு வேண்ட, யான் ஏவலாளை யனுப்பி அவர்களைப் பார்த்து வரச் செய்தேன். அவன் அவர்கள் இறந்து பட்டார்கள் என்று உரைக்க, யான் துயர்கொண்டு அம்மறையவனுக்கு உம் மனைவியும் மகவும் வேங்கடத்தானைத் தொழுதற்குச் சென்றுள்ளனர்: நாளை வருவர்: உடன்கொண்டு செல்க: என்று சொல்லி வந்தேன்: என் பாவம் அகலுமாறும், அவர்கள் உயிர் பெறுமாறும் அருள்க" என்று வாய் புதைத்து நின்றான். இறைவன் அரசனைக் கடைக்கணித்து, "அம்மறையோன் கங்கையாடச் செல்லுங்கால்

என்னைத் தொழுது விடை கொண்டனன் : அவன் மனைவி என்பால் மிக்க பத்திமை உடையவள் : ஆதலால் அவர்கள் உயிர் பெறச் செய் வோம்" என்று சொல்லிச் சேனை முதலியை அழைத்து ஈசான திசையில் பாவம் எல்லாம் நீக்கி ஞானத்தை அருள்கின்ற 'சோரம்' என்ற தீர்த்தம் உண்டு. அதன் நீரை முகந்து கொண்டு வந்து அவள் மேனியிலும் அவள் மகவின் மேனியிலும் தெளிப்பின் அவர்கள் உயிர் பெறுவர்" என்று ஆணையிட அச்சேனநாதரும் அவ்விதமே செய்து உயிர்ப்பித்து அருளினர். அப்போது திருவேங்கடத்து இறைவன் அந்தணனை அருகு அழைத்து உன் வரம் யாது என, "இறைவனே! உனது திருவடிப் பத்திமையே என்றும் தழைக்க அருள்க" என்ன அதனை அருளினன். விண்ணவர் யாவரும் போற் றினர். அப்போது இறைவன் சோழனை நோக்கி "உனக்கு நிகர் ஒருவரும் இல்லை. இம்மறையவன் சிறு தெய்வ வழிபாடு செய்தது போல் என்னையும் பலநாளாய் நினைத்து வந்தான். இனி வரும் பிறப் பில் வேதாந்தத்தினைத் தெளிந்து புனிதனாய்ப் பரந்தாமம் அடை வான்" என்று அருளிய அளவில் அரசன் அந்தணனுக்கு நன் கொடைகள் செய்து அவர்களைச் செல்ல விடுத்தான். அரசனும் இறைவனை வணங்கி விடைகொண்டு பத்தி செய்திருந்தான். சௌன காதியருக்கு அமுதென இதனைச் சூத முனிவர் உரைத்தருளினர். இது பிரம்மாண்ட புராணப் பொருள்.

## 11. மேருபுத்திரன் என்பதை விளங்க உரைத்த அத்தியாயம்.

சூரிய வமிசத்து அரசன் ஆகிய திலீப சக்கரவர்த்தியின் அரண் மனை நோக்கித் துருவாச முனிவர் வருதலும் அவரை அவன் எதிர் கொண்டு உபசரித்து ஆசனத்தில் அமரச் செய்து தொழுது "சேடா சல தீர்த்த மான்மியத்தையும் திருமகள் நாயகன் அங்கு எழுந் தருளியதையும் எமக்கு அருளிச் செய்க" என்று வேண்டினன். அப்போது அம்முனிவர் திருவேங்கடமலையானது சுவர்ணமுகி நதிக் கரைக்கு ஐந்து யோசனை நீங்கி ஐம்பது யோசனை நீளம் உடைய தாய் மேருமலையின் மகவாய் ஆதிசேடனோடு அடைந்த காரணத்

தால் அதனைச் சேஷாத்திரி என்று வழங்குவர் என்றார். அவ்வரலாற்றைக் கூறுக எனக் கேட்ட அரசனுக்கு மேலும் கூறுவார்: "ஆதிசேடன் ஒரு காலத்தில் எண்ணில் கோடி அண்டங்களைத் தன் வயிற்றுள் வைத்துக் கொண்டான். இறைவனுக்குப் படுக்கை யானேம் என்றும் உலகு எல்லாம் சுமக்கின்றேம் என்றும் தேவர் யாவரும் தன் சத்தியில் குறைந்தவர் என்றும் கருவம் அடைந்தான். அப்போது வாயு தேவன் திருப்பாற் கடலில் விளங்கும் திருமகள் கேள்வனைப் பணிதற்கு அணுகும் காலையில் அவ்விறைவன் திருமகள் முதலிய தேவியருடன் பிரமானந்த வனத்தில் தங்கி யருளும் தருணம் ஆனபடியால் ஆதிசேடன் நேர் நின்று "நீ இங்கு வருதல் கூடாது" என வாயு தேவனைத் தடுக்க வாயு முனிந்து "எங்கும் உலவும் என்னைத் தடுக்கும் பூரண சக்தனே நீ" என்று கேட்டான், ஆதிசேடன் "நான் திருமாலுக்குப் படுக்கை ஆகவும் இருக்கை ஆகவும் குடை ஆகவும் அடி நிலைகள் ஆகவும் இருந்து நாள்தொறும் பணிகள் இயற்றி அணுக்கத் தொண்டனாய்ப் பிரியாது உறைகின்றேன்: நீயும் என்னைப்போல் அடியவனாய்ச் சத்திமானாயின் என் முன்னர் வருக" என்று கூறிய அளவில் வாயு நகைத்து "நீ காவலில் பூசை என்று ஒளிந்து வசிப்பவன்: யானோ யானை போல எங்கும் எவ்வுயிர்க்கும் ஆதாரவாகத் திரிபவன். பலம், ஞானம், விஷ்ணுபத்தி இவற்றில் எனக்குச் சரி சொல்ல யார் உளர்" என்று கூறினன். ஆதிசேடன் "நீ தற்புகழ்தல் தக்கது ஆகுமோ: பிறர் அல்லவா புகழ வேண்டும்: வீண் பிதற்று வேண்டா: இருவர் வீரமும் விளங்கக் காணலாம்" என்று சினந்து உரைத்தான். அப்போது திருமகள் கேள்வன் அங்கு வருதலும் அவ்விருவர்க்கும் நிகழ்ந்த பகைமையைக் கூறத் திருச்செவி யேற்றுச் சேடன் திறம் தெரிந்து மமதை ஒழிக்கவும் லீலை காரணம் ஆகவும் அவனை நோக்கி "உனக்குச் சக்தி ஏது: வாயு எவ்வுயிர்க்கும் ஜீவாதாரன்: வலியோன்: எனக்கு அந்தரங்கன்: நீ என்னைத் தாங்குபவன் என்றும் பூமியைத் தாங்குவோன் என்றும் பல எண்ணிக் களிக்க வேண்டா: எவ்வுலகினையும் நானே ஆமையாகித் தாங்குகின்றேன்" என்று கூறியருளினன். இது கேட்டு வருந்திய ஆதிசேடன் திருமாலின் அடிகளை வணங்கி, "எங்கள் வெற்றியைத் தேவரீர் காண வேண்டும்: யான் மேரு புத்திரனைச் சுற்றிக் கட்டிச் சேர்க்கிறேன். இவ்வாயு அதி

பலம் உடையவனுயின் அதனை எடுக்க" என்று உரைக்க இறைவன் சமிக்கை யறிந்த வாயு சேடனை நோக்கி 'அங்ஙனமே செய்க' என்ருன். ஆதிசேடனுட் அம் மலையைத் தன் உடலால் பிணித்துத் தீவிழியோடு வாயுவைப் பார்த்து "உன்னுடைய வலிமை யெல்லாம் கொண்டு இம்மலையைத் தாக்குக" என்ருன். வாயு தேவனும் திருமால் அருளாலே ஆதிசேடனோடு அம்மலையைப் பெயர்த்து ஒன்றரை இலக்கம் யோசனைக்கு அப்பால் தக்கணத்தில் சுவர்ணமுகி நதிக்கரையில் உள்ள சோலையில் வீழ்த்தினுன். மேரு தன் புத்திரனுக்கு உயர்ச்சி வாய்ந்தது என்று மகிழ்ந்தான். வாயுவும் மகிழ்ச்சியுற்ருன். ஆதிசேடனும் இறைவன் ஆணையால் அம்மலையுடனே சேர்ந்து சேடகிரியாய்க் கிடந்தான்" என்று உரைத்தார். சூத முனிவர் சௌனகர்க்கு உரைத்த இப்பொருள் பிரமாண்டத்துள் உள்ளது.

## 12. சாமி புட்கரிணியின் பெருமை உரைத்த அத்தியாயம்.

திலீபன் பின்னரும் திருவேங்கட மலைமேல் இறைவன் எழுந்தருளிய காரணத்தைக் கேட்கத் துருவாசர் சொல்லத் தொடங்கினுர். ஆதிசேடன் இறைவனுல் கருவம் அடங்கிச் சாந்தனுகித் திருமலையின் வடபாகத்தில் உள்ள சிகரம் ஒன்றில் தீர்த்தங்களுக்கு எல்லாம் சிறந்த தீர்த்தமாகிக் கோனேரி, சாமி புட்கரிணி என்று இரு திருப்பெயரால் விளங்குவது ஆகிய தீர்த்தத்தின் வாயு திக்கில் உள்ள நாக தீர்த்தம் என்பதன் கரையை அடைந்து திருமகள் கேள்வனை நினைந்து எண்ணிலாத் தேவ வருடங்கள் தவம் புரிந்தான். அத்தவத்திற்கு இரங்கி ஆதிசேடன் எதிரில் திருமால் தோன்றி 'உனக்கு யாது வேண்டும்' என்ன, "ஐயனே, அடியேன் மமதையால் தீமை புரிந்து அபராதியானேன்: யான் செய்த பிழையைப் பொறுத்து மலையாகி நின்ற என்மீது தேவரீர் எழுந்தருளிச் சகத்துள்ளோர்க்கு எல்லாம் காட்சி தந்தருள வேண்டும்" என்று வேண்டினுன். இறைவன் "யாம் முன்பே உலகில் எழுந்தருளத் தக்க சிறந்த இடம் யாது என நாரத முனிவனை வினுவி உன்னை ஆங்கு மலையுருப் பெற

நியமித்தோம். அப்படிச் சொன்ன ஆணை நிறைவேறுதற்கே இவ்வாறு நேர்ந்த செயல் ஆகும். உன் பிழைகளைப் பொறுத்தோம். திருவினோடும் நாம் என்றும் உறைவோம்' என்று கூறித் திருக்கோனேரிக் கரையில் சீநிவாசமூர்த்தி வீற்றிருக்கின்றான் என்று துருவாசர் முடித்தார். திலீபன் முனிவரை நோக்கி "அம் மலையில் பல தீர்த்தங்கள் இருக்கவும் திருக்கோனேரித் தீர்த்தத்தின் கரையில் நின்றதற்குக் காரணம் யாது" என, முனிவர் மேலும் சொல்லத் தொடங்கினார். "வாணிதேவி முன்பு தீர்த்தங்கள் எவற்றுக்கும் மேலாம் தீர்த்தமாக எண்ணம் கொண்டு பிரம ஆவர்த்தனம் என்ற தலத்தில் ஒரு நதி வடிவு கொண்டிருந்தாள்: அந் நதியின் அருகே ஒரு நாள் புலத்தியன் வந்தான். சரசுவதி அவனை மைந்தன் முறையினால் உபசரியாது இருந்தாள். அதனால் சினம் கொண்ட அப்புலத்தியன் நீ நதிகளுக்கு எல்லாம் உயர்வு அடையலாம் என எண்ணினாய்: அஃது உன்னால் அடைவது இல்லை: திருமாலின் திருவடியில் வரும் திரிபதகை தான் சிறந்தது என எவரும் கூறுவர்" என்று கடுமையாய்க் கூறினான். அப்போது சரசுவதி கோபித்து "அரிக்கு எதிரிகள் ஆகிய இராக்கதர் குலத்தில் கொடியனாய்ப் பிறப்பாயாக" என்று சபித்தாள். அப்போது புலத்தியன் மனம் வாடி "அன்னையே! இச்சாபம் என்று நீங்குவது" எனப் பணிய அவள் "நீ சில காலம் தீமை புரிந்து வாழ்ந்து பின் இறைவன் இராமனாய் அவதரித்து வருங்கால் அவன் தொண்டனெனச் சொல்ல விபீஷணன் ஆகப் பிறந்து சிரஞ்சீவி பதம் பெறுவாய்" என்று அருள்செய்து பின்னரும் இறைவனை நோக்கித் தவம்புரிந்தாள். அப்போது இறைவன் கருடவாகனனாய் அவள் முன் தோன்றக் கண்டு வணங்கி "பரமனே! யான் சர்வ நதிக்கும் சாமிநதி யாகுமாறு அருள்க" என்று வேண்டினாள். அதற்கு இறைவன் "நீ நதி யுருக்கொண்டு தவம் செய்யுங்கால் ஒரு மறையவன் இட்ட சாபம் அடைந்தாய். ஆதலால் நீ திருவேங்கட மலையின்மேல் புட்கரிணி உருவமாய் எம்மை விருப்பத்தோடு பணிந்து உறைக. யாம் தக்கணத்தில் திருமகளோடு உறைவோம். மூன்று உலகிலும் உள்ள முப்பத்து முக்கோடி தீர்த்தங்களும் அங்கு எம் முன் தோன்றித் தம் பாவங்கள் தொலைத்திடும் நிமித்தம் யாசிக்கும். அவற்றின் பாவங்கள் தொலையும்படித் தனுர்மாதத்தில் சுக்லபக்ஷத் துவாதசி நாளில் சூரியோதய காலத்தில் உன்பால் முழு

கிடச் செய்து அதனுல் உனக்குத் தீர்த்தங்களின் அரசு என உயர்ந்த அபிடேகம் இயற்றுவிப்போம் ; அது முதல் சாமி புட்கரிணி எனப் பெயர் பெற்று உயர்வாய்" என்று அருளிச்செய்து பிராட்டியின் புருடகாரத்தால் தளிகை செய்து அளிக்கும் வகுளமாலிகை என் பாளைச் சரசுவதியாகிய பொய்கைக்குப் பூமி ·ரூபமாம்படி ஆணையிட்டருளினுன். அவ்வாறே வகுளமாலிகை பூமியாகவும் சரசுவதி பொய்கையாகவும் அமைந்தனர். அதன் தென் கரையில் இறைவன் திருமகளோடு எழுந்தருளினுன். இது பிரமாண்ட புராணப் பொருள்.

## 13. வாயு, அகத்தியன், சங்கனுக்கு அருள்புரிந்த அத்தியாயம்.

திலீப சக்கரவர்த்தி மேலும் துருவாசரை நோக்கி வேங்கட மலையின் சிறப்புகளைச் சொல்லுக என்று வேண்ட முனிவர் கூறுவாராயினர். வாயுதேவன் திருமாலின் திருமேனியை ஒக்கும் மேனி பெறுதலை விரும்பி வேங்கட மலையை அடைந்து தேவ வருடம் ஆயிரம் திருமாலை நினைந்து அருந்தவம் புரிதலும் இறைவன் இலக்குமியுடன் எதிர் தோன்றி "ஒளி உடம்பைப் பெறுவாய்: குமாரதாரிகை என்ற தீர்த்தத்தினிடத்தில் என்னைத் தியான யோகத்தால் பூசிப்பாயாக." என்று கூறி அகன்று அத்தீர்த்தத்தினிடத்தில் அருந்தவத்தைச் செய்து கொண்டிருந்த சுப்பிரமணியனுக்குத் தபோபதேசம் செய்து நீங்கினர். பிரமன், அரன் முதலோர் இவ்வாறு ஒளி பெற்று இலங்கிய வாயுவைக் கண்டு அரி பத்திமையால் இவ்வாறு ஆயிற்று என்று உணர்ந்து அம்மலையில் அருந் தவம் புரிந்து இவ்வித சித்தி பெற்றனர் என்று திலீபற்கு மொழிந்தார். மேலும், அகத்திய முனிவர் திருமகள் கேள்வனைக் காண விரும்பிப் பொதிய மலையில் தவம் புரியும் நாளில் பிரமன் எதிர் தோன்றி வேங்கட மலையில் தவம் செய்தால் சித்தியாம் என்று கூறித் தன்னுலகம் சென்றனன். அகத்தியன் அது கேட்டுத் திருமலையை அடைந்து தேவ வருடம் ஆயிரம் அருந்தவம் புரிந்தபோது ஆகாச வாணி அவனை நோக்கி, இத்திருமலையில் ஆயிரத்தெட்டுத் தீர்த்தங்கள் உள்ளன. அவைகளில் மூல மந்திரத்தை உச்சரித்து முழுகு

தலோடு இம்மலையின் மகிமையைக் கூறி வலம் வந்து தியானஞ் செய்தால் திருமகள் நாதனைக் கண்ணிற் காணலாம் என்று உரைத்தாள். அச்சொற்படி அகத்திய முனிவன் செய்து சாமி புட்கரிணியின் அருகில் அரியைச் சிந்தித்து இருந்தபோது இறைவன் திருமகள் சங்க சக்கர விலாசனாய்க் காட்சி கொடுத்தனன். முனிவனும் தரிசித்து ஆனந்தித்துத் துதித்த அளவில் இறைவன் வரம் அளித்தனன். அகத்தியனும் அன்று தொட்டு அரியை இடைவிடாது தியானித்திருந்தான் என்று துருவாசர் கூறினர். மேலும், "திலீப! சூரிய வமிசத்தில் தோன்றிய சங்கன் என்ற அரசன் ஒருநாள் வசிட்ட முனிவரை அடைந்து வணங்கி இப்பூமியில் எவ்விடத்தில் தவசு புரிந்தால் திருமகள் நாதன் தோன்றி வரம் தந்தருளுவான் என்று கேட்க, அகத்தியன் முதலாகிய தவசியர் சுவர்ணமுகி நதியின் கரையிலுள்ள சேடாசலத்தை யடைந்து ஐம்புலன் அடக்கித் தவம் புரிந்து திருமகள் நாதன் அருள் பெற்று உய்ந்தார்கள். அம்மலையின் அடிவாரத்தே சிவன் அமர்ந்திருக்க அதன் முடிமிசைத் திருமால் எழுந்தருளித் தேவர்க்கும் யாவர்க்கும் சேவை தருதலினால் நிகர் இன்றி இருப்பது. இருபத்தெட்டாம் கலியுகத்தில் வாயு தேவன் தவம் புரிந்த பன்னசாலையில் திருமால் கிழவடிவனாய் அடைந்து உன் தவத்தை அகத்தியன் முதலோர் வியந்து கொண்டனர் என்று சொல்ல வாயு அக்கிழ வேதியனை நயந்து என் பன்னசாலையில் நீர் வீற்றிருந்து அடியேன் செய்யும் சாதுர்மாசியத்தை நிறைவேற்றி உமது இடத்திற்கு எழுந்தருள்க என்று வேண்டிக் கொண்டனன். உடன்பட்ட கிழ வேதியன் ஆகிய திருமால் வாயு தேவனுக்கு உபகரித்தனன் என்று கூறி மேலும் வசிட்ட முனிவர் இரவிகுல சங்க ராசனுக்குச் சொல்லுவாராகி, பரம தீர்த்தங்கள் அடைந்த சிறப்பும், தாபகிரியின் தெற்கு முடியில் உள்ள சக்கர தீர்த்தத்தில் அகத்திய முனிவர் பலர் சூழக் கற்பாந்தத்தில் அடைவர் என்பதும் சுக முனிவர் எனக்குச் சொன்னார்? ஆதலின் அவ்வகத்தியனைப் போலத் திருமலை வலம் வந்து ஞானயோகம் செய்வாயானால் திருமால் அருள் செய்வான்" என்று சொல்லச் சங்கன் சேடாசலத்தை அடைந்து யோகம் புரிந்தான். அப்போது தோன்றிய திருமகள் கேள்வனை வணங்கி "இம் மலைமீது சூரிய சந்திரர் உள்ளவரைத் திருமகளோடு வீற்றிருந்து உலகினுக்குக் காட்சி யீந்தருள்க" என்று வேண்டலும்,

திருமால், " யான் தலங்களிலே பிரமன் முதலியோர் வணங்க அருச்சனைக்கு உரிய உரு அடைவேன் : ஆதலின் நீ கல், செங்கல், மரம் என்பவற்றுள் ஏதேனும் கொண்டு என் உரு அமைத்து ஒரு விமானத்தைச் செய்வித்து அதற்குச் சேர்த்து ஆராதனை புரிந்து வணங்கினால் உன் சிந்தனைப்படியே திருமகளோடு அமர்ந்து காட்சி கொடுப்பேன் : உனக்குப் பரமபதமும் ஈவேன் என்று அருளி மறைந்தனன். சங்கனும் அவ்வாறே திருவுரு இயற்றிப் பூசித்துப் பரமபதம் பெற்றான் " என்று திலீபனுக்குத் துருவாசர் உரைத்தார் எனச் சூத முனிவர் முடித்தார்.

## 14. தீர்த்த மகிமை உரைத்த அத்தியாயம்.

திலீப சக்கரவர்த்தி துருவாசரை நோக்கிச் சேஷாசலத்தின் மீது பொருந்தியுள்ள புண்ணிய தீர்த்த மகிமைகளை எனக்குச் சொல்லுக என்று வேண்ட முனிவர் கூறுவார் : அம் மலையில் 66 கோடி தீர்த்தங்கள் உண்டு ; அவற்றுள் 1008 விளங்கியவை. அவற்றுள் சிறந்தவை 216 ஆகும். அத்தீர்த்தங்களுள் சகல புண்ணியமும் தருபவை 108 ; பக்தி வைராக்கியம் தருபவை 68 : விபவம் தருபவை 6 : முக்தி சேர்ப்பவை 26 என்று மறைப்பொருள் தேர்ந்த பெரியோர் சொல்லுவார்கள். இத்தீர்த்தங்களுள் மிக்க மேன்மை விளங்கியவை ஏழு : அவற்றின் பெருமை என்னென்றால் 66 கோடியாகச் சொன்ன எல்லாத் தீர்த்தங்களும் ஆண்டுக்கு ஒருமுறை இத் தீர்த்தங்களில் வந்து சேரும். அக் காலம் யாது என்றால் மாசிமாசம் பௌர்ணமி கூடிய மக நாளில் சர்வ தீர்த்தங்களும் குமாரதாரிகை தீர்த்தத்தில் சேரும். அதில் முழுகுவோர் இராஜசூய மகாயாக பலன் அடைவார்கள். பங்குனி மாசம் பூரணை கூடிய உத்தர நாளில் தும்புரு தீர்த்தத்தில் உதய காலத்தில் முன் சொன்ன எல்லாத் தீர்த்தங்களும் சேர்கின்றன. ஆதலால் அதில் முழுகுவோர் விரும்பிய எல்லாம் அடைந்து பரமபதம் பெறுவர் : தை மாசத்தில் பூரணைப் பூச நாளில் கிருஷ்ண தீர்த்தத்தில் சகல தீர்த்தமும் சேரும் ; இதில் குளித்தோர் இகபர சுகம் அடைவர் : சித்திரை மாதத்தில் பூரணை சேரும் சித்திரை நாளில் சர்வ தீர்த்தங்களும் ஆகாச கங்கையைச் சேரும் ;

இதில் நீராடுவோர் பரகதி பெறுவார். வைகாசி மாதம் சுக்கிலபக்ஷம் துவாதசி திதி ஞாயிற்றுக்கிழமையினும், கிருஷ்ணபக்ஷம் துவாதசி திதி செவ்வாய்க்கிழமையினும் கங்கை முதலாய புண்ணிய தீர்த்தங்கள் எல்லாம் பாண்டு தீர்த்தத்தில் வந்து சேருவதனால் அதில் நீராடியவர்கள் இருபத்தொரு சன்மங்களிலும் உண்டாய துயர் நீங்கிப் பரமபதம் பெறுவர். ஐப்பசி மாசத்தில் பூருவபக்கம் சப்தமி திதியில் ஞாயிற்றுக்கிழமை உத்திராட நாளிலும் உத்திரட்டாதி நாளோடு வரும் துவாதசி திதியிலும் பாபவிநாச தீர்த்தத்தில் சர்வ தீர்த்தங்களும் வந்து சேரும். அதில் முழுகுவோர் நிலவுலகில் இட்ட காமியம் எல்லாம் பெற்று இறுதியில் திருவைகுந்தம் பெறுவர். மார்கழி மாசம் சுக்கிலபக்ஷம் துவாதசியில் சூரியன் உதயம் ஆதற்கு ஆறு நாழிகை முன்பு தொட்டு உதயமாகி ஆறு நாழிகைக்குள் எல்லாத் தீர்த்தங்களும் சாமி புட்கரிணியில் வந்து சேரும்; அந்தக் காலமே எதனிலும் விசேடம் உடையது. அப்போது அதில் முழுகுவோர் சாத்திரத்தில் சொன்னபடி தூயவருக்கு அன்பொடு தானம் செய்வோராயின் இகத்தில் நலம் எல்லாம் பெற்றுப் பின்பு திருமாலின் பரமபதத்தில் ஆனந்தமுற்று வீற்றிருப்பார்கள். இவ்வாறு திலீபற்குத் துருவாசர் மொழிந்தார். இது பிரமாண்ட புராணப் பொருள்.

## 15. தீர்த்த விவரம் உரைத்த அத்தியாயம்.

திலீபன் துருவாசர் கூறியவை எல்லாம் கேட்டு மேலும் அம்மலைமேல் உள்ள தீர்த்தங்களின் பெயரும் இடமும் அவை தரும் பயன்களும் விரித்துச் சொல்ல வேண்டினன். முனிவர் அத் தீர்த்த நாமங்களைச் சொன்னாலும் கோடி சன்ம பாவங்கள் போக முத்தி உண்டாம் என்று சொல்லித் திருவேங்கடமுடையான் திருக்கோயிலுக்குத் தென் கிழக்குத் திசையில் சக்கர தீர்த்தமும் அதன் மேல்பால் வச்சிர தீர்த்தமும் உள்ளன. அதன் அருகு விசுவசேன தீர்த்தமும் அதன் மேல்பால் பஞ்சாயுத தீர்த்தம், அலாயுத தீர்த்தம், நரசிம்ம தீர்த்தம், அதன் மேல்பால் காசிப தீர்த்தம், அக்நி தீர்த்தம், மன்மத தீர்த்தம், பிரம தீர்த்தம், கௌதம தீர்த்தம், விசுவாமித்திர

தீர்த்தம், பார்க்கவ தீர்த்தம், சைவல தீர்த்தம், தேவ தீர்த்தம், அஷ்டகோண மஹாருஷி தீர்த்தம், அதற்குத் தென் கீழ்த் திசையில் பல தீர்த்தங்களும் உள்ளன. அதற்கு வட கீழ்த் திசையில் வைரவ தீர்த்தம், சேஷ தீர்த்தம், க்ஷேத்ர பாலகர் தீர்த்தம், அதன் மேற்குத் திசையில் பாண்டவ தீர்த்தம், மாருத தீர்த்தம், அஸ்தி தீர்த்தம், மார்க்கண்ட தீர்த்தம், வாலகில்லியர் தீர்த்தம், சர்யாலி தீர்த்தம், சுரகா தீர்த்தம், விஷகா தீர்த்தம், அதற்கு வட கீழ்த் திசையில் இலக்ஷ்மி தீர்த்தம், இதன் அருகில் பல தீர்த்தங்கள் உள்ளன. அவற்றுக்கு வடமேற்குத் திசையில் பல தீர்த்தங்கள் உள்ளன. அதன் வட திசையில் இஷ்ட தீர்த்தம், சுதீக்ஷண தீர்த்தம், சிருங்க தீர்த்தம், வில்வ தீர்த்தம், சதானந்த தீர்த்தம், சர்வ தீர்த்தம், வேணு தீர்த்தம், சபா தீர்த்தம், அதன் வடமேற்கில் சதுமுக தீர்த்தம், இந்திர தீர்த்தம், பாரத்துவாஜ தீர்த்தம், ஆகாச கங்கை, பாராசர தீர்த்தம், குமாரதாரிகை, விபாண்டவ தீர்த்தம், தும்புரு தீர்த்தம், ஜெக தீர்த்தம், இதன் அருகில் நவ தீர்த்தங்கள், தசாவதார தீர்த்தம், சத்தருஷி தீர்த்தம், சேனுபதி தீர்த்தம், அதற்கு மேல்புறம் தெசகோண தீர்த்தம், உத்தமசரசு, மனு தீர்த்தம், நிர்மல தீர்த்தம், ருத்ர தீர்த்தம், வசு தீர்த்தம், பிரம தீர்த்தம், மருத்துவ தீர்த்தம், சானவி தீர்த்தம், வாருண தீர்த்தம், கவுணவ தீர்த்தம், சுக தீர்த்தம், காபேய தீர்த்தம், பாரிபத்ர தீர்த்தம், பௌமாசுர தீர்த்தம், சோம தீர்த்தம், நாரத தீர்த்தம், எம தீர்த்தம், அக்நி தீர்த்தம், பசு தீர்த்தம், யக்ஷ தீர்த்தம், கணேசுவா தீர்த்தம், ஜகஜாட்யஹா தீர்த்தம், விசுவ கல்லோல தீர்த்தம், பிருஹஸ்பதி தீர்த்தம், ரோமருஷி தீர்த்தம், சேனேசுர தீர்த்தம், அஜாமிள தீர்த்தம், கரும தீர்த்தம், அசுவ தீர்த்தம், மந்தரை தீர்த்தம், சுப்பிரமண்ய தீர்த்தம், வாருணி தீர்த்தம், வட தீர்த்தம், வாசுகி தீர்த்தம், விஷ்ணு தீர்த்தம், வயினதேய தீர்த்தம், ரணவிமோசன தீர்த்தம், அகமருஷண தீர்த்தம், அநந்த தீர்த்தம், பர்ஜந்நிய தீர்த்தம், மேக தீர்த்தம், நாராயண தீர்த்தம், கால தீர்த்தம், கோமுக தீர்த்தம், அநிருத்த தீர்த்தம், வாசுதேவ தீர்த்தம், ஆஞ்சனேய தீர்த்தம், சங்கருஷ்ண தீர்த்தம், சுதாகார சரசு, பிதிர் தீர்த்தம், இதிகாச தீர்த்தம், புராண தீர்த்தம், பிரத்யும்ந தீர்த்தம், சுத்த தீர்த்தம், காரண தீர்த்தம் ஆகிய நூற்றெட்டு என்று மேலோர் சொல்லுவார்கள். தக்ஷன் பிள்ளைகள் ஆயிரவர் அத்

திருமலையில் ஐம்புலன் அடக்கித் தவம் செய்யும்போது நாரத முனிவர் சொல்லிய வித்தையாலே நியமித்த நாரத கோணத்தில் நூற்றெட்டு தீர்த்தங்கள் உண்டு: அது அல்லாமல் காசிபர் ஆசிரமம் தொடங்கி அரைக்காத அளவில் அழகு மலிந்து தோன்றும் குமார தாரிகையின் மேற்குப் பாகத்தில் நூற்றெட்டுத் தீர்த்தங்கள் உள்ளன. அவற்றின் பக்கத்தில் ஆயிரம் தீர்த்தங்கள் உள்ளன. இவற்றுள் நீராடுபவர்களுக்குத் தேவர்க்கும் எட்டாச் சித்திகள் கிட்டும். இம் மலையின் தீர்த்தங்களின் சிறப்பு அநந்தம் என்று திலீபனுக்குத் துருவாசர் கூறினர் என்று சூத முனிவர் சௌனகாதியர்க்குச் சொன்னார்.

## 16. தொண்டைமான் சக்கரவர்த்திக்குத் திருவாழி திருச்சங்கு ஈந்த அத்தியாயம்.

திலீப சக்கரவர்த்தி துருவாசரை நோக்கி வேங்கட நாதனுக்கு எப்பெயர் விளங்குகின்றன: எவ்விலக்கணத்துடன் அவன் திருமலைமேல் வானவர் மக்கள் தொழ மகிழ்ந்தருள்கின்றான்: எனக்குத் தெளிவாய்ச் சொல்லுக என்று வேண்ட முனிவர் கூறுவாரானார்: "சங்கு சக்கர பீதாம்பர மகர குண்டலம் சதுர்ப்புயம் மகுடம் துளவ கௌஸ்துபம் அணியும் அப்பெருமான் அம்மலை மீது சீநிவாஸன் எனப் பெயர் பெற்று இடக்காத்தை இடையில் சார்த்தி வலக்காத்தில் அபயம் காட்டித் திருமகளைத் தன் திருமார்பில் கொண்டு பக்தர்க்கு அருள்கின்ற நின்ற திருக்கோலமாக உள்ளான். கலியுகத்தில் சக்கரவர்த்தியாய் விளங்கிய சோழ அரசன் புதல்வன் பொருட்டுத் தன் சங்கு சக்கரங்களை வழங்கிய கருணைத் திறத்தினால் அப்பெருமான் சங்கு சக்கரங்கள் இல்லாதவனாகி விளங்குகின்றான்" என்று சொல்ல "அம் மன்னவன் வரலாற்றை எனக்குக் கூறுக" என்று திலீபன் வேண்டினன். முனிவர் தொடங்கினர்: "சோழ நாட்டில் கிருஷ்ண க்ஷேத்திரம் என்று ஒரு ஸ்தலம் உண்டு. அதில் கிருதவர்மா என்ற சோழன் அரிய தவம் செய்யும் காலத்தில் வேத சாஸ்திரங்கள் நன்கு அறிந்த வைகானஸ பிராம்மணன் ஒருவன் ஒரு பிராம்மணனிடத்தில் தேவகிசுதன் சரிதம் கேட்டு அதனால் பக்தி கொண்டு கண்ணனைப் பூசித்து வாக் கோபி

நாதன் அவன் கனவிடைத் தோன்றித் திருவேங்கட மலையில் அமர்ந்துள்ள சீநிவாசப் பெருமானுக்கு அங்கு ஆராதனம் இல்லை. நீ அவ்விடத்துச் சென்று நியமப்படிப் பூசித்து வந்தால் அப்பெருமான் அருள் செய்வான்" என்று கூறப் பிராமணன் அவனைத் திருமால் என மதித்து அத்தலத்தின் அடையாளம் கூறுக என்று கேட்டான். மேலும் அக்கனவில், ஆதி யுகத்தில் குபேரனை ஒப்ப வாழ்ந்த சங்கராசன் முன்பு இயற்றிய அழகிய விமானம் பிரளய நாளில் முற்றும் சிதைந்த போது ஒரு புற்றின் நடுவே நோய் அவ்வாசன் பிரதிட்டைக்கு அருள்செய்த பெருமான் முழந்தாள்வரை புற்று மறைக்க வளர்ந்து ஓங்கிய ஒரு புளிய மரத்தின் நிழலிடத்து உறைகின்றான். அவ்விடத்து இரண்டு விற்கிடை தூரத்தில் பூ தீர்த்தம் ஒன்று உண்டு. முகுந்தனுக்குத் திருமடைப் பள்ளிப் பணிக்குப் பூமகளை முன்பு நியமித்திருக்கின்றது. கௌதமி என்னும் தெய்வப் பசு நாள்தோறும் அப்பெருமானைத் தன் பாலினால் திருமஞ்சனம் செய்து அங்கு அமர்கின்றது. அரங்கதாசன் என்ற பெயருடைய சூத்திரன் அத்திருமலைக்கு வந்து உன்னோடு சேர்வான். நீவிர் இருவரும் சீநிவாசப் பெருமானை ஆராதனம் செய்து வந்தால் நீங்கள் விரும்பியவை எல்லாம் அப் பெருமான் அருள்வான் என்று கூறினான். அப்போது பிராம்மணன் உன் பெயர் யாது என வினவினான். அதற்கு 'நான்கோபி நாதன்' என்ற அளவில் உறக்கம் நீங்கி எழுந்து அதிசயித்து "நின்மலன் நம் தவத்துக்குச் சித்தம் இரங்கி இக் கைங்கரியம் செய் என்று ஆணையிட்டான்" என்று மகிழ்ந்து வேங்கட மலையை அடைந்தான். அப்போது அரங்கதாசன் அங்கு வந்து சேர இருவரும் அன்புடன் நண்பு கொண்டு செல்லுகையில் வேதியன் தன் கனவில் கோபி நாதன் அருளியவற்றை உரைக்க இருவரும் திருமலைமேல் அவ்வாறே தேடி அப்புளிய மாத்தைக் கண்டு அடைந்தனர். அம்மரத்தின் அடியில் சீநிவாசனைத் தரிசித்துப் புற்றைப் பசுவின் பாலால் கரைத்துப் புற்றின் மேற்புறத்தில் அப்பெருமானை எழுந்தருளப் பண்ணித் திருக்கோயில் பணி செய்யப் பொருள் இல்லாமையால் காட்டிலுள்ள புற்களைக் கொண்டு ஒரு சிறிய மண்டபம் அமைத்துப் பூசிப்பதற்குத் துளசியும் மலர்களும் அரங்கதாசன் கொண்டுவரப் பிராம்மணன் நியமமோடு நெடுநாள் ஆராதனம் செய்து வந்தான். ஒரு நாள்

குண்டலன் என்னும் ஒரு கந்தருவன் பல அரமகளிர் சூழ விமானத்தில் வந்து வேங்கடவனை வணங்கி வடபால் பூங்கா ஒன்றில் அம்மங்கையருடன் சிங்கார சாத்திர முறைமையான ஆடல்களை மேற் கொண்டிருந்தான். அப்போது சீநிவாசப் பெருமானுக்கு மலர் பறித்துக்கொண்டு வரும் அரங்கதாசன் அக் காட்சியைக் கண்டு தானும் 'காமம்' மீதூர்ந்து நின்று பின்னர் அஞ்சி "எச்சில் பட்டோமே" என்று மலர்களை ஒரு சுனையில் எறிந்துவிட்டுச் சாமி புட்கரிணியில் நீராடித் தூயனாய்ப் பின்னர் வேறு நறுமலர்களைக் கொய்து பக்தியுடன் வரும்போது வேங்கடப் பெருமான் அசரீரியாய் "அரங்கதாச! நீ ஆராதன காலத்து மோகம் கொண்டு இழிந்தாய் ஆதலால் இந்நிலத்து இப்பிறப்பு ஒழிந்து மன்னவனுக்கு மகனாய்த் தோன்றிப் போகங்கள் எல்லாம் நுகர்ந்து எனக்குக் கோபுர விமான மண்டப பிராகாரங்கள் இயற்றிப் பத்திசெய்யும் காலத்தில் உனக்கு எண்ணில்லாத பகைவர் எதிர்த்து வருவர்: அக்காலை யான் உனக்கு வெற்றி யளிக்க ஆழியும் சங்கும் அருளுவேன். அதன்மேல் உனக்கும் உன் சுற்றத்தார்க்கும் பாகதி அளிப்பேன்: ஆகையால் அரசனிடம் பிறப்பாய்" என்று ஏவ, அவ்வாறே அவன் நாராயணபுரத்தில் அரசனுக்குப் புதல்வனாய்த் தோன்றி வளர்ந்து கலை பல பயின்று உலகு ஓம்பிப் போகங்கள் நுகர்ந்து தொண்டைமான் சக்கரவர்த்தி என்று எவரும் சொல்லச் செங்கோல் நடத்திச் சேஷாசல தேவனே தெய்வமாகக் கொண்டு நாள்தோறும் சுரங்க வழியாக வேங்கடமலை யடைந்து பரமனைப் பணிந்து இருபத்தேழாம் கலியுகத்தில் இருதிருமதில் இரு கோபுரம், மடைப்பள்ளி, கொடியேற்று மண்டபம், தானிய களஞ்சியம் முதலாக எல்லாத் திருப்பணியும் செய்து முடித்தனன். பின்னர் பிராம்மணரால் துவசாரோகணம் முதல் பல உற்சவங்கள், அவப்பிரதம், புட்பயாகம் முதலியவை செய்வித்து ஆராதனங்களை வழுவற நடத்தி வருங்கால் பகைவர்கள் திரண்டு அந்நகர்ப் புறத்து மதிலை வளைத்து நகரமாக்களை வதை புரிய, சக்கரவர்த்தியும் சினம் கொண்டு படைகளுடன் புறப்பட்டுப் போர் புரிந்தான். அப்போது பகைவர்கள் சக்கரவர்த்தி கலக்கம் உறும்படி செய்தனர்: மனம் கலங்கிய மன்னன் அப்போது பிலத்து வழியாய்ச் சேடகிரி சென்று எய்தித் திருமகள் கொழுநனைச் சரண் அடைந்து முறையிட்டனன். இறைவனும் அபயம் ஈந்து

தன் சங்கு சக்கரங்களை உதவியருள அவற்றைக் கொணர்ந்து பூசனை செய்து வேண்டி நிற்க அவை பகைவர்களை எல்லாம் தடிந்து அரசனிடத்தில் நொடிப் போதில் மீண்டன. அரசன் உள்ளம் மகிழ்ந்து அவைகளை ஏந்திச் சென்று மலைமேல் எய்தித் திருமகள் கொழுநனை வணங்கி நின்று "பெருமானே! உம் திருவருளாலே என் இடர் ஒழிந்தது. யான் வேண்டும் வரம் ஒன்றுள்ளது. ஆழி சங்கங்களை அடியேனுக்கு அளித்தமை உலகினர் யாவர்க்கும் தெரியுமாறு அர்ச்சா விம்பத்தில் ஊனக் கண்ணுக்குப் புலப்படாதவாறு சேவை தருமாறு வேண்டுகின்றேன்" என்று இறைஞ்சினன். இறைவனும் அவ்வாறே ஆகுக என்று அருளினன். இது திலீபனுக்குத் துருவாசர் உரைத்தது எனச் சூத முனிவர் செப்பினர்.

## 17. தீர்த்த யாத்திரையின் விவரம் உரைத்த அத்தியாயம்.

துருவாச முனிவர் சேடகிரியின் சிறப்புகளை மேலும் கேட்க என்று திலீபனுக்குச் சொல்லத் தொடங்கி, "சாமி புட்கரிணி தீர்த்தத்துக்கு வாயு மூலையில் வராக தீர்த்தம் ஒன்று உள்ளது. அதற்கு அப்பெயர் வந்ததற்குரிய காரணம் யாது எனில், இரணியாட்சன் பூமியை எடுத்து ஒளித்த நாளில் திருமகள் கொழுநன் வராகமாய்த் திருவுருக் கொண்டு அரக்கனைத் தேடி இரசாதலத்துள் சென்று தன் கொம்பினாலே அவன் உடலைப் பிளந்து கொன்று பூமிதேவியைக் கொம்பின் நுனியில் ஏந்தி வந்து முன்பு போல ஆதிசேடன் தலையில் வைத்தான். தேவரும் முனிவரும் வராகமூர்த்தியின் சலவாசத்தைப் பிரமனால் அறிந்து பூசிக்க வேண்ட அவன் அந்தத் தீர்த்தத்தினின்று வராகமூர்த்தியை எழுந்தருளச் செய்தான். அது முதல் அதற்கு அத் திருப்பெயர் உண்டாயிற்று. அத் தீர்த்தத்தில் முழுகி வராகமூர்த்தியைப் பூசியாதவர்க்குச் சீநிவாசன் திருவருள் சுரப்பதில்லை என்று ஞானியர் கூறுவார்கள். அன்றியும் சீநிவாசனே அவ் வராகமூர்த்தியை எக்கருமத்தினும் சங்கற்பித்துப் பூசிக்கும்படி அருளியிருக்கின்றான்: வராகமூர்த்தி இங்ஙனம் இருக்கும் காலை ஒரு பிரளயம் வர அதில் முழுகிப் பின்பு ஒரு காலத்தில் ஒரு வேடுவன்

கோயில் திருப்பணி செய்ய அவனுக்கு அருள் செய்தனன்" என்றார். இது கேட்ட திலீபன் உவகை கொண்டு தீர்த்தம் ஆடுதற்கு எந்தக் காலம் உரியது என்று வினவ முனிவர் கூறத் தொடங்கினார். தீர்த்தாடனம் செய்தற்கு நித்தியம் நைமித்திகம் காமியம் என்று மும்முறை உண்டு. அவற்றுள் நித்தியம் ஆவது-விடியற் காலம், பகற் காலம் நாள்தோறும் நீராடுவதாம். நைமித்திகம் என்பது சூரிய சந்திரர் கூடும் நாள் ஆகிய அமாவாசை, மாதப் பிறப்பு, கிரகணம் முதலிய காலங்களில் புண்ணிய நதிகளில் நீராடுதல் ஆகும். காமியம் ஆவது இன்ன தீர்த்தத்தில் முழுகுவேன் என விரும்பிச் செய்தல் ஆகும். பெரியோர் தீர்த்த யாத்திரையை நைமித்திகம் என்று உரைப்பர். பலத்தினை எண்ணாது முழுகின் திருமாலின் பரம பதம் பெறுவர் என்றும் காமியத்தை இச்சித்தவர் பிறவிக் கடலில் பட்டு உழல்வார் என்றும் நீரின் முழுகுங்கால் திருமகள் நாதனைத் துதித்து முழுகாதார் தவளை நேர் ஆவார் என்றும் கூறுவர் என்று முனிவர் உரைத்தனர். இது பிரமாண்ட புராணப் பொருள் ஆகும்.

## 18. தான விசேடம் உரைத்த அத்தியாயம்.

திலீபன் துருவாச முனிவரை நோக்கிச் சேஷகிரியில் கொடுக்கும் தானத்தின் மேன்மையைக் கூறுமாறு வேண்ட முனிவர் கூறுவார்: பிராம்மணர் மகிழ அன்னதானம் செய்தல், பிதிர்களைத் திருப்தி செய்தல், பொன் கொடுத்தல் இவை எல்லாம் தம் பொருள் கொண்டு செய்தால் அவர்கள் எப்போதும் பரமபதத்தில் வாழ்வார். பசுவைத் தானம் செய்தவர்கள் அப் பசுவின் ரோமம் எத்தனை உண்டு அத்தனை ஆண்டு விஷ்ணு லோகத்தில் வாழ்வார்கள். ஆடை கொடுத்தவர்கள் ஆயுசு வளரப் பெற்றுப் பூமியில் வாழ்ந்து முத்தியடைவார்கள். பூமி தானம் செய்வோர்கள் உலகத்தில் அரசர் ஆகிப் பின்பு திருமால் பதத்தை எய்தி இன்புற்றிருப்பார்கள். தினம் தோறும் களபம், புஷ்பம், தாம்பூலம், கனகாபரணம் திருமாலடியார்க்கு வழங்குவோர்க்கு ஆசாரியர் அபசாரத் தீவினைகள் நீங்கும். திருமகள் கொழுநனுக்கு அவற்றை ஈந்தவர்கள் உலகில் சிறந்த பிராம்மணர்க்குக் கோடி கன்னிகா தானம் செய்த பலனைப் பெறு

வார்கள். குடை, விசிறி, சாமரை, தீபத்தம்பம், சலபாத்திரம், துளசிமாலை முதலியவற்றைத் திருமால் திருக்கோவிலுக்குக் கொடுப்போர் உலகில் இராசாராசாராக வாழ்வார்கள். திருமால் கோயிலுக்கு மணி செய்து அளித்தவர்கள் சாஸ்திர போதமும் சத்ய ஞானமும் எய்தி விண்ணுலகு அடைவார்கள். இறைவனுக்கு உவப்பான பஞ்ச பருவ உத்சவங்களைச் செய்வித்தவர்கள் உலகில் எல்லா இன்பங்களையும் அடைந்து பின்னர் வைகுந்தம் அடைவார்கள். வேதியர்க்குக் கன்னிகா தானம் செய்தவர்கள் தேவ மாதர் இன்பம் பெற்றுப் பின்னர் வீடு பெறுவார்கள். வேதியர்களுக்குத் தாம் பெற்ற பொருளில் சிறிதையேனும் கொடுத்தால், ஆலம் வித்து முளைத்துச் செழித்துப் பெரு மரம் ஆவது போலப் பெருகித் தழைப்பார்கள். திருமால் கோயிலை நாள்தோறும் அடைந்து திருநாமகானம் செய்பவர்களுக்குப் பிரமஹத்தி, கோஹத்தி, குருநிந்தை முதலாகிய பாபங்கள் எல்லாம் சூரியன் முன் பனிபோல் இல்லையாகும்" என்று முனிவர் கூறிப் பின்பு ஒரு வரலாறு கூறலானார்.

விஷ்ணுவர்மன் என்ற ஒரு பிராம்மணன் கழிகாமுகனாய்ச் சன்மார்க்கம் ஒழிந்து தன் ஆசாரியன் மனைவியை விரும்பிக் கூடித் தன் வாலிப பருவ முழுவதும் அப்பாவத்தைச் செய்தான். கிழப் பருவத்தில் உடம்பு முழுதும் பிணி பெருகித் துன்பம் உழந்த காலையில் தன் மனையும் தீப்பற்றி ஒழிந்தது. குட்ட நோயால் புழுக்கள் மலிந்து புண்ணைத் தொளைத்து இரத்தத்தை வழிய விட்டன. சுற்றத்தவரும் மற்றைய மக்களும் இகழ்ந்து வெருட்ட வனத்தை அடைந்தான். அங்கு இடறி வீழ்ந்த போது நாய் நரிகள் அவனைக் கடித்து இழுத்துச் செல்ல இறந்தான். யமதூதுவர் அவனைப்பற்றி நிரயத்தில் சேர்த்தனர்.

அவன் புதல்வன் ஆகிய வேதநாமன் என்பவன் நல்ல மேதாவியான காலத்தில் தன் தந்தைக்கு எய்திய தீவினையை எண்ணி அவனுக்கு நல்ல கதி உண்டாக்குதற்கு வேங்கட மலையை அடைந்து சீநிவாசமூர்த்தியைப் பணிந்து அவன் கோயிலில் பசு நெய்யால் விளக்கு ஏற்றி வந்தபடியால் அவன் தந்தையின் பாபம் நசித்துப் போக அவன் நரகம் நீங்கி வைகுந்த பதம் பெற்றான். பின்னர் தானும் பரமபதம் அடைந்தான். ஆகையால் திருமலைக்குச் செல்ல

நினைந்து அடி எடுத்து வைப்பார்க்கும் அசுவமேத பலம் கிட்டும். வேங்கட வைபவம் கேட்பார் செல்வம் எல்லாம் பெறுவர். வேங்கட மான்மியத்தை வாங்கியவரேனும் எழுதியவரேனும் பூசித்தவரேனும் வித்தையும் ஞானமும் சம்பத்தும் பெற்றுப் பின் பரமபதம் அடைவர் என்று துருவாசர் முடித்தார். இது பிரமாண்ட புராணப் பொருள்.

## 19. சற்சங்கத்தால் வந்த மகிமை உரைத்த அத்தியாயம்.

சௌனகாதி முனிவர்கள் சூத முனிவரை வேங்கட மகிமையை மேலும் விளம்புமாறு கேட்கச் சொல்லுவாரானூர். பிரம்மலோகத்தில் பிரம்ம சபையில் வசிட்ட முனிவர் அடைந்து பிரமனை நோக்கி "என்னைப் பலரும் இராச புரோகிதர் என்று புகழ்வார்கள்: ஆனால் அரசர்கள் நாளும் செய்யும் பாவங்கள் எல்லாம் புரோகிதனுக்கே வரும் என்று சாஸ்திரங்கள் கூறுதலால் நான் மிகவும் துயருள் ஆழ்ந்தேன்: அன்றியும் என்னுடன் உள்ள இந்தப் பிராம்மணன் பொருள் இல்லாமையாலே ஒழுக்கம் இழந்தவனாகி யாகசாலையில் வேதியர் நடுவே புக்குத் தக்கணை வழங்குங்கால் அற்பம் ஈந்தால் வாங்காமல் சினந்து நிந்திக்கும் ஈனன் ஆதலாலே அவர்கள் பழித்து வசிட்டன்பாற் சென்று இரு என விதித்தமையால் என்னை அணுகிச் சுத்தன் ஆக்குமாறு அடைந்துள்ளான்: என் பாவங்களையும் இவ் வேதியன் பாவங்களையும் போக்க வேண்டும்" என்று பிரமனை வேண்ட அவன் "நீங்கள் வேங்கட மலையிலுள்ள கோண தீர்த்தத்தை அடைந்து நீராடிச் சீநிவாசனைத் தியானம் செய்தால் உம் பாவங்கள் நீங்கும்" என்று கூற அவன் அடிபணிந்து நிலவுலகம் சேர்ந்து சொன்னமுகி நதியின் பக்கத்தே சுக முனிவருக்கு அருள்செய்த திருமாலை வணங்கிக் கபில தீர்த்தத்தில் மூழ்கி வேங்கட மலைமேல் சாமி புட்கரிணியில் நீராடிச் சீநிவாசனைத் தொழுது தம் பாவம் போக்க வேண்டிப் பின்பு வடபாலுள்ள பாவநாச தீர்த்தம் ஆடிக் கோண தீர்த்தத்தின் கரை அடைந்து ஏகாதசி முதல் ஐந்து நாள் உபவாசம் இருந்து பங்குனி மாதம் பௌர்ணைத் திதியில் உச்சிப் போதில் வசிட்டன் நீராட அடையும் போது சித்தர் கின்னரர் முத

லிய வானவர்களும் திருமாலே ஏத்தி நீராட அடைந்தார்கள். வசிட்டனும் வேதியனோடு சங்கற்பித்துக் கொண்டு நீராடித் தேவ தர்ப்பணாதிகளைச் செய்து முடித்துக் கரையில் பதுமாசனம் இட்டு இறைவனை இதயத் தானத்தில் இருத்தி ஏக சிந்தையனாகித் தியானயோகம் புரியச் சீநிவாசன் நீல மலைபோல் எதிர் தோன்றினான். அப்போது வசிட்டன் "இறைவனே! அடியேனுக்கு இராச புரோகிதத்தால் வந்த பாவமும் இவ்வேதியனுக்கு உற்ற பாவங்களும் நீங்குமாறு அருள்க" என்று வேண்டலும், இறைவன் "வசிட்டனே! நீ பிரமன் வாய்மொழி கேட்டுக் கோண தீர்த்தம் ஆடி என்னைத் தியானம் செய்து பூசித்த பயனால் உன்னையும் இவ்வேதியனையும் மகிழ்ந்து உட்கொண்டேன். என்பால் அன்பு கொண்டவர்களை யான் எவ்வாறு ஆட்கொள்வேனோ அவ்வாறு நீ இவன்பால் அருள்க என்றாய்: உலகில் அடுத்தவரிடத்தில் அன்பு செய்பவன் மகா புருடன்: பெரியோர் பக்கல் பக்தி செய்பவன் புருடோத்தமன். உன்மேல் பக்தி வைத்தமையால் இங்கு வந்து என்னைப் பணிந்து கோண தீர்த்தம் ஆடக் கிட்டியது. ஆகலால் இவன் செய்த பாவம் எல்லாம் சூரியன் முன் பனிபோல் நீங்கின. உன் உபகாரத்தால் தர்மம் ஞானம் ஐசுவரியம் எல்லாம் பெற்றுச் சர்வ சித்தாக்கியன் என்று பெயர் பெற்று நிலத்தில் சுகமாய் வாழ்ந்திருப்பான். உனக்கு உற்ற இராச புரோகித பாவங்களும் நீங்கின" என்று அருளி மேலும் கூறுவான். கோண தீர்த்தத்தில் முழுகி என்னைத் தியானிப்பவர் பாவங்கள் நீங்க நினைத்த பயன் எல்லாம் பெறுவார்கள். முன்பு தும்புரு முனிவன் இங்கு வந்து என்னை நினைந்து தவம் புரிந்து இந்தத் தீர்த்தத்துக்கு என் பெயர் இட வேண்டும் என்று வேண்ட அவ்வாறே வரம் அளித்தேன். அப்பெயர் அன்று தொட்டு நிலவுகின்றது. இதில் முழுகுவோரைச் சாஸ்திரஞ்ஞர் கொண்டாடுவார்கள் என்று அருளி இறைவன் மறைந்தனன். வானவர் யாவரும் போயினர். சர்வ சித்தாக்கியனுடன் வசிட்டன் தன் ஆச்சிரமத்தில் சில நாள் இருந்த பின்பு அவனை நோக்கி "உன் நகருக்கு நீ இனிச் சென்று வேத வழியில் சாந்தனாயிருந்து அதிதிகளுக்கு உணவு ஆடைகள் உதவி அறத் துறையில் ஒழுகுக: பத்மநாபன் அருள் பாலிப்பான்: மக்களும் செல்வமும் மகிழ்ப் பெற்றுப் பின்னர் பரமபதம் பெறுவாய்" என்று அருளி

அனுப்ப அவன் தன்னகர் அடைந்து அவ்வாறே வாழ்ந்து சிறப்பு உற்றான். பெரியோர்மீது பற்று வைத்து அவர் உள்ளம் உவப்புறச் செய்தவர் பாவங்கள் நீங்கி இகபர சுகம் பெறுவர் என்று சூத முனிவர் கூறினர். இது பிரம்மோத்தர காண்டத்தில் உள்ளது.

## 20. தும்புருவுக்கு அருள் செய்த அத்தியாயம்.

சௌனக முனிவர் சூத முனிவரை நோக்கித் தும்புரு தவம் புரிந்த காரணத்தைச் சொல்லுக என்று வேண்டலும், அவர் உரைக்கத் தொடங்கினர். தும்புரு அந்தர மார்க்கமாய் இசை பாடி வரும்போது நாரதர் திருமகள் கொழுநன் புகழை வீணையில் இசை கூட்டிப் பாடி வந்தனர். இருவரும் சந்தித்துத் திருமாலை ஆனந்தமாய்ப் போற்றிப் பாடினர். அப்போது நாரதர் தும்புருவின் வீணையைப் பார்த்து "என் வீணையினும் உமது வீணை மிக்க மணி இழைத்துப் பிரகாசிப்பது எதனால்: கூறுக" என்று வினவ, தும்புரு, "தேவேந்திர பதியில் இந்திரனுடைய சபையில் அவனை வீணை இசையால் மகிழ்வித்தேன்: மகிழ்ந்த இந்திரன் என் வீணையை வாங்கி மணிகள் இழைத்து அளித்தான்" என்று விடை பகர்ந்தார். நாரதமுனி கோபம் கொண்டு திருமாலின் புகழைப் பாடாது இதர தேவனைப் பாராட்டி வறியவர் போலப் பொருளை விரும்பின நீ தேவருலகினின்றும் நீங்கிப் பூமியிற் சேர்வாயாக" என்று சாபம் இட்டார். அப்போது மேலுலகினின்றும் வழுவி வேங்கட மலைமீதுள்ள கோண தீர்த்தக் கரையில் விழுந்து எங்கு வந்துள்ளோம் என்று சுற்றிப் பார்த்து வேங்கட மலையென அறிந்து சீநிவாசனைத் துதித்து அத் தீர்த்தத்தில் முழுகிக் கிழக்குத் திக்கு நோக்கி யிருந்து திருமாலை இருதயத் தானத்தில் இருத்தி அவன் திருவடிகளைத் தியானித்து யோகம் புரிந்தபோது பங்குனி மாதம் பூரணை நாளில் சீநிவாசன் கருடன்மேல் தும்புருவுக்குக் காட்சி அளித்தான். இறைவனைத் தரிசித்த தும்புரு திருவடிகளைப் பணிந்து எழுந்து "இறைவனே! அடியேன் வினையினால் நாரத முனிவர் சபிக்க இப்பூமியில் விழுந்தேன்: என் சாபத் துயரத்தைப் போக்கி யருள்க" என்று வேண்டினான். இறைவனும் "புண்ணிய தீர்த்தம் ஆகிய இதில் நீராடி என்னைத் தியா

ணித்தமையால் சூரியன் முன் பனிபோல உன் பாவங்கள் நீங்கி நீ பரிசுத்தன் ஆனாய்" என்று அருள்செய்யத் தும்புரு "இத் தீர்த்தத்திற்கு என் பெயர் தருக" என்று வேண்டினன்: சீநிவாசன் "அப்படியே யாகுக: நீ நாரதனுடன் சேர்ந்து வாழ்க" என்று அருளி மறைந்தான். பின்னர் அகத்திய முனிவர் அங்கு வரத் தும்புரு தன் வரலாறு முழுதும் அவர்பால் கூற அவர் வேங்கடாசல மகிமையும் அங்குள்ள தீர்த்தப் பெருமையும் சீநிவாசப் பெருமான் அருள் தகைமையும் விரித்து உரைத்து இதர தேவரை ஏத்தாமல் இலக்குமி நாயகன் புகழ் ஒன்றனையும் நாள்தோறும் சொல்லுக என்று கூறி நீங்கினர். தும்புருவும் நாரத முனிவரிடம் சேர்ந்து இதய சுத்தராய் அரிநாமம் ஆயிரமும் ஏழிசைப்படுத்துப் பாடித் தன்னிடம் சேர்ந்தார். இது பிரம்மோத்தர காண்டப் பொருள் ஆகும்.

## 21. பெரிய திருவடி பரம பதத்திலிருந்து கிரீடாசலம் கொண்டு வந்த அத்தியாயம்.

சௌனகாதி முனிவர் சூத முனிவரை நோக்கி "இரணியாட்சனைக் கொன்று பூமியைக் கொம்பில் ஏந்தி வந்து ஆதிசேடன் தலையில் நிறுவிய வாரகப் பெருமான் பூமியில் செய்தருளியவற்றைக் கூறுக" என்று வேண்டினர். முனிவர் கூறத் தொடங்கினர். ஸ்ரீ வாராக மூர்த்தி பிரமனை அழைத்துச் சராசரங்கள் எல்லாவற்றையும் முன்பு போலப் படைத்திடுக என்று கட்டளையிட அவ்வாறே படைத்தான். நடப்பன ஊர்வன பறப்பன நிற்பன எல்லாம் நிலைபெற்றன. இவ்விதம் படைப்பித்தவற்றைப் பாதுகாப்பதற்காகத் தான் நிலவுலகத்துத் தங்கத் திருவுளம் கொண்டு கருடனை அழைத்து "நிலவுலக மாந்தர் என்னைப் பத்தியால் பணிந்து பூசித்து மேம்பாடுற நாம் உலகில் தங்கக் கருதினோம். எம் உளத்திற்கு ஒத்திடும் குன்றம் வேண்டும்: ஆதலால் நீ வைகுந்தம் சென்று தூயது ஆகிய விளையாடல் குன்றம் ஒன்றினை எடுத்துக் கொண்டு வா" என்று கட்டளையிட்டான். அவனும் அவ்வாறே ஒரு குன்றை எடுத்துக்கொண்டு வரக் கௌதமி நதியின் தெற்கே ஆறு யோசனைத் தூரத்தில் கீழ் கடலுக்கு மேல்பால் ஐந்து யோசனையில் சொன்னமுகி நதிக் கரையில்

வைப்பாய் எனக் கட்டளை யிட்டான். அங்ஙனம் வைக்கப் பெற்ற மலையின்மீது வராக மூர்த்தி எழுந்தருளிச் சங்க சக்கரம் விளங்கச் சாமி புட்கரிணிக்கு வடமேற்புறம் விமானத்து அமர்ந்தான். அரன் பிரமன் இந்திரன் முதல் தேவர்கள் அவன் திருவடியைப் பரவி "இறைவனே! அச்சம் தரும் இவ்வுருவத்தை விடுத்துச் சாந்த ரூபத்தைக் கொள்ள வேண்டுகிறோம்" என்று வேண்ட இறைவன் சாந்த ரூபனாய்ப் பூமிதேவியை மடியில் இருத்திக்கொண்டு தேவர்களை நோக்கி "பரமபதத்தில் இருந்து கருடன் கொண்டு வந்த இம் மலையில் எழுந்தருளி அடியவர் நாடியவற்றை அளித்து இனிது உறைவோம்" என்று அருளி அவர்களுக்கு விடை கொடுத்தனன். நீராடும் வாவியுடன் கருடன் கொணர்ந்த அவ்வாடல் குன்றத்தில் அமைந்த சாமி புட்கரிணியில் முழுகினவர்கள் இன்புற்று வாழ்ந்து பரமபதம் அடைதல் திண்ணம். சாமி புட்கரிணியைக் கண்ணுற்றாலும் பெயர் சொன்னாலும் நினைத்தாலும் பவநோய் போம். அதன் பெருமை வானவராலும் வகுக்க முடியாது எனச் சூத முனிவர் கூறினார். இது வராக புராணப் பொருள்.

## 22. யாக மகிமை குமாரதாரிகை மகிமை உரைத்த அத்தியாயம்.

திருமலை இறைவன் புகழினை மேலும் கூறுகின்றேன் எனச் சூத முனிவர் தொடங்கினார். அத்திருமலை மந்திரம், கன்மம், தவம், யாகம், தர்மம், விரதம் முதலிய சகல சித்திகளும் குறைவு இன்றிப் பூமியில் தருதலால் பெரியோர்கள் அதனைச் சிந்தாமணி கிரி என்பர். ஞானகிரி, வேங்கடகிரி, சீநிவாசகிரி, சுவர்ணகிரி, நீலகிரி, ஸ்ரீசைலகிரி, அனந்தகிரி, நாராயணகிரி, அஞ்சனகிரி, வடமலை என்று கூறும் பெயர்களோ பலவாய் ஸ்ரீமந் நாராயணன் திருப்பெயரோடு ஒக்கும். சித்து அசித்து ஈசுரம் என்ற மூன்று தத்துவங்களின் இயல்புகளையும் உணர்ந்த சிரேட்டர் சிலர் அத்திருமலையின் சிறப்பைக் கேட்டு அறிந்தவர்களாய் அதனை அடைந்து யாகத்தைச் செம்மையாகப் புரியின் சித்தி உண்டாம் என எண்ணி உலகுண்ட முழு முதற் பெருமானை நாடி யாகம் செய்யுங்கால் அப்பெருமான் ஓர் அரச

குமாரனைப் போலத் தோன்றினன். யாகம் புரிந்த பெரியோர் அவனை நோக்கி "நீ எவ் வூரினன்? உன் தந்தை பெயர் யாது? இத்தலத்திற்குப் போந்தது எதற்கு? சொல்லுக" என்று கேட்டனர். அவ் வினாக்களைக் கேட்ட அரசிளங்குமாரன், "என் பெயர் அளவில்லை. எங்கும் வசிப்பேன். தந்தை தாய் இலன். குலம் இல்லேன். எல்லாம் சமமாய்ச் சிந்தை கொண்டு உருவிலியாயும் உருவியாயும் இருப்பேன். நீங்கள் செய்யும் யாகத்தைக் காண வந்தனன்" என்று கூறினன். அவ்வளவில் முனிவர்கள் மகிழ்ந்து "நம் யாகத்தில் அவிர்ப்பாகம் உண்ணுதற்கு விருப்பத்தோடு இறைவன் வெளிப்பட்டனன்" என்று அடங்கா மகிழ்ச்சி கொண்டு விரைவில் விதிப்படி ஆகுதி நடத்த இறைவன் இலக்குமி திருமார்பில் இலக நாந்தகம், கதை, சங்க சக்கர கோதண்டம் விளங்க, மகா குண்டலங்கள் இலங்க, திருமுடி ஒளிவிட, பீதாம்பரம் துலங்க, துளசித் தொடையல் நாற்றோள்களில் தொங்கக் காட்சி கொடுத்து யாக அவிர்ப்பாகத்தை ஏற்று உட்கொண்டு கோடி சூரியப் பிரகாசனாய் விளங்கினான். முனிவர்கள் அக் காட்சியால் கண்ணொளி மழுங்கிச் சித்திர பாவை போல் வியப்புற்று நின்று இறைவன் அனுக்கிரகத்தைப் பாராட்டிப் போற்றினார்கள் என்று முனிவர் கூறி மேலும் தொடங்கி முன்னம் ஒரு வேதியன் புலன்கள் மெலிந்து பசி தாகங்களால் களைப்புற்றுத் தள்ளாடித் தண்டு ஊன்றிக் கொண்டு திருமலை மீது தடுமாறி நடந்து வந்தான். அவனைத் திருமகள் கேள்வன் ஒரு குமாரனாய் அடுத்து "நீ யார்? எங்குச் செல்கின்றாய்?" என்று வினவினான். அவ் வேதியன், "ஐயோ உடல் கூனி நோயால் துன்பம் உற்ற என்னை விதி இன்னும் உலகில் வைத்து விநோதம் செய்வது என்னவோ?" என்று புகல இறைவன் உள்ளம் கனிந்து "உனக்கு உடலை விடுதல் விருப்பமா? இளமையை மீட்டும் பெறுதல் விருப்பமா? உரைப்பாய்" என, வேதியன் இவன் சிறுபிள்ளை என நினைந்து "நீ சொல்லிய எல்லாம் எனக்கு விருப்பம் இல்லை. எக் கருமம் செய்தாலும் பலனை விரும்பாமல் செய்து பின்பு இவ்வுடலை விட வேண்டும் என்பதே என் சத்தியக் கருத்து" என்றான். அப்போது இறைவன் அவ்வேதியனை அம்மலையில் ஓர் அருவியின் பக்கல் கொண்டு சென்று "இத் தீர்த்தத்தில் நீ மூழ்குவாய் ஆயின் பதினாறு வயதுள்ள இளைஞன் ஆவாய்; உனக்கு நித்திய கருமம்

இனிது நடைபெறுதற்கு நாம் நிதித்திரள் அளிப்போம்: நீ அதனைக் கொண்டு உன் ஊர் சென்று நியாயமாய் இருப்பாய்" என்று அருளி மறைந்திட்டான். அவ்வேதியன் அவ்வாறே முழுகி இளமை எய்தி நின்றதை உணர்ந்து வானவர்கள் மலர் சொரிந்து வாழ்த்தி நாராயணன் கருணையை ஏத்தி வேதியன் குமரன் ஆயின தன்மையால் அத் தீர்த்தத்திற்குக் குமாரதாரிகை எனப் பெயரிட்டு மூன்று திங்கள் அதில் முழுகினவர்கள் மூப்பு இல்லாதவராகி விளங்குவார்கள் எனச் சொல்லித் தம் இடம் அடைந்தார்கள். இவ்வாறு சூத முனிவர் சொல்லிய வரலாறு வராக புராணத்து உள்ளது.

## 23. சங்கன் என்னும் அரசன் சாமித்துவம் அடைந்த அத்தியாயம்.

வான்மீக முனிவன் எனக்கு முன்பு உரைத்த வரலாற்றை நான் உமக்குக் கூறுகின்றேன் எனச் சூத முனிவர் கூறத் தொடங்கினர். முன்பு காசி நாட்டில் சந்திர வமிசத்தில் பிறந்து புகழ் பெற்ற சங்கன் என்ற அரசன் பகைவரை வென்று அரசு புரியும் காலத்தில் அறநெறி அறியாது மறநெறிச் சென்றமையால் பகைவர்களால் நாடு சிதைந்து தன் மந்திரிகளோடு தெற்குத் திசைக்கண் உள்ள சேதுவுக்குச் செல்லும் வழியில் சொன்னமுகி நதிக்கரை அடைந்து நீராடித் திருமாலைத் தியானித்து அதன் வடபால் ஒரு தடத்தில் தங்கினன். அப்போது ஆகாயவாணி "அரச! துயர் உற வேண்டா. சேஷாசலத்தின்மீது சாமி புஷ்கரிணி என்ற தீர்த்தம் உள்ளது. அதன் மேல்புறத்துப் புற்று மொய்த்த குன்றம் ஒன்று உண்டு. அதன் முன்பு இருந்து மூன்று காலமும் நீராடி இறைவனைத் தியானித்து ஆறுமாத காலம் செபித்தால் நீ இழந்த அரசச் செல்வம் எல்லாம் பெறுவாய்" என்று கூறியது. அதன்படி அவன் திருமலைமேல் சென்று சாமி புஷ்கரிணி அடைந்து நீராடி அதன் கரையிடத்து இருந்து முப்போதும் நீராடி வேங்கடத்து இறைவனைப் பூசித்துப் பழங்கள் அருந்திப் பத்தி யோகம் புரிந்தான். திருமகள் கேள்வன் சாமி புஷ்கரிணியின் நடுவே சங்க சக்கரக் கையன் ஆக எழுந்து தோன்றினன். அப்போது அரன் அயன் இந்திரன் முதலிய தேவ கணத்தார்கள் யாவரும் வணங்கிப்

போற்றச் சங்கன் என்ற மன்னனும் இறைவன் அடித்துணை வணங்கிப் பாவி "அடியேன் இழந்த அரசும் அருளிப் பவங்கள் தொலையப் பரிவு செய்க" என்று வேண்டி நின்றான். அப்போது இறைவன் அருள் சுரந்து "நீ சாமித்துவம் பெற்றுத் தரணியில் வாழ்வாய். இத் தீர்த்தத்தில் மூன்று காலமும் நீராடி என் அடி பாவினாய். ஆதலால் நீ பொதுவற்ற அரசியல் புரிவாய்" என்று அருளி மறைந்தனன். இவை எல்லாம் கண்ட வானவர் தொழுது சென்றனர். சங்கன் தன் மனைவியோடும் மந்திரிகளோடும் தன் நாட்டினில் செல்ல அவன் பகைவர் தங்களுள் போர் புரிந்து வலி தொலைந்து கான் புக்கனர்; சங்கனை மணி மண்டபத்து ஏற்றி மணிமுடி புனைவித்துப் போற்றினர். அவனும் பேரரசு புரிந்து வாழ்ந்தான். இது வராக புராணப் பொருள்.

## 24. இராமன் என்னும் பிராமணன் சித்தி பெற்ற அத்தியாயம்.

சூத முனிவர் வான்மீகரிடம் கேட்ட சரிதையை நைமிசாரணிய முனிவர்களுக்கு உரைப்பாராயினர். உலகிற்கு அலங்காரம் ஆகிய மத்திய தேசத்தில் உள்ள இராமன் என்ற பிராமணன் தன் பெற்றோர்கள் மகிழ உபசரித்து நடக்கும் காலத்தில் தன் பெருமை எல்லாம் தொலையப் பொருள் இல்லாமையால் உலகில் எவரும் வெறுக்க மனம் சலித்து அலையுங்காலை ஒரு நாள் வேங்கட மலைக்கு அருகில் அடைந்து கபில தீர்த்தத்தில் முழுகிச் சித்த சுத்தி பெற்றான் ஆகி அம்மலைமேல் செல்லும்போது தென் பாரிசத்தில் ஒரு புற்று நடுவில் பிரகாசம் பொருந்திய மேனியோடு தியான சமாதியில் தங்கிய சனற்குமாரனை அடைந்தான். அவனைப் பெரியோன் என மனத்துள் கருதி அடி பணிந்து "அடியேனுக்கு அனர்த்தம் சம்பவியாமல் அருளுக" என்று வேண்டினன். அப்போது அம் முனிவர் அருட்கண் பாலித்து "நீ முன் பிறப்பில் செய்த பாவம் உள்ளது. அதனை மாற்ற ஓர் உபாயம் நான் உரைக்கின்றேன். நித்தியனும் நிருமலனும் கருணாகரனும் ஆகிய இறைவன் திருமார்பை விட்டு அகலாத இலக்குமியின் மந்திரம் உள்ளது: அது வேதத்தின் முதலினும் இடையினும் முடி-

வினும் சொல்லும் நன்னய மந்திரம்: அதனை நிலவுலகில் ஜபிப்ப வர்கள் எல்லாச் சித்தியும் பெறுவார்கள்; உலகினர்க்கு அன்னை யாய்ப் பெருஞ் செல்வத்தை விரும்பியவர்களுக்கு அளித்தருளும் இலக்குமியின் மந்திரம் இஃது ஆதலால் இதனைச் செபித்துத் தீவினை ஒழித்துச் செல்வம் பெற்று வாழ்வாய்" என்று விடுத்தலும் அவ் வந்தணன் வேங்கட மலையை அடைந்து தீர்த்தத்தில் முழுகிப் பின்னர் சாமி புட்கரிணி அடைந்து இறைவன் பெயரை மனத்துள் பதித்து ஏத்தி அதில் முழுகி முனிவர் அருளிய மந்திரத்தை அனு சந்தித்து ஒழுகினன். இவ்வாறு தவறாது ஒழுகும் நாளில் இறைவன் திருமகள் திருமார்பில் விளங்கவும் அமரர் போற்றவும் விமானத்தில் எழுந்தருளித் தோன்றினன். அந்தணன் இரு கண்ணாலும் நோக் கிக் களித்து வியந்து போற்றினன். அப்போது இறைவன் "நீ இலக்குமியை அதிபத்தியோடு தியானித்தாய் ஆதலால் உன் பாவம் தொலைந்தது. உலகில் ஆயுள், ஞானம் முதலிய வளரப் பெற்றுச் சிறப்பு எல்லாம் பெற்று வாழ்வாய்" என்று அருளி மறைந்தான். பின்னர் அம்மறையவன் இறைவனை மனத்துள் துதித்து வேங்கட மலையை நீங்கித் தன்னூர் அடைந்து தர்மார்த்த காமங்களைப் பெற் றிருந்தான் என்று சூத முனிவர் சொன்னார். இது வராக புராணப் பொருளாம்.

## 25. சக்கரவர்த்தி திருமகன் வேங்கடம் அடைந்த அத்தியாயம்.

சௌனக முனிவர்களுக்குச் சூத முனிவர் வராக மலையின் மாண்பினைச் சொல்லத் துவங்கினர். தேவர்கள் துயரம் தீர்த்தருளக் கருதித் திருமால் தசரத புத்திரன் ஆகிப் பூமிதேவி களிப்ப இலக்குவ னோடும் காட்டை அடைந்து பம்பைக் கரையை அணுகிச் சுக்கிரீவன் அனுமான், அங்கதன் முதலிய வானர வீரர்களோடு தெற்கே செல் லும்போது வேங்கட மலையை அடைந்தனர். அப்போது அனு மான் தாயாகிய அஞ்சனாதேவி இராமனை அடி பணிந்து "அண் ணலே! உம் சேவையை விரும்பி இத் திருமலையில் மாதவர் பலர் தவம் புரிகின்றார்கள். அவர்கள் பூசனை யேற்று இங்குத் தங்கிச்

செல்ல வேண்டும்" என்று பிரார்த்தித்தாள். ஆஞ்சனேயனும் "எம் பெருமானே! இன்று இத் திருமலைமீது தங்கி நம் சேனை வீரர்கள் காய் கனிகள் உண்டு பசியாறி நாளைச் செல்லுதல் நலம்" என்றான். சீராமபிரான் அதற்கு உடன்படலும் ஆஞ்சனேயன் வானர சேனையை நோக்கி "நீங்கள் இத்திருமலையில் எவ்விடத்திற்கும் இச்சைப்படி சென்று சோலைகளில் தங்கி இளைப்பாறிக் காய் கனி கிழங்கு உண்டு வாருங்கள்" என்று கூறினன். இராமனும் இலக்குவனும் சுக்கிரீவனும் அங்கதனும் அஞ்சனையின் ஆச்சிரமத்தில் தங்கி அவள் பூசனையை ஏற்றுச் சோலைகளில் உலாவும்போது அந்தணரில் சிறந்த திருலோமன் என்பவன் பிரம்மலோகத்தை அடைவதற்குப் பிரமனை நோக்கித் தவம் புரியப் பிரமன் எதிர்ப்பட்டுத் தசரத ராமன் இராவணனைக் கொல்லும் பொருட்டு வானர சேனையோடு தெற்கு நோக்கி வருங்கால் வேங்கட மலையை அடைவார்கள்; அவர்களால் நீ என் உலகை அடைவாய் என்று அருளியவாறு அவர்கள் வருகையை எதிர்நோக்கி அங்கு இருந்த அவன் முன்பு இராமனும் இலக்குவனும் தோன்றினார்கள். அப்போது வேதியன் அவர்களைப் பணிந்து தன் பிரார்த்தனையைச் சொல்லச் சீராமனும் அன்பு கூர்ந்து அவனைப் பிரம்மலோகம் அடைய அருள்செய்து வன சிங்காரம் பார்த்துச் செல்லுங்கால் அங்குள்ள யக்ஷர்களுக்கு உற்ற சாபங்கள் நீங்க அருளிப் பின்னர் சாமி புட்கரிணியை அணுகி நீராடி நிருதி திசை அடைந்து சீநிவாசன் எழுந்தருளிய இருக்கை அடைந்து வணங்கி வாழ்த்திப் பின்பு இலக்குவன் அமைத்த பன்னசாலையில் வானர சேனா நாயகர்கள் தன்னைச் சூழத் தங்கி அனுமன் உபசரிக்க இனிது அமர்ந்திருந்தான். அப்போது வானரத் தலைவர்கள் ஆகிய மயிந்தன் கேசரி முதலியோர் சாமி புட்கரிணியின் வடகீழ்பால் உள்ள வனத்தினூடே சென்று ஒரு குகையினுள் புக்குப் போக என்றும் கண்டு அறியாத பேரொளியைக் கண்டனர். கண்டு வியப்புற்று மேலும் செல்ல ஒரு திவ்விய நகரைக் கண்டார்கள். அந்நகரின் தெருவழிச் செல்ல மண்டபம் மாட கூட கோபுரங்கள் பொன்னாலும் மணியாலும் முத்தாலும் அமைந்து பொலிதலையும், வச்சிரக் கதவுகள் மின்னுதலையும், இரத்னப் பந்தர்கள் கன்னல் கதலி கமுகு தோரணங்களோடு அழகுற்று இருப்பதனையும், நான்கு தோளாகிச் சங்க சக்கரம் ஏந்தும் திவ்விய புருடர் வசிக்கும் பூஞ்சோலை வாவி விளங்குவ

தனையும், பேரி குழல் வீணை முதலியவற்றின் இசை எழுந்து சூழ்வ தனையும் கண்டும் கேட்டும் இன்புற்றார்கள். பின்பு அங்கு மணி விமானத்தில் நித்தரும் முத்தரும் கைகுவித்து வாழ்த்தச் சேஷா சனத்தின்மேல் பீதாம்பரம் இலங்கக் கனக கேயூரம் கவுஸ்துவமணி சங்க சக்கர சார்ங்கம். முதலிய பஞ்சாயுதங்கள் விளங்க மகர குண்டலம் அசையச் சிகா மௌலி திகழ மாகத காந்தி தவழத் துளவ மாலை மார்பில் துலங்கச் சீதேவியை வலப்பாகத்தும் பூமி நீளைகளை இடப்பாகத்தும் கொண்டு விளங்கும் நின்மலனாகிய இறைவனைக் கண் டார்கள். கண்டவர்கள் களிப்புடன் அடிபாவி நிற்க, சேனை முதலி யார் அடுத்து வந்து உரப்பினர். அது கண்டு அஞ்சி அந்த இடத்தை விட்டு அகன்று வழியினை மீண்டு அடைந்தார்கள். பின்னர் வானர சேனையை அடைந்து தாங்கள் ஒரு குகையுள் போனதும் அங்குப் புதுமைகள் கண்டதும் சொல்லித் திருமால் ஆகிய கடவுளோ மாயா ரூபியான அரக்கனோ அறிகிலோம்: இன்னமும் சென்று அரக்கர் மாயையோ அன்றி மெய்யோ அறிவோம் என்று எண்ணி வானரர் களோடு மரங்களும் கற்களும் கைக்கொண்டு குகையில் நெடுந்தூரம் செல்ல இருளை யன்றி ஒளியைக் காண்கிலார் ஆகி மனத்தியக்கம் உற்றுச் சொப்பனம் கண்டோமோ என்று திகைத்து நின்றார்கள். திரும்பி வந்து சேனையோடு கூடினர். பின்பு உதய காலத்து இராமன் வானர சேனையோடு தென் சமுத்திரம் உற்றுச் சேது பந்தனம் செய்து கும்பகர்ணன் இந்திரசித்து இராவணன் முதலியோரைக் கொன்று சீதையை மீட்டு அயோத்தி சென்று முடிபுனைந்து அவ னியை நீதி அறத்தொடும் ஆண்டனன் என்று சௌனகர்க்கு வானர வீரர்கள் குகையுள் போய் மீண்ட செய்தியை விரித்துரைத்தார். அக் குகை தான் வைகுந்தக் குகை எனப் பெரியோர் கூறுவர். அதன் பெருமையைப் பிரமனும் கூற முடியாது. மாதவரும் அணுக அஞ்சுவர். நித்தர் முத்தர் உறையும் இடம் அது ஆகும். அதனுள் அடைந்த வானர வீரர்க்கு இறைவன் தோன்றி மறைந்தான் என்று சூத முனிவர் கூறினர். இது வராக புராணப் பொருள்.

## 26. தேவர்களுக்கும் தசரத சக்கரவர்த்திக்கும் வரம் கொடுத்த அத்தியாயம்.

சூத முனிவர் நைமிசவன முனிவரை நோக்கி வேங்கடாசலத்தில் அமர்ந்த கடவுளின் செயல்களைப் பற்றி வியாசமுனி எனக்கு அருளிச் செய்தவற்றைக் கேட்க என்று கூறலானார். முனிவர்கள் யாவரும் ஒன்று சேர்ந்து அரக்கரால் மெலிவுற்றுத் திருமால் அல்லாமல் நம் பகைவரை ஒழிப்பவர் யார் உள்ளார் என்று எண்ணித் திருப்பாற்கடலிடைத் துயிலும் திருமாலிடம் குறைசொல்லி வேண்டுவோம் என நினைந்தபோது நாரதர் அவ்விடம் வந்து சேர்ந்தார். முனிவர் யாவரும் மகிழ்ந்து அவர் அடி வணங்கி "பெரியீர்! எங்குச் சென்று வருகின்றீர்?" எனக் கேட்க, நாரதரும் "யான் முழுமுதற் கடவுளை வணங்குதற்காக வைகுந்தம் அடைந்தேன்: அங்கு நித்தியசூரியரும் முத்தரும் எனக்கு உரைத்தவற்றைச் சொல்லுகிறேன்: கேளும்: ஆதிநாயகன் திருமகள் முதலியோர்களுடன் பூமியில் உள்ளவர்கட்கு அருள்செய்யத் திருவுள்ளம் கொண்டு திருவேங்கடம் என்னும் திருமலையில் எழுந்தருளியுள்ளனன் என்றனர்: நான் அதனை அறிந்து திரும்பினேன்; இப்போது பிரமனிடம் போகின்றேன்; நீவிர் யாவரும் வந்தால் அப் பிரமனிடம் இவற்றைக் கூறலாம்" என்றார். அது கேட்டு முனிவர் யாவரும் நாரதரோடு பிரமனை அடைந்து "உம் அருளால் குறைவின்றி இத்துணை நாள் இனிது இருந்தோம்: இப்போது இராவணன் முதலிய கொடிய அரக்கர்கள் எமக்குப் பேரிடர் விளைவிக்கின்றனர்: அவர்களை அழித்து எமக்கு நலம் அளிப்பவர் திருமாலே அல்லது வேறு யாவர் உளர்? ஆதலால் ஸ்ரீ நாராயணனை யாங்கள் காணுமாறு அருள்க" என்று வேண்டினர். அப்போது பிரமன் தன் மனசால் இறைவன் நிலைமை அறிந்து "பூமியிலே வேங்கட மலையை அடைந்து திருமகளுடன் எல்லோரையும் காத்தருள எழுந்தருளியுள்ளான் இறைவன்; நீங்கள் யாவரும் அங்கு அடைந்து நும் குறையைத் தெரிவியுங்கள்: யானும் உடன் போதுகிறேன்" என்று பிரமனும் போந்தான். பிரமனும் முனிவர் முதலியோரும் வேங்கட மலையை அடைந்து தீர்த்தம் ஆடித் திருமாலின் அடிமலர்களை விரும்பிய உள்ளத்தவர்களாய்

வேறு வேறு அமர்ந்து தவம் புரிகின்ற காலத்தில் மனு குலத்தில் தோன்றி அயோத்தியிலிருந்து அகிலம் எல்லாம் ஒரு குடையின்கீழ் அமைய அறத்தை நிலைநாட்டி மேம்பட்ட தசரத சக்கரவர்த்தி வசிட்ட முனிவனை வணங்கிப் புதல்வர் இல்லாக் குறை கூறி வருந்த அவன் வேங்கட மலையை அடைந்து திருமகளுடன் மருவிய பெருமானின் அடிமலர் நினைந்து அருந்தவம் ஆற்றினால் ஆதி நாயகன் அருளால் அரும்பெறல் புதல்வரை யடைவாய் என்று உரைத்தமையால் அவனுடன் அரசனும் போந்து தீர்த்தம் ஆடிச் சோலையும் குகையும் ஆறும் பொய்கையும் நோக்கிப் பின்னர் சாமி புட்கரிணியை அடைந்தனர். அங்கு தேவர் முனிவர்கள் நடுவே திருமகள் கேள்வனை உள்ளத்தில் இருத்தி நான்முகன் யோகம் செய்திடுதலை வசிட்டன் கண்டு தசரதனை நோக்கி "இந்நான்முகனுக்குப் பரமன் சில நாளில் தோன்றுவான்: நீயும் இங்கு அமர்ந்து யோகத்தை நிறைவேற்றுவாய்" என்று கூறித் திரு அட்டாக்கர மந்திரத்தை உபதேசித்து அருளினன். சக்கரவர்த்தியும் குரு உபதேசித்த மந்திரத்தைச் செபித்து ஓர் ஆசனத்தில் இருக்க வசிட்டனும் அங்கிருந்து தவம் புரிந்தான். அப்போது யாவர் செவிக்கும் இன்பம் உண்டாக வானத்தில் ஓர் ஒலி உண்டாக, பிரமன் சிவன் இந்திரன் முதலியோர் அஃது யாது என வியந்து இருக்க எண்ணில்லாத சூரியர் தோன்றினாற் போல எல்லாத் திசைகளிலும் ஒளி பரவத் தேவ விமானம் ஒன்று அங்குத் தோன்ற அதன் இடையில் திருமகள் நாயகன் கனக கேயூர மகாகுண்டல பீதாம்பர தாரியாய்ச் சங்க சக்கரங்கள் கரங்களில் விளங்கக் காட்சி தந்தருளினன். அப்போது அனைவரும் ஆனந்தக் கடலுள் முழுகி ஆடிப் பாடி அடிமலர் சூடித் துதித்தனர். இறைவனும் அவர்களை நோக்கி 'நீவிர் என்ன காரணத்தால் இம் மலை அடைந்தீர்கள்' என வினவலும், பிரமன் "புலத்தியன் பௌத்திரனும் இருபது தோள்களும் பத்துத் தலைகளும் உடையவனும் ஆகிய இராவணன் என்னும் அரக்கன் என்னைக் குறித்துத் தவம் புரிந்து உலகில் மாந்தர்களால் அல்லாமல் எவராலும் மரணம் இல்லாத வரம் பெற்றுள்ளான். அவ்வரச் செருக்கினால் ஓய்வின்றித் தேவர்களுக்கு இடர் செய்கின்றான். தர்ம விரோதி ஆகிய அவனுக்கு அஞ்சி யாவரும் உம்மைச் சரண் புக்கோம்: அவனை இனத்துடன் அழித்தருளுமாறு வேண்டுகின்றோம்; பாற்கடலையும் வைகுந்

தத்தையும் விட்டு வேங்கட பர்வதத்தில் விழைந்து அமர்ந்த உம்மைத் தரிசித்த எமக்கு இனித் துயர் இல்லை" என்று கூறி இறைஞ்சினன். அப்போது இறைவன் "இனிச் சில நாளில் அவ்வரக்கனை அவன் இனத்தொடும் அழித்து உமக்கு நல் வாழ்வு அளிப்போம்: கூச வேண்டா" என்று அருளினன். தேவர் யாவரும் மகிழ்ச்சி உற்றனர். அத் தருணத்தில் அகத்திய முனிவனை நோக்கி, "நீ இங்கு உற்றவாறு என்ன" என்று வினவ, முனிவன் "நான்மறை முனிவர் பலர் அரக்கர் பயம் கொண்டு உன் பாதமே கதியெனக் கருதி இங்கு அடைந்தார்கள்: துஷ்ட சிக்ஷையும் சிஷ்ட ரக்ஷையும் செய்கின்ற கடவுள் ஆகிய நீர் அத்தீயோரைக் கடிந்து எம்மைப் புரந்திடுவீராக" என்று இறைஞ்சினன். இறைவனும் "அங்ஙனம் புரிகின்றோம்" என்று அருளிப் பின் இந்திரனை நோக்கி "இனி நீ அஞ்ச வேண்டா" என்று அபயம் ஈந்தான். பின்பு சனகாதியரை நோக்கி "நீங்கள் இங்கு அடைந்தது என்னை" என்று வினவ, அவர்கள் "ஆதிநாயக! இம் மலையில் தவம் இயற்றுவார்க்குச் சிந்தை விருப்பம் சித்தி யாம் என்பதனால் வந்த எம்மனோர்க்குத் துட்டர்கள் பேரிடர் விளைவிக்கின்றார்கள்: அவர் அழியச் செய்து இம்மலை அடைவோர்க்கு எவ்விடரும் இல்லாதிருக்கக் கருணை செய்க" என அவ்வாறே வரம் அருளி அருகில் நின்ற சிவனைக் கடைக்கணித்து "நீ அடைந்த காரணம் என்னை?" என்ன அவனும் "அண்ணலே! உலகோர் அனைவரும் பணிய அருள் செய்யும் தேவரீர் திருக்கோலத்தை நான் அருகு இருந்து தொழ வரம் தர வேண்டும்" என்று இறைஞ்ச, இறைவனும் "நீ இம் மலையை அகலாது அருகில் உறைக" என்று அருள் கூர்ந்தான். பின்னர் தசரத மன்னனை நோக்கி "நீ இங்கு வந்த காரியம் யாது" என்று வினவ மன்னனும் "ஆதி நாயக! அறத்தை நிறுத்தும் அறிவு சால் புதல்வரை அருளுக" என்று வேண்டினன். இறைவன் மகிழ்ந்து "அயோத்தியை அடைந்து வேத விதிப்படி புத்திர காமேஷ்டியைப் புரிவாய்: உனக்கு நான்கு புதல்வரை அளிப்போம்" என்று அருளினன். அதுகேட்டுத் தசரதனும் வசிட்டனுடன் அயோத்தியை அடைந்தான் என நைமிச முனிவர்க்குச் சூத முனிவன் வராக புராணப் பொருளைக் கூறினன்.

## 27. பிரமன் உற்சவம் நடத்துவித்த அத்தியாயம்.

சூத முனிவர் மேலும் கூறுவார்: இறைவன் தன் சக்கராயு தத்தை நோக்கி "அகத்தியன் என்னை வேண்டிக் கொண்டது என்னெனில் உலகில் நான்மறையாளர்க்குக் கேட்டினைச் செய்கின்ற தீயர்களைக் கிளையோடும் அழித்தல் வேண்டும் என்பது: ஆதலின் நீ அவர்களை அழித்து நல்லோர்க்கு இன்பம் ஊட்டி விரைவின் வருவாய்" என ஆணையிடுதலும், எண்ணில்லாத சூரியர்கள் எழுந்தாற் போல எல்லோர்க்கும் கண் ஒளி மழுங்கவும் வெயில் வெதும்பவும் உலகு அஞ்சவும் வான்மீது எழுந்து உலகில் தீயோர்கள் எல்லாம் சிதைந்து விழ அவர்கள் ஆவிகளை எமன் உலகிற்குச் செலுத்தி விட்டு மிக்க வெற்றியுடன் இறைவன் தாமரைக் கையகத்து வந்து சேர்ந்தது. அப்போது பிரமன் இறைவன் அடிமலர்களை வணங்கி "ஒப்பற்ற உம் திருவுருவத்தை அடியவர் எல்லாம் எப்பொழுதும் ஏத்தி வணங்கும் பொருட்டு இம்மலைமீது என்றும் இருந்தருள் செய்ய வேண்டும்: நாங்கள் தேவரீர்க்குத் துவசாரோகணம் முதலாகத் திருவிழாவை மறைவிதி மரபில் செய்து காண விரும்புகின்றோம்" என்று வேண்டிக் கொள்ள, இறைவனும் "அங்ஙனமே ஆகுக" என அருளினன். உடனே பிரமன் மகிழ்ந்து அருகு நின்ற விச்சுவ கருமனைப் பார்த்து, "முகுந்தனுக்கு முக்கிய விழாவைப் புரட்டாசித் திங்களில் நடத்துதற்குத் துவசத் தம்பம் ஒன்றினை விரைந்து செய்க" என அவனும் அதனைப் பொன் மணி முதலியவற்றால் அமைத்து நகர் வீதிகளில் எல்லாம் வாழை, கரும்பு கமுகு கொடிகள் தோரணங்கள் பொற் கும்பங்கள் மாலை வரிசைகள் முதலியவற்றால் நன்றாய் அலங்கரித்துப் பிரமனிடம் போய் ஆணைப் படி முடிந்தது என்று உரைக்க, அவன் திருவிழாவில் இறைவனுக்குத் திருவமுது படைக்க எண்ணில்லாத பண்டங்களும் கொண்டு வந்து தரிசனத்துக்கு வருவோர்கள் மகிழ்வுற அமுதுகள் தானங்கள் யாவும் குறைபாடு இன்றி நடத்தி விதிப்படித் துவசத் தம்பத்தின்மீது கொடிச் சீலையை ஏற்றித் திருமகள் கேள்வனுக்கு அதிரசம் சுகியம் மனோகரம் முதலிய பண்ணிகாரங்களும் முக்கனியும் திருவமுதும் விதம் விதமாக நிவேதித்துச் சகல வாத்தியங்களும் முழங்கக் குடை

கள் நிழல் செய்யக் கொடிகள் நெருங்கி விளங்கச் சாமரை பணிமாற மாதர் பாத நாட்டியம் செய்யச் சங்கீத கோஷம் சமுத்திர கோஷம் போல ஓங்க வித்துவான்கள் கவி பாடித் துதிக்க வேதியர் வேதம் முழங்கத் தேவர் மலர் மழை பொழிய மண்ணவரும் விண்ணவரும் மாதவரும் வாழ்த்தி இவ்விழவினைப் போலக் கண்டிலேம் என வியப்ப அன்னம், சிங்கம், ஆஞ்சநேயன், கருடன், யானை முதலிய வாகனங்களில் திருமகள் நாயகனை எழுந்தருளுவித்து நாள்தோறும் திருவுலாப் போந்தருளச் செய்து தேர்மீது வருங் காட்சி இயற்றிக் குதிரை வாகனத்தில் எழுந்தருளச் செய்து பின்னாளில் விமானத்தில் எழுந்தருளுவித்து நான்மறையோர் கும்பம் தாபித்து ஹோமம் புரியத் திக்குபந்தனம், பலியளித்தல், பொன் வழங்கல் முதலிய சடங்குகள் எல்லாம் குறைவு இல்லாது செய்து பின்னர்க் கொடிச் சீலையை இறக்கி விழாவை நிறைவேற்றினன். இறைவன் திருமகளுடன் விமானத்திருந்து அத்தாணி கொண்டு பிரமனை நோக்கி " நீ செய்வித்த இவ் விழாவால் மிக்க உவப்பு உற்றோம். ஆண்டுதோறும் இப் புரட்டாசித் திங்களில் இவ்விழாவினை இவ்வாறு இயற்றுவிப்போர் இருமைப் பெரும் பயனையும் பெறுவார். இவ் விழாக் காட்சி பெற்றோர் தாம் நினைந்தவை பெற்று வாழ்வார் " என்று அருள் செய்து சகல வாத்தியங்களும் முழங்க இறைவன் சாமி புட்கரிணியில் அவபிருத நீராடல் புரியப் பிரமன் முதலோர்கள் யாவரும் அத்தீர்த்தத்தில் நீராடினர். அப்போது சனக முனிவர் தேவர்கள் இடையே தன் கையை ஆகாயத்தில் உயர்த்திக் கொண்டு " எல்லோரும் கேளுங்கள் : சத்தியம் ஒன்று கூறுகின்றேன் : வேதசாரப் பொருளைப் பார்க்குங்காலும், தியான மூலமாய் நோக்குங்காலும், மூன்றுலகத்திலும் முதன்மை பெற்ற இச் சாமி புட்கரிணியில் அவபிருதம் ஆடுவார்கள் முன் சனன பாவத்தைக் கணப்பொழுதில் விட்டு நீங்குவார்கள் " என்று உரைத்ததைக் கேட்டு யாவரும் வியப்புற்றார்கள். பின்னர் யாவரும் இறைவனை வணங்கி வாழ்த்தப் பிரமனுக்குச் சத்தியலோகம் செல்ல விடையளித்து இந்திரனைப் பொன்னுடு ஏக ஏவிச் சிவனை அவன் உலகிற்குச் செல்லப் பணித்துத் தேவர் மாதவர் யாவர்க்கும் அவர் அவர் இடம் செல்லக் கட்டளை செய்து உலகு உள்ளோர் யாவரும் என்றும் காட்சி பெறுமாறு ஆனந்த நிலய விமானத்தில் எழுந்தருளி யிருக்கின்றான் என்று கூறி முடித்தார். இது வராக புராணத்து உள்ளது.

## 28. சக்கர வேந்தன் வெற்றி உரைத்த அத்தியாயம்.

சௌனகாதி முனிவர்கள் மேலும் வராககிரி முதல்வன் பெருமைகளைக் கேட்க விரும்புகிறோம் என்னச் சூத முனிவர் கூறலாயினர்: திருமாலின் திருவிழா நிகழ்ச்சி முடிந்த பிறகு பிரமன் இந்திரன் தேவர்கள் யாவரும் தம் தம் இடம் அடையச் சிவன் சேஷகிரியை வலம் வருங்கால் வழியில் ஓர் இடத்துக் கபில தீர்த்தத்தை கண்ணுற்று இவ்விடத்தே இருந்தால் அஞ்சனாசலப் பெருமான் ஆகிய சீநிவாசன் சேவை நலமாய் நாள்தோறும் கிடைக்கும் என்று எண்ணி அந்த இடமே கைலாஸம் ஆகக் கொண்டு மகிழ்ந்திருக்கின்றான்: அவ்விடத்தை உலகினர் காளஹஸ்தி என உரைப்பர்: ஞானியார் ஆகிய சனகர் முதலிய யோகியர் கூட்டம் எல்லாம் பாபநாச தீர்த்தத்துக்கு அருகிலுள்ள வனங்களில் சஞ்சரித்தல் உண்டு எனக் கூறி மேலும் சொல்லுவார்:—சூரியன் வெப்பம் அணுகாத என் ஆசிரமத்தில் முன்பு ஒருகால் அருந்ததி ஆகிய கற்பு அரசி இலக்குமியை மனத்தில் தியானித்துத் தவம் செய்யத் திருமகள் அவள் முன் தோன்றிப் பல வரங்களைக் கொடுத்து அவ்விடத்திற்கு அருகில் உள்ள தெச நதிகளில் பங்குனி மாத உத்திர நாளில் முழுகி என்னைத் துதிப்பவர்கட்குச் சிந்தித்தவை எல்லாம் அளிப்பேன் என்று அருளிச் சென்றாள் என்று உரைக்கச் சௌனகர் சூத முனிவரை நோக்கித் தீமை புரியும் அரக்கர்களைச் சக்கரத்தாழ்வான் அழித்தனன் என்று உரைத்தீர்களே: அவ் வாலாற்றை விவரித்து உரைக்க வேண்டும் என்னச் சூத முனிவர் கூறலாயினர். இறைவன் ஏவல் மறுக்காது சக்கரத்தாழ்வான் வேந்தன் வடிவம் மேற்கொண்டு ஆயிரம் காங்களோடு குதிரைகள் பூட்டிய பெருந் தேரைச் செலுத்திச் சூரியன் உதயம் ஆகும் கீழ்த் திசையில் கேசி என்ற மலை வனத்தை அடைந்து அங்கு உள்ள துஷ்டர்கள் யாவரும் எம பாசத்தாற் கட்டுண்டு இறக்கும்படித் தாக்கிப் பின் அக்கி உறையும் தென்கீழ்த் திசையில் தேரைச் செலுத்தி அத் திக்கின்கண் உள்ள தீயோர்களைச் சிரகா களேபர பங்கம் செய்து பின்பு தெற்குத் திசைக்கண் ஊழித் தீ என்னும்படி செல்ல, அங்கு உக்கிராங்கன், அங்கன், புளிந்தன், காலன், முத்தாயிகன், காலகன் என்னும் பஞ்ச துஷ்டர்கள் பஞ்ச பாதக வடிவாகத் தோன்றி நாக

விஷம்போல் சீறிச் சக்காயுத வேந்தனின் வருகை கண்டு இவன் துணையின்றி இங்குப் போந்தான் என்று சதுரங்க சேனையோடும் ஆர்ப்பரித்துச் சூழ்ந்து வளைத்துக் கொள்ளச் சக்கரவேந்தன் ஊழிக் கனலும் அஞ்சும்படி வில்லினின்று அம்பு மழையைச் சொரிந்தான். துஷ்டர்களும் வாள், சூலம், வேல், மழு, கதை முதலிய படைக்கலங் களால் தாக்கிக் கொடிய போர் செய்தார்கள். போர்க்களத்தில் எழுந்த தூளி ஆகாச கங்கையையும் சேறு ஆக்கி இமையாத தேவர்களும் இமைக்குமாறு பரந்தது. அப்போது சக்கர வேந் தனும் அத்துஷ்டர்கள் உயிரைப் போக்கினன். சேனையொடு அவ் வைவரும் பட்டது கண்ட அவர்கள் தலைவன் ஆகிய அயசிரசன் மிக்க கோபம் கொண்டு சக்கர வேந்தன்மீது வாளி தொடுத்தான். அப்போது சக்கர வேந்தன் அவன்மீது ஆக்கினேயாஸ்திரத்தை விடுத்து அவனை யமலோகத்துக்கு அனுப்பிவிட்டு வெற்றியுடன் தென் மேற்குத் திக்குக்குச் சென்று அங்குள்ள தீயோரை ஒழித்தான். பின்னர் விரைவாக மேற்குத் திசைக்கண் செல்ல அங்கு மலைபோன்ற மேனி உடையவனும் கொலை நிருதனும் ஆகிய வனகர்த்தன் என்பான் பல நாளாய்த் தேவர் தைத்தியர் மனிதர் முதல் யாவ ராலும் போரில் தோல்வி அடைந்து உயிர் துறவாத வெற்றியுடைய புதல்வன் ஒருவனை வேண்டிச் சிவனைக் குறித்துத் தவம் புரிந்தான். சிவனைக் கண் எதிர் காணுமையாலே மனம் அழன்று தன் தலையை அறுத்து ஆகுதியாக அக்னியில் இடுவேன் என ஆயுதத்தைக் கைக் கொண்ட பொழுதில் சிவன் மனம் இரங்கி அவன் முன் தோன்றி அவன் விரும்பிய வரத்தைக் கொடுத்துச் செல்ல அது பெற்ற செருக்கோடு இருப்பவன் சக்கர வேந்தன் வருகையை அறிந்தான். உடனே தன் படைஞர் புடைசூழத் தேவரும் அஞ்ச வந்து எதிர்த் தான். கொடியோர் சூலம் வேல் தோமரம் முதலிய எறிந்து வஞ் சினம் பகர்ந்து அடர்ந்தார். சக்கர வேந்தன் வாளிகள் பெய்து அவர் கைகால் அறக் கொன்று வீழ்த்தினன். சேனைகள் இறந்தமை தெரிந்த நிருதன் சுவாலபாதன் என்பானை ஏவ, அவன் மீதும் சக்கர வேந்தன் எண்ணில்லாத அம்புகளை விடுத்துக் கொன்று பின்னர் வனகர்த்தன்மேல் செல்ல, அவன் சீறி எழுந்து பாண மழை சொரிந் தான். அப்போது சக்கர வேந்தன் அவன் உடல் சிதைந்து விழக் கொன்று குவித்து நாய் நரிகட்கு இரையாக்கி வெகுண்டு வடதிசைக்

கண் சென்றான். அத் திசையில் மலைபோன்ற அரக்கன் ஒருவன் பிரமனிடம் பெற்ற வரச் செருக்கினால் பூமியில் தீங்குகள் பல புரிந்த பேரண்டவன் என்னும் பெயருடையான்—யவனன், காம்போசன், மிலேச்சன் என்ற அரக்கர்கள் தலைவன்—சக்கர வேந்தன் வந்தமை கேட்டுப் பெருஞ் சேனையைத் திரட்டி மண்ணவரும் விண்ணவரும் மயக்கம் உறும்படி எதிர்த்தான். அப்போது சக்கரவேந்தன் அவன் முன்பு விரைந்து எதிர்க்க மலை என்ன எண்ணில்லாச் சேனையோடு அவன் நின்றமை அறிந்து தனக்குப் பெரும் படைத்திரள் உண்டாமாறு திருவுளம் கொள்ள அவ்வாறே பெரும்படை உளது ஆயிற்று. இருதிறச் சேனையும் போர் செய்யுங்கால் தன்சேனை தாழ்ச்சி அடைதலைப் பார்த்துச் சக்கர வேந்தன் தானே சினமடங்கல் போலப் பாய்ந்து எதிர் ஏறிக் கொடும்போர் புரிய அவன் கோபத்தினின்று பாவகன் என்னும் ஒருவன் தோற்றம் செய்து இடியென முழக்கிப் பலபடைக் கலங்கள் கொண்டு நெற்றிக் கண்ணனைப்போல் நின்றான். சக்கர வேந்தன் அவனை நோக்கி இந்த நிருதர்களைக் கொன்று விரைவில் வருக என்று ஆணையிட்டவுடன் அவன் கனன்று வில்லெடுத்து மோகனாஸ்திரத்தை விடுத்தான். அவ்வாளியின் வேகத்தாலே நிருதர்கள் தம் படைக்கலங்களைக் கைநழுவ விடுத்து நிலத்தில் விழ முன்பு நிலத்தில் சோர்ந்து வீழ்ந்த சக்கர வேந்தன் படைகளை எல்லாம் பாவகன் கருணையினாலே தெளிவித்தான். இதனைக் கண்ட நிருதபதி தன் சேனையும் மயக்கம் நீங்கி அதிர்த்து எழும்படி செய்தான். உடனே இரு சேனைகளும் மிக்கு மண்டிக் கொடும்போர் புரிந்தன. பாவகன் கிரௌஞ்ச வாளி விடுத்துச் சேனையை யழிக்க நிருதன் ஐந்து பைசாசக அம்புகள் விடுத்து நிற்க அவை ஐந்து கோடியாகிப் பெருகிப் பாவகன் விடுத்த கிரவுஞ்ச வாளியோடும் கூடிக் கொண்டு அரக்கர் சேனையையே அழிக்க இது கண்ட பேரண்டவன் "இஃது அற்புதம்" என்று எண்ணித் தான் பிரமனிடம் பெற்ற சூலத்தினைத் தாங்கிப் போந்து விடுதலும் அஃது அண்டத்தை முட்டிக் கனலென நெருங்கக் கண்ட பாவகன் உடனே வாயவ்வியாஸ்திரத்தை ஏவ அஃது அக்கணத்திலேயே அச் சூலத்தோடு அவனையும் விரைவில் வாரிக் கொண்டு சென்று சேஷகிரியை வலமாக வந்து நூறு யோசனைக்கு அப்பால் தரையின்மீது எறிந்தது. பேரண்டவன் நிலத்தில் வீழ்ந்து இறந்தான். சக்கர வேந்தனைத் தேவர்கள் வாழ்த்

திப் போற்றி மலர் மழை சொரிந்தனர். இங்ஙனம் வேதியர்க்கு இடுக்கண் புரிந்த வெய்யோர்களை எல்லாம் சக்கர வேந்தன் அழித்துச் சீநிவாசப் பெருமான் திருக்கையில் போந்திருந்தான். இவ் வரலாறு வராக புராணத்து உள்ளது.

## 29. இராமாநுசன் பிரார்த்தனைப்படி சீநிவாசன் சங்கு சக்கரம் தரித்த அத்தியாயம்.

வேங்கட மலைமீது விளங்கும் சீநிவாசன் புகழ் அமிர்தத்தை இன்னும் சொல்லுக என்றலும் சூத முனிவர் சொல்லல் உற்றனர். சோழ சக்கரவர்த்தியின் புதல்வன் ஆகிய தொண்டைமான் சக்கரவர்த்தி வெற்றி பெறும் பொருட்டு முன்பு தன் சங்க சக்கரங்களை அவன் கையில் கொடுத்து அவனுக்கு வரம் கொடுத்த படியாகவே பல நாள் சீநிவாசப் பெருமான் தன் சங்க சக்கரங்களை உலகினர் கண்களுக்குப் புலப்படாதபடி ஒளித்து வைத்தனன். அப்பெருமானின் திருவடியைக் கண்டவர்கள் தம் தம் கருத்துக்கு இயைந்தபடி அரன் என்றும் குமரன் என்றும் மாயவன் என்றும் பலவாறு சொல்லிச் சமய வாதங்களால் வேறுபாடு உற்றுப் பகைமை கொள்வார்கள். ஆதி யுகத்தில் ஆதிசேஷனையும், இரண்டாம் யுகத்தில் இலக்குவனையும், மூன்றாம் யுகத்தினில் பலராமனையும் தோன்றி நான்காவது கலியுகத்தில் இராமாநுஜ முனிவரனைச் சீபெரும்பூதூரில் அவதாரம் செய்து வரும் அநந்தாழ்வான், சீபாதத்தால் உலகளந்த திருமகள் நாதனை பெருமானே எக் கடவுளினும் மேல் ஆகிய பரம்பொருள் என்று நாட்டி மயக்கம் மிக்க அத்துவைதம், கொடிய பாஷண்ட மதங்கள் ஆகிய பேர் இருள்கள் கெடும்படிச் சூரியனைப் போன்று ஒப்பற்று விளங்கிப் பண்டைய வேத நெறியொடு திருக்குருகூரின்கண் வந்த மெய்ஞ்ஞானத் தமிழ் மறை ஆகிய திருவாய்மொழி ஓங்கும்படிச் செய்து சரசுவதி தலைமேல் கொண்டு பாராட்டும்படி ஸ்ரீ பாஷியம் இயற்றிப் பொய் ஒழுக்கம் நிலைகெடவும் வைதிக தர்மம் தலை எடுக்கவும் செய்து யதிராசர் என்று உலகில் பாராட்டு உற்று வேங்கட மலையை அணுகி அங்குள்ள குதர்க்க வாதிகளை வாதத்தால் வென்று அடக்கி வேங்கடத்து அண்ணலை வாழ்த்தி நின்று

'திருமாலே! இக்கலியுகத்தில் சங்க சக்கரங்களை மக்களுடைய ஊனக் கண்களுக்குப் புலப்படாதபடி இவ்வாறு ஒளித்து நின்றால் அவர்கள் இருள் பற்றிய மனத்தினராய் உண்மை உணராமல் தம் முள் பகைப்படுவர்: ஆகையால் உலகினர் யாவரும் அறியுமாறு சங்க சக்கரங்களைத் தாமரைக் கைகளில் தரித்தருளித் தரிசனம் தந் தருளல் வேண்டும்' என்று வேண்டலும் அவ் வண்ணமே அப் பெருமான் தரிசனம் தருவான் என்று கூறி இப் பரன் திருவிளை யாடல் எல்லாம் எவராலும் அறிந்து உரைக்க முடியாது என்று உரைத்தார். இது வராக புராணப் பொருள் ஆகும்.

## 30. வைணவச் சிறப்பு உரைத்த அத்தியாயம்.

சௌனகர் முதலியோர் சூத முனிவரை நோக்கி வைணவத்தின் சிறப்பினை எடுத்துரைப்பீராக என்று வேண்டலும் அவர் கூறலாயி னர். விஷ்ணு சம்பந்தம் பெற்றவர்களாகிய ஸ்ரீ வைஷ்ணவர்கள் திருவேங்கடமுடையானுடைய திருக் கண்ணோக்கத்தைத் தம் கரு விலே பெற்றவர்களாய், வைதிக சாஸ்திரங்கள் யாவும் தேர்ந்து சாத் வீக குணம் உடையவர்களாய், பரமபதத்தைப் பெறுவதில் இச்சை அடைந்து ஆசாரியரிடத்தில் பக்தி உடையவர்களாய், தம் தோள் கள் இரண்டிலும் சங்க சக்கர முத்திரைக் குறிகள் விளங்கப் பெற்ற வர்களாய், அழகுறப் பன்னிரு திருமண் காப்பு விளங்க இட்ட வர்களாய், துளசி மாலை தாமரைமணி மாலை பூண்டவர்களாய், அருள் ஆகாரம் அனுஷ்டானம் உடையவர்களாய், ஆசாரிய உபதேசத்தாலே திருமகள் கொழுநன் ஆகிய விஷ்ணுவே பரப்பிரம வஸ்து என்று மனம் தெளிந்தவர்களாய், அவ்விறைவன் திருவடி களில் தங்கள் பரம் எல்லாம் சேர்த்துத் தவங்கள் எவற்றினும் சிறந்தது என்று பெருமை பெற்றுள்ள பிரபத்தி என்னும் சரணாகதி யைச் செய்து திருவேங்கடமுடையான் திருவருளாலே புண்ணிய பாவங்கள் போய்ப் பரிசுத்தராய், மனம் வாக்குக் காயம் என்னும் மூன்று கரணங்களாலும் வேறு தேவர்களையும் அத்தேவதை களின் மந்திரங்களையும் சாதனங்களையும் அயல் சார்புப் பயன்களையும் முற்றும் விடுத்து ஆசாரியன் உபதேசித்த திருமந்திரத்தை நாள்

தோறும் உச்சரித்து அதன் அர்த்த விசேடங்களை அநுசந்தானம் செய்து பரமபதம் பெறுதலைக் குறித்து உடல் சுற்றத்தார் மேற் செல்லும் பற்றினைக் கழித்து வேறு பயன் விரும்பாது உள்ளத்து உவப்புப் பெற்றவராய், எவ்வாற்றானும் வாழ்நாள் முற்றும் திருமால் திருவடிகளையே அநவரதம் வாழ்த்தி அவன் அளப்பரிய குணப் பெருங் கடலுள் திளைத்து ஆடி ஓர்மை உள்ளம் பெற்று உலகினையும் அவ்வாற்றால் திருத்தி என்றும் அவ்விறைவனுக்கே பாரதந்திரப் பட்டவர்களாய், அவனுடைய அடியவர்கள் ஆகிய பாகவதர் பக்கலிலும் அப்பற்று உடையவராகி ஊழியம் புரிந்து இன்ப துன்பங்களை ஒப்பன ஆகக் கண்டு பகவான் பாகவதர் ஆசாரியர் இவர்களிடத்தில் உறுதியான பக்தியுண்டாய் ஆசாரியன் கட்டளை களை மனத்தில் கொண்டு திருவேங்கடமுடையான் திருவருள் நோக் கத்தை எதிர்பார்த்து நன்னிலையில் நிற்கின்றவர்களே ஆவர். ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கே பரமபதமானது உரிமை உடையது. இவ் வித மனத்தெளிவு இல்லாத கீழ் மக்களுக்கு அது கிடைப்பது அரிது என்று வேதத்தாலும் வைதிக மாதவர்களாலும் நான் அறிந்து கொண்ட இது ஸ்ரீ வைஷ்ணவச் சிறப்பு ஆகும். இது சுருக்கம். இதன் விரிவு வராக புராணம் க்ஷேத்ர காண்டத்தில் கூறப்பட்டுள் ளது. அதனைக் கேட்டு உணர்வோர் இவ்வுலகில் சிறப்புற வாழ்ந்து பரமபதம் பெறுவர் என்றார்.

## 31. தத்துவம் கன்மம் ஞானம் பிரபத்தி மார்க்கம் உரைத்த அத்தியாயம்.

சூத முனிவர் மேலும் சௌனகாதியருக்குத் தத்துவப் பொருள், கன்மம், ஞானம், பத்தி, வைராக்கியம், பிரபத்தி மார்க்கம் முதலியவற்றைக் கூறலாயினர். பிரம்ம கற்பத்தின் முடிவில் பிரமன் சிவன் இந்திரன் தேவர் முதல் ஏழாகக் கூறப்பட்ட உயிர்த் தோற் றங்களோடு நிலம் நீரிலும், நீர் தீயிலும், தீ வாயுவிலும், வாயு ஆகா சத்திலும், ஆகாசம் இந்திரியத்திலும், இந்திரியம் தன்மாத்திரையி லும், தன்மாத்திரைகள் பூதத்திலும், பூதம் மகத்தத்துவத்திலும், மகத்தத்துவம் அவ்வியத்தத்திலும், அவ்வியத்தம் அக்ஷரத்திலும்,

அக்ஷரம் தமசிலும், தமசு பரனிடத்திலும் பொருந்தி ஒடுங்கும். இவ்வகை யாகவே தூல சூக்குமங்கள் எல்லாமும். இவற்றை எல்லாம் தன்பால் அடக்கியுள்ள தனிப் பரமன் ஒருவனே என்றும் நிலையுற்றிருப்பவன். அவன்பால் நின்றும் ஒடுங்கிய முறையே வந்து தோன்றிடும் தத்துவங்கள் எல்லாம் அவன் சரீர ரோம கூபங்களைக் காட்டிலும் அதிசயமாய்த் தோன்றும். எண்ணில்லாத கோடி அண்டங்களில் பொருந்தியுள்ள சதுமுகனும் அரனும் இந்திரனும் முதலிய பற்பல உயிர்களிடத்தும் உள்ளுயிராய்ப் பொருந்தி விளங்குகின்ற அப் பரமனையே ஏகோ நாராயணன் என்றும் ஆதிப்பொருள் என்றும் பிரமம் என்றும் பரஞ்சோதி என்றும் விஷ்ணு என்றும் பரந்தாமன் என்றும் பரமன் என்றும் நாயகன், நாதன், காரணன், கமலை கொழுநன், ஆரணன், அந்தர்யாமி, பூரணன், பகவன், பராபரன் என்றெல்லாம் சொல்லுவர். இப்பெருமை வாய்ந்த நாரணன் நலம் அந்தம் இல்லாத வைகுந்தத்தில் திருமகள் பூமகள் நீளை என்ற தேவியரோடு ஆதிசேட கருட விசுவசேனர் முதலாய நித்தர் முத்தர்கள் திருவடி பரவ வீற்றிருந்து அருள்கின்றான். சேய்மையான நாட்டுக்குச் சென்ற மைந்தர்கள்மீது பெற்ற தந்தைக்கு மனக்கவலை உண்டாதல் போல அண்டங்களிலுள்ள உயிர்களுக்கு அருள்செயத் திருவுள்ளம் கொண்டு அணுக்கர் துயரால் அரற்றும் ஒலிக்குத் திருச்செவி சார்த்தித் திருமகள் நிலமகள் நீளை ஆதிசேடன் முதலியோர் தன்னைச் சூழத் திருப்பாற்கடலில் எழுந்தருளியதினும் சீவகோடிகள் திருந்தாமை கண்டு, இருந்தும் கிடந்தும் பார்த்து அதில் காரியம் தாழ்க்கும் என எண்ணி, இனி நின்று புவன சீவராசிகளைத் திருந்தச் செய்வோம் என முன்னி, யாவரும் அடைந்து தொழுது விரும்பியவற்றை விரைவின் அடையும்படியாக இந் நிலவுலகில் அநந்தனை மலையாகும்படி செய்து அதன் உச்சியில் சாமி புட்கரிணியின் அருகில் இலக்குமியுடன் சேஷன் கருடன் சேனை முதலிய நித்தர் முத்தர்களோடு நின்ற திருக்கோலமாய்ச் சேவை கொடுக்கச் சீநிவாசன், பெரியப்பன், மலையப்பன், வேங்கடத் துறைவார், செல்வர் என்னும் ஐந்து திருவடிவுகளுடன் ஆதி வாராக மூர்த்தியுமாய் அர்ச்சாரூபனாய் நின்று கற்ப காலம்வரை தேவர் மாந்தர்கள் நாள் தோறும் பூசை செய்யும்படி அமர்ந்துள்ளான். நிலவுலகில் நன்மாந்தர் செய்கின்ற கரும ஞான பக்தி யோகங்களுக்கும், இவற்றின்

பிரிவு ஆகிய இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தியானம், தாரணம், சமாதி என்ற எண்வகை உறுப்புக்களுக்கும், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல், ஓதல், ஓதுவித்தல் என்னும் அறுதொழிலுக்கும், பிரம்ம, தேவ, பிதிரர், மானிட, பூத யக்ஞங்களாகிய ஐம்பெரு வேள்விகளுக்கும், தக்கிணை ஆகவனீய காருஹபத்தியம் ஆகிய மூன்று அனலுக்கும் மற்றைய மதங்களுக்கும் நித்திய நைமித்தியங்கள் எவற்றுக்கும் தானே தலைவன் ஆகியும், பகைவரைப் போக்கி உலகில் நிறைவேற்றுகின்றவன் ஆகியும் விளங்குகின்றான். இவ்வகைத் தர்மங்கள் எல்லாம் அவ்வீசனுக்கு உவப்பாய்ப் புரிந்து அவன் திருவடி மலர்மீது தம்பரம் எல்லாம் வைத்துத் தேசிகன் அருள் பெற்ற அறிஞர்க்கு உயர் பதத்தைத் தருவான். வேங்கடவனைப் பரமன் எனப் பூஜிப்பவர்களுக்கு விருப்பங்களை அளிப்பான். பிரணவத்துடன் அவன் பெயரைப் பிணைத்துக் கூறுவோர் உள்ளத்தில் என்றும் எழுந்தருளுவன். திருமகள் கொழுநனுக்கு அடிமை செய விரும்பி இந்திரியங்களை அடக்கி யோகம் செய்வதற்குத் தேசிகனை அடைந்து அவன்பால் உபதேச மந்திரம் பெற்று யோகம் செய்பவர்கள் உலகில் வன்மையாகிய உடம்பு பெற்று இறப்பை வென்று நீண்ட காலம் வாழ்வர். கன்ம ஞான பத்தி வைராக்கியங்களை எல்லாம் தருவது ஆகிய வேங்கட மலையில் சித்தர் சாத்தியர் சேவிக்க நலங்கள் எல்லாம் தரும் பாவநாசன தீர்த்தத்தின் உத்தர பாரிசத்தில் உள்ள புண்ணிய தீர்த்தத்தில் முழுகி முக்கோடி தீர்த்தத்திலும் சனக தீர்த்தத்திலும் நீராடி வேங்கடத்து இறைவனை மிக்க விருப்புடன் தியானித்துத் திருமந்திரத்தைப் பதினாயிர முறை உருவிட்டு யோகம் புரிவோர் உடல் பலமும் ஒளியும் பெற்றுச் சிறந்திடுவார்கள். பல முனிவர்கள் தீர்த்த பரீட்சையின் நிமித்தம் முன்பு சனக தீர்த்தத்தில் ஒரு வெண்ணிற இலையினைப் போகட அந்த இலை கரு நிறம் பெற்றது. ஒரு கல்லை இட்ட அளவில் அஃது ஓர் அந்தணன் உருவம் அடைந்து நின்றது. இறந்து எலும்பு ஆகிய ஒரு பிராமணன் மனைவியும் குழவியும் உயிருடம்பு பெற்றதும், கூன் கிழவன் குமரன் ஆனதும் எல்லாம் திருவேங்கடத்தில் உறையும் இறைவன் திருவருளே. இருபத்துநான்கு தத்துவங்களோடு கூடிய உடம்பினைக் கொண்டு நாளும் அவனுக்கே அடிமை செய்வது நித்தியம் ஆகும். மக்கள் மனைவி

பொன் பொருள் முதலிய எல்லா உடைமையும் இறைவனுக்கே உரியவை என்று தொண்டு செய்வோர் தூயவர் ஆவர். இவ் வாழ்க்கைப் படுகுழியில் வீழ்ந்து அவன் பணி செய்யாதவர்கள் சாமித் துரோகிகள் என்று உலகினர் கூறுவர். இறைபணி புரிவோர் இன்னல் இன்றி வீட்டு இன்பம் நுகர்வார்கள் என்று சூத முனிவர் கூறினர்—இது வராக புராணப் பொருள்.

## 32. சௌனகாதியர் திருவேங்கடத்தானை ஆராதித்து வரம் பெற்ற அத்தியாயம்.

சௌனகாதி முனிவர் சூத முனிவரை நோக்கி "திருவேங்கடத்து இறைவனை முன்னோர் எவ்வாறு பூசித்தார்கள்: அதனை விரித்து அருள வேண்டும்" என்று கேட்க, அவர் "முன்பு கபில முனிவர் ஆதிசேடனை இவ்வாறு கேட்க அவர் அருளியதை நான் சொல்லுகிறேன்: கேட்பீராக" என்று சொல்லுவார். "இரணிய கர்ப்பர் சொன்னமுகி நதிக்கரையைச் சார்ந்து அலர்ந்த தாமரை மலர்களைக் கொண்டு சேட மலையப்பனை நூற்றெட்டுத் திருநாமங்கள் ஓதிப் பத்தியினால் அர்ச்சித்துப் பல வரம் பெற்றனர். இவ்வாறே இத்தலத்தில் பல தவசியர் பூசித்து எண்ணிய பேறு பெற்று இறுதியில் முத்தியும் பெற்றார்கள். ஆகையால் நீங்களும் அவ்வாறு செய்தால் திருமாலின் திருவருள் பெறுவீர்கள். இறைவன் திருப்பெயரோடு பிரணவத்தைச் சேர்த்து ஓதினால் எல்லாம் பெறுவீர்கள். அத்திருநாமங்களுக்கு அங்க நியாச தேவதை பிரமன். அனுஷ்டுபு ஆகும் சந்தசுக்குச் சேடகிரி தேவனே அதிதேவதை. அவன் மலர் அடியை மனத்தால் தியானித்துக் காராம் பசுவின் பாலினால் திருமஞ்சனம் செய்து தியானித்தால் எல்லாப் பயனும் பெறலாம்" என்று கூறினர். இது கேட்ட சௌனகாதியர் மகிழ் கூர்ந்து நாங்கள் திருவேங்கடத்தப்பனைத் தரிசித்துப் பூசித்துத் திரும்ப விரும்பினோம் எனச் சூத முனிவரும் அதற்குடன்பட்டனர். சௌனகாதியர் புறப்பட்டுத் தாம் எதிர்ப்பட்ட நதிகளில் நீராடிச் சேடகிரியை அடைந்து சுவர்ணமுகி நதியில் நீராடிச் சூத முனிவர் உரைத்தபடியே கோனேரியில் முழுகி வேங்கடவனை விருப்பொடு தரிசித்து

முன்பு உரைத்த திரு மந்திரத்தினால் அர்ச்சனை செய்து "இறைவனை எங்கள் பழவினைகளை அறுத்து அருள் செய்க" எனப் பணிந்தனர். இறைவன் முனிவர்களை நோக்கி "இம் மலையில் எண்ணில்லாக் காலம் இருந்து மாதவங்கள் செய்த பெரும் பயனை அடைவீர்கள் : உலகில் வேங்கடப் பெருமை வழுத்துபவர்கள் கேட்பவர்கள் விருப் பத்தொடும் எழுதுபவர்கள் பூசிப்பவர்கள் தூரதேசங்களில் பாவச் செய்வோர் அவர்மீது அன்பு கொண்டு பொருள் வழங்குவோர் இவர் எல்லாம் இம்மையில் பெரு நலம் பெற்றுப் பரகதியில் சேர அருள் செய்தோம்" என்று அருளினன். பின்பு சௌனகாதியர் ஆங்கு ஓராண்டு வசித்துப் பின்னர் நைமிச வனம் வந்துற்றார்கள். அப்போது சூதரை நோக்கி அவர்கள் வேங்கட மலையில் தீர்த்தங்கள் ஆடி ஆதி வராகன் அடிமலர் இறைஞ்சிப் பேறு பெற்ற தன்மையை உரைத்தார்கள். அப்போது சூதரும் திருவேங்கடத்து அப்பன் திருவருட்கு எல்லையே இல்லை என்று பாராட்டினர். இது வராக புராணப் பொருள்.

## 33. சேடகிரி நான்கு யுகத்துக்கு நான்கு பேர் பெற்ற அத்தியாயம்.

சௌனகாதியர் சூத முனிவரைப் பணிந்து "இவ்வுலகில் மலை கள் எவற்றினும் மிக்க பெருமை பெற்றுளது எது? அதனை வகுத்து உரைப்பீராக" என்று வேண்டினர். அவ்வாறே சூத முனிவர் கூறத் தொடங்கினர். "கங்கா நதியின் கரையில் வியாச முனிவர் எனக்குச் சொல்லியது என்னெனின் மலைகள் எவற்றினும் சிறந்து பொன் மயமாய் விளங்கும் மேரு மலையை நாரத முனிவர் அடைந்து அங்கு சூரியனை ஒத்த மணிகளால் அணி செய்யப்பட்ட ஒரு விமானத் தினையும் அதற்கு நேராக வடக்கின்கண் ஒப்பு இன்றி விளங்கிய ஒரு மண்டபத்தினையும் நோக்கி உள் புகுந்து சென்ற அளவில் அதனி டையே பவளம் முத்துக்களால் அழகுறுத்தப்பட்ட உள் மண்டபத் திடையே மின் போலக் கதிர் விரிக்கும் மாணிக்கப் பீடத்தின் மீது நிறை திங்கள் போன்ற திருமேனியுடன் வராக முகம் விளங்க, நான்கு தோள்கள் துலங்க, இரு குண்டலங்களும் திருமுடியும்

சங்க சக்கரமும் இலங்க, கவுத்துவமும் பொன்னுடையும் மின்ன, அணிகலன்கள் பிற உறுப்புகளில் மிளிர, வானவர் பெருங்குழு கைகுவித்து வாழ்த்த வீற்றிருந்த வராகப் பெருமானைப் பார்த்துப் போற்றி செய்து அகத்து அடங்காத ஆனந்தம் உடையவராய் நின்ற போது, நிலமகள் அவர் முன் தோன்றி வணங்க, வராகப் பெருமான் அவளை மகிழ்ச்சியுடன் கைகளால் வாரி எடுத்து மடிமீது வைத்துச் சொல்லுவாராயினர். பூ மகளே! உன்னைப் பாதாளத்தினின்று யான் ஏந்தி வந்து ஆயிரம் முடிகளை யுடைய ஆதிசேடன் தலையில் நிறுவி எண்ணில்லாத மலைகளைச் சார்பாகச் சேர்த்தி ஆதிசேடனுக்கு ஆதாரமாக யானே சுமந்து கொண்டிருக்க உனக்கு ஒரு தீமையும் இல்லை: என்றார். அது கேட்ட நிலமகள், பெருமானே! உமது அருள் உடையார்க்குத் தீங்கு அணுகாதது உண்மையே: என்னை ஆள்வது உம் பரமே: எனக்குச் சார்பு ஆகப் பல குல மலைகளைப் பொருந்த வைத்ததாக அருளினீர்கள். அவற்றுள் மிக்க சிறப்பினை யுடைய மலையின் இயல்பை எனக்கு அருள வேண்டும் என்றனள். அவ்வாறே கூறுவார்: மேரு, இமயம், சாளக்கிராமம், சித்திரகூடம், அஞ்சனம், சுவணம், நீலம், பாரியாத்திரம், மாலியவான், சுவேதம், மலயம், சிங்காத்திரி, மேரு புத்திரன், கெந்தயாதனம், கைலாயம், கீர்த்தி பூதபம், சிருங்ககிரி, மந்தரகிரி, ஏமகூடம், மகேந்திரகிரி, இடப கிரி, வாரகம், நிடதம், அத்திகிரி, அருணம், விந்தியம், கடிகாசலம் என விளம்பப் பெறும் மலைகள் சிறப்பின ஆகும். அவ்திகிரிக்கு ஐந்து யோசனை அளவில் வடக்குப் பக்கத்தில் பொன் முகலி என்ற யாறு உள்ளது. அதற்கு வடக்கில் மணம் மிக்க கமல தீர்த்தம் உள்ளது. அங்கே சுக முனிவர்க்கு அருள் செய்து பலராமனுடன் ஸ்ரீ கிருஷ்ணன் அடியார் குறை நீக்கி எழுந்தருளியுள்ளான். அங்கு வேங்கட மலையின்மேல் சாமி புஷ்கரிணி என்று பெயர் விளங்கும் திவ்ய தீர்த்தத்தின் மேற்றிசையில் உன்னொடு களிப்புற்றிருக்கின்றோம். எமது வலப்பாகத்தில் எல்லாமும் தானாய் விளங்கும் சீநிவாசமூர்த்தி சேர்ந்துள்ளான். அத் திருமலை கிரேதா யுகத்தில் அஞ்சனாத்திரி எனப் பெயர் சிறந்தது. இரண்டாம் யுகத்தில் நாராணத்திரி என்று பெயர் படைத்தது. மூன்றும் யுகத்தில் நரசிங்காத்திரி எனப் பெயர் விளங்கியது. நான்காம் யுகத்தில் திருவேங்கடமலை எனப் பெயர் இலங்குகின்றது. அந்தத் திருமலையில் புண்ணிய தீர்த்தங்கள் அளவு இல்

லாதன உள்ளன. அவற்றில் முழுகித் தவம் செய்து தும்புரு, வாயு, சுப்ரமணியன், அகத்தியன் முதலியோர் பேறு பெற்றார்கள். மற்றும் பேறு பெற்றவர்களின் பெயர் வகையை எடுத்துரைக்க இயலாது என்று கூறினர் வாகமூர்த்தி. இதனைக் கேட்ட நாரத முனிவன் வியாச முனிவர்க்கு உரைத்தான். அவ் வியாசர் எனக்கு இதனை உரைத்தார். அவ்வாறே யான் இதனை உமக்கு உரைத்தேன் எனச் சௌனகாதியர்க்குச் சூதர் கூறி முடித்தார். இது வராக புராணப் பொருள்.

## 34.. வராகப் பெருமான் மந்திரசித்தி உரைத்த அத்தியாயம்.

வாாகமூர்த்தி பூ மகளோடு அஞ்சனசலமாகிய திருமலையில் தங்கி என்ன திருவிளையாடல்கள் செய்தனன் என்று சௌனகாதியர் சூத முனிவரை வினவ அவர் கூறலாயினர். திரேதா யுகத்தில் நாராணக்கிரிமீது வாாகமூர்த்தியை நிலமகள் வணங்கி "பெருமானே! உம்மை எவ்வாறு மந்திரத்தால் பூசித்தால் சித்திகள் பெறலாம் அருளுக" என்றாள்: இறைவன் கூறுவானாகிப் பிரணவத்தொடு தொடர்ந்த சுவேத வாாகமூர்த்தி என்றும், பூதேவியைத் தந்தத்தால் தாங்கிய சத்தன் என்றும், தீயில் மூழ்கிய திருமடந்தையைத் தோய்ந்த தூயோன் என்றும் சொல்லப்படும் மந்திரத்துக்கு உரிய இருஷி சங்கருஷணன்: அதற்குத் தேவதை நானே: சந்தசு பகவதி: இதனை ஓர் ஆசாரியனிடத்தில் வணங்கிக் கேட்டுப் பக்தியொடு உரு ஏற்றிப் பசுவின் பாலால் பாயசம் செய்து அதனை ஓமத் தீயில் வேத மந்திரத்தால் உபசரித்து உதவ வேண்டும்: காமத்தால் சிதைந்த மனம் தூய்மை அடைதற்கு உரிய மந்திரத்தினைச் சொல்லுகிறேன். பொன்னுடை சுற்றிய வெள்ளி மலை போன்ற திருமேனியும் சிவந்த அழகு வாய்ந்த கமலம் போன்ற வாாகத் திருமுகமும் நான்கு திருத்தோள்களும் சங்க சக்காமும் கிரீடம் அபய ஹஸ்தமும் துளஸி மாலையும் இரத்னுபாணங்களும் உடையவன். வலமார்பில் ஸ்ரீ வத்ஸம் உடையவன். உன்னைத் தன் திருமடியில் வைத்து வலக்கையால் அணைத்தவன். ஆதி கூர்மம் ஆகி அதன்

முதுகின்மீது ஆதிசேஷன் ஆகி அவன் திருமுடியாகிய கமலத்தில் உற்றகின்றனென் எனத் தியானித்து முன் கூறிய மந்திரத்தை நாலு லட்சத்து நூற்றெட்டு உருச் செய்தால் உலகில் நினைத்தவற்றை அடைந்து பின் பரகதி அடைவர் என்று கூற, பூ மகள் அந்த மந்திரத்தாலே பயன் அடைந்தோர் யாரென வினவினள். அதற்கு இறைவன், "முன்பு தருமன் என்னும் அரசன் ஒருவன் என்னைத் தியானித்துப் பிரம பட்டம் அடைந்தான்: இந்திரன் துருவாச முனிவர் இட்ட சாபத்தால் மிக்க பெருமை எல்லாம் இழந்து நிலவுலகம் அடைந்து இம் மந்திரத்தைத் தியானித்துச் சாபம் நீங்கப் பெற்றுப் பின் தேவலோகத்தை அடைந்து முன்போல வாழ்ந்தான். இம் மந்திரத்தை காசிபனிடத்தில் ஆதிசேடன் பெற்று உருச் செய்து பூமியில் இத்திருமலை உருவம் பெற்றான். மேலும் எண்ணற்ற யோகியர் பெற்ற பெருமை கூற இயலாது" என்றனன். இது கேட்ட பூதேவி இத்திருமலைத் தலையில் சீநிவாசன் எழுந்தருளிய காலத்தைக் கூறி யருளுக என வேண்டினள். வராக மூர்த்தி "ஆதியில் ஒரு திரேதா யுகத்தில் தருமநெறி நடந்த வைவச்சுத மனு காலத்தில் வாயுதேவன் திருப்பாற்கடல் நாதனைத் தியானித்துத் தவம் செய்யத் திருவருள் கூர்ந்து சாமி புஷ்கரிணி தீர்த்தக் கரையில் சீநிவாசன் தோன்றி வரங்கள் ஈந்தனன். அக்காலம் முதல் எவர்க்கும் தோன்றாதபடி மறைந்து உறைந்தனன்" என்றான். பூதேவி பின்னர் "இறைவன் எவர்க்கும் காட்சி கொடுத்தது எவ்வாறு அருளுக" என்றாள். அதற்கு வராக மூர்த்தி அகத்திய முனிவன் பண்டு இத்திருமலையை அடைந்து பன்னிரண்டு ஆண்டு நின்று தவம் புரிந்தான். அவனுக்குக் காட்சி அளிக்க அவன் தொழுது வாழ்த்தி இத் திருமலைமீது வருவோர்கள் யாவருக்கும் காட்சி அளிக்க வேண்டும் என்று வரம் கேட்டான் ஆக அவ்வாறே அகத்தியனுக்கு அருளி விமானத்தினிடைச் சங்க சக்கரம் விளங்க நின்று உலகினருக்குக் காட்சி தந்தான். இவ்வாறு பல ஊழி செல்லக் கண்ணனுக்கு இருபத்தெட்டாவது சதுர் யுகத்தில் வந்த துவாபரத்தின் இறுதியில் நான் வராகாவதாரம் செய்தேன் என்று கூறியருளினர். இவ்வாறு பூதேவி கேட்ட சரிதத்தைச் சூத முனிவர் சௌனகாதியர்க்குக் கூறினர். இது வராக புராணப் பொருள்.

MSS. LIBRARY
25 OCT 1951
1745
TRIPLICANE P.O., MADRAS

திருச்சானூர்

# அலர்மேல் மங்கைத் தாயார்



திருமகளார் துதி.

ஆரண னான்கின் னிறைமுத லோர்க ளடிபணிந் துனதருள் பெறுமோர்
காரண மன்றே? அவரவர் தமக்குக் கனிவுறு பதங்கிடைத் தவெலாம்
நாரண னுரத்தி னுகந்துவா ழனையே! நாயினே னினதெழிற் பாத
வாரண மலரை வணங்கினேன் கருணை மலிவுற நோக்கியா ளெனையே.

## 35. அலர்மேல்மங்கை அவதரித்த அத்தியாயம்.

மேலும் வாராகமூர்த்தி பூதேவிக்குக் கூறியவற்றைச் சூத முனிவர் சொல்லத் தொடங்கினர். பழைய காலத்தில் சந்திர வமிசத்தில் தோன்றிய மித்திர வன்மன் என்ற அரசன் தொண்டை மண்டலத்தில் நாராயண புரத்திலிருந்து எட்டுத் திக்கும் விளங்க அரசு புரியுங் காலை அவன் பாண்டியன் புதல்வியை மணந்து வியன் என்று பெயர் பெற்ற புதல்வனைப் பெற்று அவனுக்குப் பருவ காலம் வந்த போது பெண்மைக் குணங்களால் சிறந்த தாணி என்னும் நங்கையை அவனுக்கு மணம் செய்வித்துத் தன்னரசினையும் கொடுத்து விட்டுப் பின்னர் திருவேங்கட மலையில் எழுந்தருளியுள்ள முதல்வனைத் தியானித்துத் தவம் செய்யப் போனான். பின்னர் வியன் என்ற அந்த அரசன் அறநெறி வழுவாமல் அரசு புரியும்போது ஒரு யாகம் செய்வதற்காகத் தவசியரும் வேந்தரும் சூழச் சென்று ஆரணி நதிக் கரையில் பொன் கலப்பையினாலே உழும் போது அந்தப் பூமியில் தாமரை மலரின்மீது மின்னல் கொடி தோன்றினால் போல ஒளியுடைய ஒரு நங்கை தோன்றக் கண்டு அவன் வியந்து பெரு மகிழ்ச்சி கொண்டான். அப்போது ஆகாயவாணி இக்கன்னியை உன் மகள் எனப் பாவித்து வளர்ப்பாய் என்று கூறலும் அதனை ஏற்றுத் தன் கையால் எடுத்துத் தன்மனைவி கையில் கொடுத்தான். அமைச்சர், அரசர், அந்தணரோடு சென்று தன் மனை அடைந்த பின்னர் முன்பு சனகன் சீதையை வளர்த்தவாறே வளர்த்து வந்தான். தன் மனைவியான தாணி என்பாள் பின்பு கருக்கொண்டு மன்மதனும் நாணும்படியான ஒரு புதல்வனைப் பெற்றாள். அப்போது வீர வியன் சிந்தை மகிழ்ந்து மிக்க தானங்கள் ஈந்தனன். சாதகன்மம் முதலிய கிரியைகள் தவறாமல் செய்து மாதவர்களைக் கொண்டு வசுதாசன் என்று பெயர் சாற்றி வளர்த்து வர அவன் சந்திரனைப் போல வளர்ந்து வருவான் ஆயினன். இவன் தன் தந்தையினும் மிக்க திறல் உடையவனாய் வைகாசி மாதத்தில் உச்சிக் கால சூரியனைக் கண்ட மக்கள் அஞ்சுவது போலப் பகைவர் அஞ்சி வாழ்த்தச் சிறந்து இருந்தான். இவ்வாறு வாராக மூர்த்தி கூறி முடித்தார். இது வாராகப் புராணப் பொருள்.

# 36. ஸ்ரீநிவாசன் வேட்டையாடி வந்து பதுமினியைக் கண்ட அத்தியாயம்.

மேலும் வாராக மூர்த்திபால் பூமி தேவி கேட்ட கதையைச் சௌனகாதியர்க்குச் சூத முனிவர் கூறலாயினர். ஆகாச ராசன் தாமரை மலரில் தோன்றிய மங்கைக்குப் பத்மினி எனப் பெயர் வழங்கி அறிவு அழகு ஆநந்தம் இவற்றால் தன் புதல்விக்கு ஒத்தவர் எவ்வுலகத்தும் இல்லை என்று மகிழ்ந்திருக்கும் காலத்தில் ஒரு நாள் பத்மினி தன் தோழிமார்களோடு சேர்ந்து மந்தாரை தென்னை முதலிய மரங்கள் நெருங்கக் குயில்கள் கூடிக் கூவக் கிளிகள் கொஞ்ச மயில்கள் நடநம் ஆட வண்டுகள் பாடக் கேட்டு மேகம் வந்து உறங்க விண் அளாவி உயர்ந்த சோலைக்குச் சென்று மலர்கள் கொய்து உலாவிக் கொண்டு வரும் போது நாரத முனிவர் அவ்விடத்து அடைந்து ஆகாச ராசன் மகளைப் பார்த்து "பொற்றொடி நங்காய்! நீ யார்? தோழியர் சூழ இச் சோலையில் நிற்கின்றனையே; கூறுக" என்றார். அந் நங்கையாள் "யான் ஆகாச ராசன் புதல்வி" என்ன, நாரதர் "நீ கடலுள் பிறந்த திரு ஆகிய கன்னி" என்று அறிந்தேன் என்று பாராட்டிச் சென்றார். பின்னர் அந்நங்கை தோழிமாரோடு மலர் எடுக்கும் போது ஒரு பெருங் களிறு ஆர்த்து எழுந்து வருதல் கண்டு அஞ்சி அவர்கள் அக்காட்டில் ஒருசார் ஓடி நின்றார்கள். அப்போது பளிங்கு போன்ற வெண்ணிறமுடைய குதிரையின்மீது மின் கொடியைப் பற்றிய கருமேகம் போலக் கோடி மன்மதர் உருக் கூடினால் போன்ற வனப்பு வாய்ந்த மேனியனாய்ப் பொன்னுடை துலங்க, வில்லும் அம்பும் இலங்கத் தோன்றிய ஓர் அண்ணலைக் கண்டு அனைவரும் உள்ளம் கரைந்து நின்றனர். அந்தக் களிறு குதிரைமேல் வந்த குருசிலைக் கண்டு வணங்கி ஒரு முழக்கம் செய்து துதிக்கையைத் தூக்கி நீட்டி அவ்வனத்தை விட்டு அகன்றது. பின்னர் அவன் அங்கு மலர் கொய்து நின்ற மங்கையர்களை அணுகி, "மங்கையீர்! நீங்கள் யாவர்? உமதுஊர் யாது? கூறுக" என்றான். அவர்கள் அவ்வண்ணலை நோக்கி "வில்லுடன் வேட்டை யாடப் போந்த நீர் யாவர்? இக் காட்டில்

விலங்கு வேட்டை செய்தல் கூடாது: இது எம் ஆகாச ராசன் ஆணைக்குள் பட்ட இடம் ஆதலால் விரைவாய் வெளிச் செல்க" என்றார்கள். அதற்கு அவ்வண்ணல் குதிரையினின்றும் இறங்கி, "மங்கையீர்" உம் பேரும் ஊரும் குலமும் உரைப்பீராக: யான் கேட்டு என் இடம் ஆகிய திருமலைக்குச் செல்வேன்" என்றான்: அப்போது அம் மங்கையருள் ஒருத்தி, "இவள் ஆகாச ராசன் புதல்வி: பதுமினி என்னும் பெயரினள்: நாங்கள் தோழியர்: நீவிர் யாவர்? இங்கு அடைந்தது எதற்காக?" என்று கேட்டாள். அதற்கு அவ்விளைஞன் "என் பெயர் கண்ணன்: இருப்பு வேங்கட மலையாம்: இங்கு விலங்கு வேட்டை நாடி வந்தேன். இடையே உம்மைக் கண்டேன். இந்தப் பதுமினியின் அழகிலே ஈடுபட்டுக் காதல் கடலுள் ஆழ்ந்தேன்" என்றான். அது கேட்ட மங்கையர் அனல் போலச் சினந்து "எம் அரசன் உம்மைக் காணின் சிறைப்படுப்பன்: விரைந்து ஓடி உம் இடம் அடைந்து உய்க" என்றார்கள். அதன்படி வேங்கட மலை அடைந்து நின்றான் என வராக மூர்த்தி பூமிதேவிக்கு உரைத்தனர் எனச் சூத முனிவர் கூறினர். இது வராக புராணப் பொருள்.

## 37. வகுளமாலிகை பதுமினியிடத்தில் தூது சென்ற அத்தியாயம்.

சூத முனிவர் சௌனகாதியர்க்கு மேலும் வரலாற்றைக் கூறலாயினர். அந்தக் கண்ணன் சேஷகிரியை அடைந்து மணி மண்டப மத்தியில் அமைந்த பைம்பொன் அமளிமீது பதுமினி என்ற பெண்ணையே கருத்துள் கொண்டு மோகத்தால் திருமேனி வெதும்பப் பள்ளிகொண்டிருந்தான். அப்போது தோழியாகிய வகுள மாலிகை என்பாள் திருவடி வணங்குதற்குப் போந்தவள் தேவரும் அறியாத் திருவடிகளைத் தன்னிரு கைகளாலும் வருடின அளவில் இறைவன் உணர்ந்து எழ அவள் உரைப்பாள் ஆயினள். "இறைவனே! இன்னமும் எது காரணத்தால் அமுது செய்யாது சயனித்துள்ளீர். தொண்டர் துயர் அகற்றும் தாயோய்! நின் நெஞ்சில் துயர் அணுகுமோ? வேட்டையாடச் சென்ற போது ஏதேனும் விழிக்கு இலக்கு ஆயிற்றோ? மண்ணுலகமின்னோ பொன்னுலகப் பெண்ணோ

உம்மைத் தன் விழி வலைப்படுத்தினள் என்று நம் திருமுகம் எனக்குக் கூறுகின்றது. அதனை உரைத்தருளுக" என்று கூறலும் இறைவன் உரைப்பான் ஆயினன். முன்பு ஒரு திரேதா யுகத்தில் புலத்திய ருஷியின் மகன் ஆகிய விசிரவசு பெற்ற இராவணன் பிரமனை நோக்கித் தவம் புரிந்து மானிடர் அல்லாதாரால் தனக்கு மரணம் இல்லா வரம் பெற்று அதனால் செருக்குக் கொண்டு தேவர்கள் சந்திர சூரியர் அஷ்ட பாலகர் இவர்களைத் தோற்கடித்து எவ்வுலகத்தும் தன்னின் வலியவர் இல்லை என எழுந்து இலங்கையினின்றும் புட்பக விமானத்தில் விரைந்து செல்லும் போது இலக்குமி வேதவதி எனத் தோன்றி ஓர் இருஷி ஆச்சிரமத்தில் இருந்தாள். அவள் அழகினை இராவணன் பார்த்து மையல் கொண்டு அவளிடம் அணுக அவள் அவன் மனக் கருத்தை அறிந்து கொண்டு வெகுண்டு அழகில் என்னை ஒத்த பெண் ஒருத்தியாலே நீ ஆவி அழிவாய் என்று சாபமிட்டுத் தானும் நெருப்பில் வீழ்ந்து உடல் விட்டாள். அச் சாபத்தை ஏற்ற இராவணன் இலங்கை அடைந்திருந்த காலை அவ் வேதவதி இலங்கையில் ஒரு பொய்கையில் தாமரை மலரில் பெண் மகவாய்ப் பிறந்தாள். இந்த அதிசயத்தை அரக்கர்கள் இராவணனுக்குச் சொல்ல அவன் சென்று நோக்கி முன்பு வேதவதியால் தனக்கு நேர்ந்த சாபத்தைத் தவறில்லாமல் எண்ணி அவளால் தனக்கு இறுதி வரும் என்று கருதி அம் மகவை அம் மலரோடு ஒரு பெட்டியில் இட்டு மூடிக் கடலில் விடுமாறு செய்வித்தான். அப் பெட்டியை வருணன் மிதிலை நகர்க்கு அருகில் கொணர்ந்து சேர்த்தான். பின்பு ஒரு நாள் சனகன் அசுவமேத யாகம் ஒன்று செய்வதற்கு அவ்விடத்தை அடைந்து பொன் கலப்பையினால் உழச் செய்தலும் மண்ணில் கிடந்த அப்பெட்டி வெளிப்பட அதனைச் சனகன் திறந்து நோக்க அழகு எல்லாம் திரண்ட குழந்தையைக் கண்ணுற்று எடுத்துச் சென்று வளர்க்க நான் இராமன் ஆகத் திரு அவதாரம் செய்து சென்று அவளை மணந்து தந்தை சொல்லால் தண்டக வனம் சென்று உறைந்த போது இராவணன் ஒளிந்து வந்து சீதையை எடுத்துச் சென்று சிறையிட அவனைக் கிளையொடு மடிவித்து விபீஷணனுக்கு முடி சூட்டிச் சீதையை நெருப்பில் மூழ்கச் செய்து தேவரும் நான்முகன் சிவன் இந்திரன் மூவரும் தயாதனும் சானகியின் கற்பினைப் புகழ்ந்து கொண்டாட அவளுடன் அயோத்தி அடைந்து முடிதரித்து அரசு புரியுங் காலத்து வண்ணான் இழிவு

கூறிய குற்றத்தினால் சீதையைக் கருப்பத்துடன் இலக்குமணனோடு அனுப்பி வால்மீக முனிவன் ஆச்சிரமத்தில் விடுவித்தனன். அங்குக் குசலவர் பிறந்தார்கள். பின்பு ஒரு காலத்தில் அசுவமேதம் செய்ய எண்ணிப் பொன்னால் சீதை உருச் செய்து அங்கே வைத்து யாகத்தினை முடிக்குங் காலையில் வால்மீக முனிவன் குழந்தைகள் இருவர்களுடன் சீதையை அழைத்துக் கொண்டு வந்து என் முன்பு வெறுப்பு உற்ற வார்த்தைகளால் சமாதானம் சொல்லி விடச் சீதையை யான் பார்த்து நெருப்பில் படிந்து வரச் சொல்ல, அவள் அப்படியே செய்து வந்து மன வருத்தத்தால் பூமிக்குள்ளே நுழைந்து சென்றனள் என்று பூர்வ வரலாற்றைக் கூறிவிட்டு இறைவன் வகுளமாலிகையை நோக்கி இருபத்தெட்டாவது கலியுகத்தில் பிரமன் அரன் தேவர் முனிவர் முதலியோர் பிராட்டியைத் துதித்து இந் நிலவுலகில் அவதரித்திடுவாய் என்ன வேண்டச் சீதை நாராயண புரத்தில் பூமியில் தோன்றி ஆகாச மன்னன் வளர்க்கப் பதுமினியாக வளர்கின்றாள். அவள் சோலையில் மலர் கொய்யத் தோழியருடன் வர நான் குதிரை மீது வேட்டை காரணமாகச் சென்று அவ்வனத்தில் அவளைக் கண்டேன். அவள் அழகினை விரித்து உரைத்தால் விரியும். ஆகையால் நீ சென்று அப் பதுமினியை அழைத்து வந்து இங்குச் சேர்ப்பித்தால் என் துயர் நீங்கும் என்றான். அப்போது வகுளமாலிகை மனம் இரங்கி "அந்த அணங்கினை யான் அழைத்து வருவேன்: அவள் ஊருக்கு உரிய வழியை எனக்குக் கூறுக" என்றாள். இறைவன் மகிழ்ந்து "எதிர் தோன்றும் இந்த நரசிங்க குகையை அடைந்து இத் திருமலையினின்றும் இறங்கி அகத்திய முனிவன் ஆச்சிரமத்தை அடைந்து சொன்னமுகி நதிக் கரையில் உள்ள பிரம்ம முனிவர் வனத்தைச் சார்ந்து அங்கு உள்ள தாமரைத் தடாகத்தில் நீராடி அங்குத் தங்கியுள்ள சாயாசு சங்கர் என்ற பெரியோரைத் தரிசித்து அங்கு நின்றும் போய்ச் சுக முனிவர் பூசித்த கிருஷ்ணனைப் பூசித்து அந் நதிக்கு அப்பாலுள்ள வனங்களைக் கடந்து அரணி என்ற வனத்தை அடைந்து அதற்கு அப்பால் ஆகாச ராசன் நகரைச் சார்ந்து அப் பெண்ணை உறவு செய்து அழைத்துக் கொண்டு வருவாயாக" என்றான். இது கேட்ட வகுளமாலிகை ஒரு குதிரையின்மீது ஏறி அகஸ்திய முனிவர் ஆச்சிரமத்தை அடைந்து சொன்னமுகியைக் கடந்து அரணி என்ற சோலையை அடைந்தாள். பின்பு ஆகாச ராசன் நகர்க்

குச் செல்லும் வழியில் பதுமினியின் தோழியரைக் கண்டு யாவர் என் வினவ, அவர்கள் "நாங்கள் ஆகாச ராசன் அரண்மனைத் தோழியர்கள் : எங்கள் அரசனுக்குப் பூமியில் பிறந்த புதல்வியாயுள்ள பதுமினியை ஒரு நாள் நாங்கள் அழைத்துக் கொண்டு பூஞ்சோலையில் மலர் கொய்து சூடிக் களிப்பொடு பாடல் பாடிக்கொண்டு உலவும் போது ஓர் ஆலமரத்தின் கீழே கோடி மன்மதர்கள் ஓர் உருக் கொண்டு வந்தாற் போல நின்று கொண்டிருந்த ஓர் ஆண்டகையைக் கண்டு பதுமினி உள்ளத்தில் வியப்பும் நயப்பும் கொண்டு நிற்க அந் நம்பி பின்னர் மறைந்து போயினன். அந்த நாள் முதலாக அவ்வழகனைத் தன் உள்ளத்தில் கொண்டு அவள் காதல் விஞ்சியிருக்க, அரசன் அவளுக்குக் கிரக சங்கை உண்டு என்று கருதிப் புரோகிதனை அழைப்பித்துத் தன் புதல்வியின் கிரக சாரங்களை ஆராய்ந்து உரைக்கக் கட்டளையிடலும், அவன் எல்லாம் கணித்து நோக்கி, அரசே! நும் புதல்விக்கு நல்ல பலன்கள் கூடுதற்கு உரிய காலம் இது: அவள் ஓர் ஆண்டகையைக் கண்டு காதல் உற்றுள்" என்றான். அது கேட்டு வேந்தன் அதற்குச் செய்ய வேண்டுவது யாது என்ன, புரோகிதன் இந்நகரின் பக்கத்து உள்ள அகத்திய லிங்கத்து ஆதரமுடன் பாலினல் அபிடேகம் செய்தால் இவ்விடர் நீங்கி விடும் என்ன, அரசனும் கன்னியர் பலரை அழைத்துப் பூசைக்கு வேண்டுவன எல்லாம் எடுத்துக் கொண்டு அர்ச்சகனுலே குற்றம் அறத் திருமஞ்சனம் செய்வித்து வருவீர் எனக் கட்டளை யிட்டான். அப்படி நாங்கள் திருமஞ்சனம் செய்து திரும்பும் போது உன்னைக் கண்டோம்; நீ யார்: இங்கு வந்த செய்தியைச் சொல்லுக" என்றார்கள். அப்போது வகுளமாலிகை குதிரையினின்றும் இறங்கி அன்புடன் சென்று "உங்கள் தலைவியின் உள்ளக் கருத்து நிறைவேறுமாறு நான் திருமலையினின்றும் வந்துள்ளேன். ஆகாச ராசன் வளர்க்கும் அப் பெண்ணருங் கலத்தை நான் பார்க்க வேண்டும்" என்றுளாக, அத் தோழிமார்கள் விருப்புடன் அவளை அரசன் மாளிகைக்கு அழைத்துச் சென்றார்கள். அப்போது பூமிதேவி ஒரு குறப்பெண் வடிவு கொண்டு முக்காலப் பலன்களும் உரைக்க வல்லேன் என்று கூறிக் கொண்டு தெருவூடே வருதல் கண்டு அத் தோழிமார் அவளை அழைத்து முறத்தில் முந் நாழி முத்தைக் கொட்டிப் பலன் கூறுமாறு சொல்ல, அவளும் நீங்கள் ஒரு மங்கையைப்பற்றிக் குறி கேட்கின்றீர்கள் : அப் பெண்

ணின் நிலைமையைக் கூறுகின்றேன். அவள் ஓர் ஆண்டகையைக் கண்ணால் கண்டது முதல் காதல் கொண்டு மெலிவு உற்றிருக்கின்றாள். அவ் வாண்டகை யாவன் எனின், என்னால் உரைக்க இயலும் அளவு உடையான் அல்ல என்றாலும் சிறிது உரைக்கின்றேன் : உலகுக்கு எல்லாம் நாயகன் : பரமபத நாதன் : இலக்குமி காந்தன் : திருமலை இறைவன் : அரசிளங் குமான் உருக்கொண்டு மலர் வனம் அடைந்து உங்கள் நங்கையை நாடிக் கண்டு காதல் கொண்டு ஒரு மாதினைத் தூது விடுத்து உள்ளான். அத் தூது மாதும் நம்மோடு உள்ளாள்: அவ்விறைவனை நம் நங்கை மருவிப் பரமாநந்தம் கொண்டு விளங்குவாள் என்று முகம் மலர்ந்து சொல்லித் தன் பிள்ளைக்குத் தலைக்கு எண்ணெயும் பழந் துணியும் அன்னமும் பெற்றுக் கொண்டு சென்றாள். பின்னர் இந் நிகழ்ச்சிகளை எல்லாம் தோழியர்கள் அரசியிடம் விரித்து உரைத்தார்கள். அரசி தன் புதல்வியை அருகில் அழைத்து வைத்துக் கொண்டு அவள் மன விருப்பத்தைக் கேட்க, அவளும் யான் மலர் வனத்து ஓர் ஆண்டகையைக் கண்டேன். அது முதல் அவன் என் நெஞ்சிடை நிலவுகின்றான் என்றனள். இச் செய்தியைக் கேட்ட அன்னை மகிழ்ச்சி உற்றிருக்கிறாள் என்று கூறக் கேட்ட வகுளமாலிகை தன் காரியம் பலித்தது என்று எண்ணி மகிழ்வு உற்றிருந்தாள் என்று வராக மூர்த்தி பூமி தேவிக்கு உரைத்ததாகச் சூதர் கூறி முடித்தார். இது வராக புராணப் பொருள்.

## 38. பதுமினி கலியாணத்திற்கு நகர் வர்ணனை உரைத்த அத்தியாயம்.

சூத முனிவர் மேலும் சௌனகாதியர்க்குக் கூறுவார் ஆயினர். தாணியாகிய அரசி தன் பக்கம் இருந்த மங்கையர்களைத் தம்முடன் வந்த நங்கையின் வரவினைப் பற்றிக் கேட்க, அவர்கள் நாங்கள் சிவபிரானுக்கு அபிஷேகம் செய்வித்துத் திரும்பு காலையில் இடையே சந்தித்தோம். உம்மோடு உறுதியான காரியங்கள் பேசுதற்கு என்று வந்த அம்மையை விசாரித்தால் எல்லாம் அறிவிப்பாள் என்றனர். தாணியரசி அவ்வாறே வகுளமாலிகையை வினவ அவள் "அரசியே! என் பெயர் வகுளமாலிகை : திருவேங்கடத்து இறைவன் அழகு

வாய்ந்த ஓர் அரசிளங் குமரன் உருக்கொண்டு வேட்டையாடக் குதிரைமேல் போந்த போது பல ஆறுகளைக் கடந்து ஒரு நந்தன வனத்தை அடைய, அவ்வனத்தில் வனப்பில் சிறந்த நின் செல்வத் திருமகளைக் கண்டு பெரிதும் மால் ஆகினார். பின்பு திருமலையை அடைந்து என்னை விளித்து உம் அரசன்பால் சென்று உம் புதல்வி யைத் திருமணத்திற்குப் பேசி முடிவு செய்து வரப் பணித்த படி யால் நான் இங்கு அடைந்தேன்: ஆகையால் அரசரிடம் சென்று என் வரவைத் தெரிவித்து உங்கள் கருத்தைக் கூறுக" என்றாள். அவ்வாறே தாணியரசி அரசனுக்கு உரைக்க, அவன் தன் அமைச்சர் களை அழைப்பித்துத் தன் புதல்வியையும் அருகு இருத்தி வகுள மாலிகையை வருவித்து அவள் செய்திகளையும் அறிந்து கொண்டு வேத புரோகிதரை நோக்கிப் பதுமினியின் திருமணத்துக்கு நல்ல முகூர்த்தத்தை ஆராய்ந்து கூறுக என்றான். அவர் தேவ மந்திரி யாகிய பிருஹஸ்பதியை அழைத்து இருவருமாய் அமர்ந்து கன்னி கையின் திரு நட்சத்திரம் ஆகிய மிருக சீர்ஷத்துக்கும் திருமாலின் திரு நட்சத்திரம் ஆகிய திருவோணத்திற்கும் இனிய பொருத்தம் உண்டு என்று கூறி வைகாசி மாசத்தில் உத்தர பல்குன நட்சத்திரத் தில் திருமணம் செய்வித்தால் நலம் ஆம் என்றார். அரசன் மகிழ்ந்து பிருஹஸ்பதியைச் செல்ல விடுத்து வகுளமாலிகையை நோக்கித் திரு மணத்துக்கு உரிய பொருள்களை கொண்டு வருமாறு இறைவனுக் குத் தெரிவிக்கக் கூறினன். அவள் புறப்படும் போது பதுமினி சுகன் என்பவனை அவளுக்குத் துணையாக உடன் அனுப்பினள். ஆகாச ராசன் தன் புதல்வனை நோக்கிப் பதுமினிக்கும் திருமலை நாதனுக்கும் திருமணம் என்ற நற் செய்தியை இந்திரன் முத லாகிய தேவர்களுக்கு உரைத்து வா என்று அனுப்பினன். அது கேட்ட இந்திரன் விசுவகருமனை நோக்கி நாராயணபுரத்தை அலங்கரிக்கும்படிக் கட்டளையிட்டான். அவனும் மணிகளாலும் பொன்னாலும் மண்டபம் பந்தல் மேடை அமைத்து முத்து பொன் னாடை இவற்றால் பொதிந்து திரு மாளிகைகள் எல்லாவற்றை யும் புதுப்பித்துக் கொடிகளை வரிசைப்பட அணிந்து தெருக்களில் நீர் தெளிப்பித்து நவமணிகளால் கோலங்கள் இடுவித்து மேற்கட்டி கள் விரித்துக் கம்பங்கள் தோறும் கனிக்குலைகளை நிரைத்து மலர் மாலைகளைத் தொங்க விடுத்துக் கரும்பு கமுகு வாழை முதலியவற்றை

நாட்டித் திண்ணைகள் தோறும் நிறை நீர்க்குடங்கள் அமைப்பித்து மணித் தோரணங்களும் தொங்கச் செய்து விண்ணவரும் மண்ணவரும் வியப்ப அலங்கரித்தான். இந்திரன் வெள்ளை யானையின்மீது ஏறி வந்து அரம்பையர் சூழ அணி நகர் கண்டு அந்நகர் முழுதும் கற்பக மலரைப் பொற்புறப் பெய்தனன். குபேரன் தன தானியங்களைக் குவியல் குவியலாக மனைகள் தோறும் நிரப்பினன். இயமன் எவர்க்கும் நோய் அணுகாதபடி செய்வித்தனன். வருணன் நவமணிக் குவியல்களை மனைதொறும் நிறைத்தான். நிருதி, ஈசானன், வாயு, அக்கி தேவன் அவரவர்கள் தத்தமக்கு உரியவற்றைக் கொணர்ந்து சேர்ப்பித்தார்கள். இவ்வாறு அழகு பெற்ற நகர்க்கு நிகர் இந்திர புரியும் குபேர நகரும் அல்ல என்னும்படி அமைந்தது. வகுள மாலிகையும் சுகனும் திருமலை அடைந்து இறைவனைக் கண்டனர். வகுள மாலிகை தன் தூது பலித்தமை கூறிச் சுகன் வாயிலாகத் திருமண விவரங்கள் தெரிந்து கொள்ள வேண்டினள். இறைவன் அவனை வினவலும், அவன் " அமலனே ! எங்கள் பதுமினி உம்மை அல்லும் பகலும் தியானித்து ஆவி மெலிந்துள்ளமை நமக்கு அறிவித்து வர என்னை விடுத்தனள் " என்று கூறினன். அப்போது இறைவன் திருவுள்ளம் குழைந்து மகிழ்ந்து யான் விரைவில் போந்து திருமணம் செய்து கொள்ளுகிறேன் என்று பதுமினிக்குச் சொல்லுக என்று தன் துளசி மாலையை ஈந்து விடை யருளினன். சுகன் மீண்டு வந்து துளசி மாலையைப் பதுமினிக்குக் கொடுக்க அவள் பணிந்து ஏற்றுத் தலையில் சூடி மகிழ்வு உற்றிருந்தனள். அரசனும் அளவில்லாக் களிப் புற்றுச் சந்திரனை அழைப்பித்து அறுசுவை அமுது பாயசம் அப்ப வகைகள் கனிகள் எல்லாம் கொடுக்குமாறு கூறித் தன் திருமகளுக்கு உரிய அலங்காரங்கள் யாவும் செய்யுமாறு பணிப்பெண்களுக்குக் கட்டளையிட்டு இறைவன் வருகையை அமைச்சர்களோடு எதிர் நோக்கி யிருந்தான் எனச் சூதர் கூறி முடித்தார். இது வராக புராணப் பொருள்.

# 39. ஸ்ரீநிவாசன் அலர்மேல்மங்கை நாச்சியாரை மணம் புரிந்த அத்தியாயம்.

அஞ்சனகுலத்திற்கு இறைவனான சீநிவாசப் பெருமாள் ஆகாச மன்னவன் திரு நகரத்தை அடைந்து பதுமினி நங்கையாரைத் திருமணம் புரிந்த வரலாற்றைக் கேட்பீராக என்று சூத முனிவர் கூறத் தொடங்கினர். நாராயண புரத்தை மணிகளால் அணிசெய்த பின்பு இந்திரன் முதலிய தேவர்கள் அனைவரும் திருவேங்கட மலையை அடைந்து ஆதிநாயகன் அடிகளைப் பரவித் திருமணத்திற்கு எழுந்தருளுமாறு இறைஞ்சினர். இறைவன் இலக்குமியை நோக்கி விரைவில் உரிய பணிகளைச் செய்விக்குமாறு கூறியருள இலக்குமி தன் தோழியரை ஏவி எல்லாவற்றையும் சித்தம் செய்வித்தனள். அப்போது தேவ மங்கையர் பலர் சோபனம் பாடச் சிலர் விருது கூற இசைக் கருவிகள் கடலென ஒலிக்க, வெண்குடை நிழல் செய்ய, சாமரை கொடிகள் புடை புரள, நடன மாதர் சதி நடிக்க, முனிவார் துதி செய்ய, இறைவனுக்கு இலக்குமி நறுமணத்தைலக் காப்புச் செய்து கங்கா தீர்த்த பொற் கலசங்களால் திருமஞ்சனம் செய்து தூய துகிலால் கேசத்தைத் துவட்டி உலர்த்தி நறுமணத் தூபம் ஊட்டிப் பீதாம்பரத்தை எடுத்துக் கொடுத்தாள். இறைவன் உடுத்துக் கொண்டு செம்பொன் இருக்கையில் எழுந்தருளி அட்டமி சந்திரனில் அமுத தாரை விழுந்தது போலத் திருநெற்றியில் திருமண் தரித்துக் கொண்டு திருமேனியில் களபக் கலவை பூசிக் கேயூரம், மணிக்குண்டலம், மகுடம், கவுத்துவ ஆரம், மணிக்கண்டிகை, கடகம், முதலிய அணிகள் யாவும் அணிந்து இவற்றின் மேலால் துளசி மாலை பூண்டான். வேத வடிவு ஆகிய கருடனை அணிசெயக் கட்டளையிட்டான். இரதங்கள், யானைகள், குதிரைகள் இவற்றைத் தேவர் வியக்கும்படி அணிசெய்ய ஏவி எதிர் நின்ற சேனைமுதலியை நோக்கி யாவரும் அவர் அவர்க்குத் தக்க ஊர்திகளில் ஏறி வரும்படி சொல்லி வகுளமாலிகை முதலிய நங்கையரை இரதங்களில் வரப் பணித்துத் தான் இலக்குமியுடன் பொன் மலைமீது நீல மலை அமர்ந்தது போல ஞானமெய்க் கருடன்மீது எழுந்தருளினன். மூன்று உலகத்தவரும் பணிய நாராயண புரம் நோக்கிச் செல்லுங்கால் திசைகளும் மலை

களும் குலுங்க, கடலும் மேகமும் கலங்க, பல்லியங்கள் முழங்க, தேவ மாதர் நடனம் புரிய, கந்தருவர் கானம் செய்ய, பார்வதி சரஸ்வதி தேவிகள் இருபுறமும் நின்று சாமரம் வீச, இந்திராணி குடை பிடிக்க, இயக்க மாதர் ஆலவட்டங்கள் அலைக்க, தேவ மாதர் சிலர் விருது கூற, சிலர் சோபனம் பாட, கின்னர கிம்புருட மங்கையர் மங்களாரத்தி எடுப்ப, முனிவர் வேதம் ஓத, தேவர் மலர் மழை சொரிய இவ்விதம் சிறந்த கோலத்துடன் இலக்குமி நாதன் நாராயணபுரத்தின் அருகு வருவதை ஆகாச ராசன் கண் குளிரக் கண்டு பணி மாதர்களை நோக்கி விரைவில் தன் புதல்விக்கு மங்கள நீராட்டுச் செய்வித்து மணக்கோலப் செய்யக் கட்டளையிட்டான். அவ்வாறே பணி மாதர் நறுமணத் தைலம் தேய்த்து நன்னீராட்டிக் கூந்தலுக்கு நறும்புகை ஊட்டிக் கத்தூரி பூசிப் பின்னல் இட்டு நறுமலர் மாலை சூட்டித் தேவ மாதர் கொணர்ந்த கலவை அணிவித்துக் கோசிகப் பொன்னுடை உடுப்பித்துத் திருநுதலில் திலகம் இட்டுக் கருவிழிகட்கு அஞ்சனம் தீட்டிக் குங்குமக் குழம்பினால் மகரிகா பத்திரம் எழுதுவித்து அடிகளுக்குச் செம்பஞ்சு ஊட்டி உறுப்புக்களுக்கு எல்லாம் அணி கலன்கள் அணிவித்து மார்பின் மாலை திகழத் திருக்கையில் செழு மலர் இலக அலங்கரித்தனர். ஆகாச ராசன் கண் களிப்பக் கண்டு யாவரும் தொழுது வணங்க யானைமீது ஏற்றி நகர் வலம் செய்க எனக் கட்டளையிட்டான். பதுமினியின் பாங்கியர்கள் சோபனம் பாட, குடைகள் வெயில் காப்பக் குழும, கொடிகள் நெருங்க, ஆலவட்டங்களை நங்கையர் வீச, அரச மகளிர் சாமரப் பணி புரிய, அந்தண மகளிர் வாழ்த்துக் கூற, தேவ கன்னியர் நடம் செய்ய, கந்தருவ கன்னியர் இசை பாட, எண்டிசை யானைகளும் செவிடு படப் பல்லியம் இரட்ட, வீணை யாழ் முதலிய கீத நாத இசை தழைக்க மகளிர் பெருந்திரள் வீதியில் வந்தது. அச்சமயத்தில் திருமாலின் தானைத் திரளும் அவ்விடத்து அடைந்து சந்திக்க ஆகாச ராசனும் அங்கு உற்றுக் கலந்து கொண்டான். அரசர், இருடியர், யோகியர், வேதியர், தேவர், வைசிய சூத்திரர் முதலியோர் உடன் திரண்டு வரச் சீநிவாசனும் அலர்மேல் மங்கையும் திருநகர் வலம் புரிந்து வருகின்ற தெருக்களில் எல்லாம் மங்கையர் மங்கல விளக்கங்கள் எடுக்கச் சிவப்பிரமர்கள் கற்பக மலர் சொரிய வருகின்ற திருமண விழாவை ஆகாச மன்னவன் கண்டு களிகூர்ந்தான். மண

விழா உலாப் போந்தார் அனைவரும் அரண்மனை வாயிலுக்கு எதிராக வந்து சேர்ந்த அளவில் சீநிவாசப் பெருமானும் பதுமினி நங்கையாரும் மகிழ்ச்சியோடு மலர் மாலை மாற்றிக் கொண்டு தங்கள் ஊர்தியினின்று இறங்கினார்கள். அப்போது மகளிர் கண்ணெச்சில் கழித்தார்கள்.

ஆகாச மன்னன் அவர்களை அரண்மனையினுள் அழைத்துச் சென்று மணிகளால் அலங்கரித்த மண்டபத்தினிடையில் அமைத்த சிங்காசனத்தின்மீது சீநிவாசப் பெருமானையும் பதுமினியையும் அமரச் செய்து வசிட்ட முனிவர் முதலிய நான்மறை அந்தணர்களை உடன் இருக்கச் செய்து தானும் அங்கு அமர்ந்தானாக, நன் முகூர்த்தம் நேர்ந்த அளவில் வசிட்ட முனிவர் நாந்தி முதல் கிரியைகளை நடத்தி அண்ணல் சீநிவாசனுக்கும் அலர்மேல் மங்கை நங்கைக்கும் மங்கலக் காப்பு நாண் சாத்திப் பாங்காகப் பொற் கும்பம் வைத்து அருகில் பாலிகை நிறுவி விசுவாமித்திர தருப்பத்தை நான்கு புறமும் சேர்ப்பித்து, நடுவே அக்கினியை வளர்த்து ஆகுதி செய்து ஆகாச ராசனை அருகே இருக்கச் செய்து மருகனைப் பூசித்துத் தன் திருமகளின் மலர்க்கையைப் பிடித்து உதவுக என்றார். அரசன் அவ்வாறே தன் திருமகளை மடிமீது இருத்தி அந்தணர் உவக்கும்படி எண்ணில்லாத தானங்கள் செய்து பின்பு தன் செல்வியின் செங்கையைப் பற்றித் திருமாலின் திருக்கையில் கொடுக்க, அப்பெருமானும் பற்றிக் கொண்டு அக்கினியை வலம் வந்து திருமங்கலிய நாணைப் பூட்டிச் சாத்திர விதிமுறையால் மணந்து பிரம ருத்திர இந்திர தேவர்கள் பூசிக்க வீற்றிருந்தான். பின்னர் ஆகாச ராசன் இருடிகள் அந்தணர் அரசர் வணிகர் வேளாளர் முதலியோர்க்கு வரிசைகளை முறைமையாகக் கொடுத்தனன். யாவர்க்கும் அறுசுவை உண்டி வழங்கப் பெற்றது. இவ்வாறு ஒருபது நாள்கள் மணவிழா நடைபெற இந்திரன் அமைத்த திருவறையினின்று அண்ணலும் அலர்மேல் மங்கையும் பொன்னை வாரி அந்தணர்க்கு ஈந்து மலர் அணை மேவி விழிவளர்ந்தனர். காலையில் எழுந்து சீநிவாசன் திருவேங்கடமலைக்குப் பதுமினியுடன் செல்ல வேண்டும் என்று விடைகொள்ள ஆகாச ராசனும் எண்ணில்லாத வரிசைகள் செய்து சிவிகையில் தன் செல்வியை ஏற்றுவித்துத் தோழியரோடு செல்ல விடுத்தனன். இறைவன்

இலக்குமியோடு கருடன்மீது இவர்ந்து பிரமனும் சிவனும் இருடிகளும் அரசர் அந்தணர் முதலியோர் புடை சூழ்ந்து வர மணமுரசு துந்துபி முழங்க, கீதநாதங்கள் ஒலிக்க, அரம்பை மாதர் நடிக்க, முத்தக் குடை நிழல் செய்ய, கவரி பணிமாற, கொடித்திரள் நெருங்கச் செல்லும் போது ஆகாச மன்னனை நோக்கி நினக்கு வேண்டுவதைக் கூறுக என்றலும் அரசன் நும் மலரடியில் என் உள்ளம் என்றும் தங்குமாறு அருளுக என்று கூறினன். அவ்வாறே அருளி விரைந்து வேங்கட மலை சேர்ந்து ஆனந்த நிலைய விமானத்தில் எழுந்தருளி வகுளமாலிகையின் மீதும் திருமகள் மீதும் அலர்மேல் மங்கை மீதும் பேரருள் காட்டினன் என்று ஆதி வாரகமூர்த்தி பூமிபிராட்டிக்கு உரைத்த தாகச் சூத முனி கூறி முடித்தார். இது வாரகப் புராணப் பொருள்.

## 40. குருவைநம்பி, தொண்டைமான் சக்கரவர்த்தி மோட்சம் பெற்ற அத்தியாயம்.

பூமிப் பிராட்டிக்கு ஆதி வாரகமூர்த்தி உரைத்தவற்றை மேலும் சொல்லுகிறேன் என்று சூத முனிவர் தொடங்கினர். முன்பு வெற்றி அறிவு அறம் இவற்றால் சிறந்த தொண்டைமான் சக்கரவர்த்தி திருவேங்கடத்தை அடைந்து இறைவனைப் பணிந்து வரும் நாளிலே ஒரு சமயம் சுக முனிவரைக் கண்டு பதும தீர்த்தச் சிறப்பினை அருளவேண்டும் எனக் கேட்க, அவர் கூறியது என்னெனின், முன்பு இத் தீர்த்தத்தில் பொன்மயமான தாமரை மலர் ஒன்றில் இலக்குமி விளங்கித் தோன்றினள். அப்போது இந்திரன் இலக்குமியை நோக்கி உலகம் முழுதும் ஈன்ற அன்னையே! அமுதிற்கு அமுத சாரமே! பிரமனை ஈன்ற செல்வியே! வில்வ வனத்தில் உறையும் அம்மையே! சேதனர் செய்யும் தவத்திற்குத் தக்கபடி பிரமன் சிவன் சந்திரன் சூரியன் என்று புகழ் பெறச் செய்து அவர் அவர் சிந்தையில் விரும்பிய வரம் தரும் அன்னையே! என்று பலவாறு வழுத்தி வணங்க அவனுக்கு வரம் கொடுத்து "நீ வழுத்தியவாறு என்னை வில்வத்தழை கொண்டு அர்ச்சனை செய்வோர் விரும்பிய எல்லாம் பெறுவர்: பின்பு முத்தியும் பெறுவர்: இத் தீர்த்தம் படிந்தோர் எவர் ஆயினும் பரிசுத்தர் ஆவர்" என்று

கூறினுள் என்று கேட்ட அளவில் தொண்டைமான் அரசன் நன்று என்று கூறி அத் தீர்த்தத்தில் முழுகிச் சீநிவாசன் மலரடி வணங்கி வாழ்த்தினுன். இறைவன் அரசனை நோக்கி "இலக்குமி தங்கும் இனிய இடனுய் விளங்கும் சண்பக மரங்களும் மற்றும் இம் மலையில் உள்ள மரம், புல், பூடுகள் யாவும் எம் மெய்ச் சொரூபம் ஆதலால் அவற்றை வெட்டுதல் பிளத்தல் கூடாது: உன் வமிசத்தில் நிகர் அற்ற அறிஞன் ஆக நாராயணன் என்னும் பெயர் சான்ற மன்னன் பிறந்து எனக்குப் பொன்னுல் விமானம் விளங்கச் சமைப்பான்" என்று அருளினுன் என்று ஆதி வராகர் கூறி மேலும் பூமிப் பிராட்டிக்கு உரைப்பார் ஆயினர். அத் தொண்டைமான் அரசன் திருமால் அடிகளை அன்பொடு வணங்கிச் சன்னிதிப் பணிகள் தவறுமல் இயற்றி வேதியர்களால் நித்ய பூசனை நைமித்திக விழா எல்லாம் எல்லோரும் வாழ்த்தும்படி செய்து பொன் மலர்களைக் கையில் கொண்டு தவறுது அருச்சனை செய்யும்படி விதித்தான். மறையோர்கள் அவ்வாறே செய்து வரும்போது திருமால் திருவடிகளில் அப் பொன் மலர்மீது மண்மலர் கிடத்தலைக் கண்டு அச்சம் கொண்டு அரசர்க்குச் சொல்ல அவன் வியந்து விரைந்து வந்து தன் கண்ணுல் நோக்கினன். அவ்வாறு இருத்தலைக் கண்டு சிலரைக் காவல் வைத்துப் பின்னும் நோக்க மீட்டும் அவ்வாறே மண் மலர்கள் இருத்தலைக் கண்டு மிக்க வியப்புற்று இறைவனை வணங்கி "திருமகள் கேள்வ! மண் மலர்களால் உன் திருவடிகளை அர்ச்சிப்போன் யாவன்? அவனை யான் காணுமாறு திருவுள்ளம் செய்ய வேண்டும்" என்று இரங்கி வேண்ட இறைவன் "இவ்வுலகில் குருவக் கிராமத்தில் இருப்பான் ஒரு குயவன் என்னை நாள்தொறும் ஏகாந்தமாக ஞான பூசையால் அர்ச்சனை செய்கின்றுன்: அதனை நான் பரிவோடு ஏற்றுக் கொள்ளுகிறேன்" என்று அருளினுன். அரசன் அத்தகையோனைக் காண விரும்பி விடைபெற்றுக் கொண்டு குருவக் கிராமத்தை அடைந்து வீமன் என்று பெயர் பூண்ட அக் குயவனைக் கண்டவுடன் அவன் அரசனை வணங்கி நின்றுன். அரசன் அப்போது "நீ வேங்கட நாதனை எவ்விதம் ஆராதித்து வருகின்றுய்: அதனை எனக்கு உரைக்க வேண்டும்" என்ன, அவன் "அரசே! நான் மண் பாண்டங்கள் செய்யும் குயவன்: வேங்கட நாதனை வழிபடுதற்கு உரிய முறைமையைச் சிறிதும் அறியேன்: நான் அந்நாதனை அர்ச்சிப்பதாக உமக்கு

யாவர் உரைத்தார்?" என்று கேட்டான். அரசன் குருவை நம்பியைப் பார்த்து "சீநிவாசனே உன் பூசையை மிகவும் உகந்தருளியதாகச் சொல்லி இந்நகரில் நீ வாழ்வதாகக் கூறினமையால் நான் இங்குப் போந்து பார்த்தேன்" என்றான். அப்போது குருவைநம்பி "அண்ணலே! நான் சீநிவாசன் திருவடியை வணங்கிப் பூசித்து வருதலை உலகில் எவருக்கும் அறிவியாது ஒழிய வேண்டும் எனப் பிரார்த்தித்திருக்கவும் இறைவன் உம்மிடம் தெரிவித்துளது என்னெனில், நான் இறைவனைப் பணிந்த போது அவன் நீ பூசிப்பதனை உலகில் எவரிடத்தேனும் சொல்லி நான் எந்நாளில் அனுப்புகின்றேனோ அந்நாளில் நீ அழிவில் முத்திப் பேறு அடைவாய்" என்று அருளியுள்ளான். அதன்படியே இப்போது விமானம் வந்துளது: பாரும்: என்று சொல்லி விட்டுத் தன் மனைவியோடு அவ்விமானத்தில் ஏறி வைகுந்த பதம் அடைந்தனன். இதனைக் கண்ட அரசன் வியப்பு உற்று இறைவனைப் பூசியாதவர்க்கு முத்திப் பேறு இல்லை என்று எண்ணித் தன் நகரியை விரைந்து அடைந்து தன் புதல்வனுக்கு முடி சூட்டுவித்துத் திருவேங்கட நாதனை இடையறாது வணங்கி உலகைப் பாதுகாத்து வாழ்வாயாக என்று கூறிவிட்டுத் தான் திருமலையை அடைந்து இறைவனை நினைந்து தவம் புரிந்தான். அப்போது இறைவன் கருடன்மேல் எழுந்தருளிக் காட்சி கொடுத்து நிற்க அரசன் இறைவனைப் பலவாறு வழுத்தி அடியேனுக்கு முத்தியை அளித்தருள்க என்று வேண்டலும் இறைவன் அருளால் விமானம் வந்து நிற்க அதன் மீது ஏறி வைகுந்த பதம் அடைந்தான் என்று பூமிப் பிராட்டிக்கு ஆதி வாரகமூர்த்தி அருளினார் என்று முனிவர் கூறி முடித்தார். இது வாராக புராணப் பொருள்.

## 41. பிரயாகையின் மான்மியம் உரைத்த அத்தியாயம்.

ஆதி வாராகர் பூமிப் பிராட்டிக்கு மேலும் கூறுவார் ஆயினர். சனக மகாராசன் சதானந்த முனிவனை நோக்கி, "சீதையால் மிகவும் நொந்தேன்; என்னெனின், இராவணன் பிரமனைக் குறித்துத் தவம் புரிந்து பெற்ற வரத்தால் செருக்குக் கொண்டு உலக கண்டகனாய் இருக்கிறான். சீதை பருவம் எய்தி இருக்கின்ற செய்தி கேட்டானாகில் என்பால் போர் மேற்கொண்டு வருவான். ஊர்மிளை, சுருத

கீர்த்தி, மாண்டவி முதலிய புதல்வியர்களுக்கு யாவரை வரர் எனப் பிரமன் அமைத்துள்ளானோ? என் முன்னோர்களில் தேவாதன் என்ற மன்னன் சீதை பொருட்டாகத் தேவர் முன்னிலையில் ஒரு வில்லைக் கொடுத்து வைத்துள்ளான். அவ்வில் இப்போதும் எம்மால் பூசிக்கப்பெற்று வருவது. பல அரசர் என்பால் போந்து சீதையை மணம் பேச வந்த காலை இந்த வில்லை வளைத்தவனுக்கே கொடுப்பேன் எனச் சொல்ல, அவ் வில்லைக் கண்ணில் கண்டு நடுநடுங்கி எடுக்க ஆற்றாதவர்களாய்ச் சினந்து என்னொடு போருக்கு வா, யான் தனியன் ஆகவே போர் ஏற்று அவர்களை வென்றேன். இனி இராவணன் வந்தால் யான் எங்ஙனம் அவனோடு தனியனாய் அமர் செய்வேன்? புதல்வியருக்கு மணம் முடிதலும் வேண்டும். ஆதலால் மனம் மயங்கி யுள்ளேன். அவர்கள் திருமணம் நிறைவேறிப் புத்தி மயக்கம் தீர்ந்து மேல் கதியும் பெறுதற்கு யான் எந்தத் தேவனை வழிபடல் வேண்டும்; அந்நெறியை எனக்கு உரைப்பீராக" என்று வேண்டினன். அதுகேட்ட சதாநந்த முனிவன் அரசே! திருமாலைக் கணமும் மறவாத வால்மீக முனிவர்பால் சென்று வணங்கி அவர் அன்பாய்க் கூறும் கதைகளைக் கேட்டு வருங்கால் நாரத முனிவர் அங்கு வரலும் அவரை அம் முனிவர் உபசரித்து மாதவரே! திருமால் இலக்குமியோடு நிலவுலகில் அடியவர் துயர் களைதற்கு எழுந்தருளிய தலத்தையும் தூய கருமம் செய்தற்குச் சிறந்த இடத்தையும் கூறுக என்று வேண்ட நாரதர் கூறுவாரானார். ஆதிகாலத்தில் இமய மலையில் சுப்பிரமணியன் எனக்கு உரைத்தது என்னெனின், கைலாய மலையில் சிவனைப் பணிந்து "நான் தாருகாசுரனைப் போரில் தலை துணித்தமையாலே பிரம்மஹத்தி என்னைப் பற்றியுள்ளது. என் வயிற்றில் பசியும் நீர் வேட்கையும் மிக்கு உள்ளன. ஆகையால் அஞ்சி அடிகளை அடைந்தனன். இந்தப் பாவம் தீரும்படியாக அருள் செய்ய வேண்டும்" என்று வேண்டிக் கொள்ள அதற்கு உருத்திரன் மறுமொழி உரைத்தான். என்னெனின், "தக்ஷன் யாகம் செய்த நாளில் என்னைச் சற்றும் மதியாமல் அக்கிரமம் பேசினன். ஆதலால் அவ் வேதியன் தலையைக் கொய்து விட்டேன். அத்தலை என் கையில் ஒட்டிக்கொண்டது. பிரம்மஹத்தி தோஷம் பற்றிக் கொண்டது. உள்ளம் வெதும்பிச் சோர்ந்து நா வறட்சி உற்று அதிக தாகம் கொண்டு பசியால் மெலிந்து கையில்

ஒட்டிக் கொண்ட கபாலத்தோடு பிச்சை ஏற்று எங்கும் ஓடி அலைந்தும் அப்பாவம் நீங்காமல் இருந்தது. எவ்விடம் சென்றால் இது தீரும் என்று ஆலோசித்து மேரு மலையை அடைந்து அதன் முடியில் உள்ள பிரம்ம தீர்த்தத்தில் முழுகிப் பிரமனைத் தியானித்துத் தவம் மேற் கொண்டேன். பிரமதேவன் உவந்து என் முன்னம் வந்தனன். தக்கன் தலையைத் துணித்தமையாலே பிரம்மஹத்தி என்னைப் பற்றி யுள்ளது. அது திரும்படி அருள்செய்க என்று வேண்டினேன். அவன் அருளால் நோக்கித் திருமாலுக்கு உவப்பு உண்டாகும்படிக் கங்கா யமுனைச் சங்கம திவ்விய தேசத்தில் முன்பு முனிவர் பலரோடு கலந்து அமலமான திவ்ய யாகம் ஒன்று செய்தேன். அப்போது மாதவன் என் முன் காட்சி கொடுக்கத் தரிசித்து வணங்கிப் புகழ்ந்தேன். அப்போது இறைவன் உவந்து உமது யாகம் உலகில் நன்கு நிறைவேறியது. யான் இங்கு வந்ததால் இவ்விடத்துக்குப் பிரயாகை என்று பெயர் ஆகுக. இங்குக் கயாசிராத்தத்தில் நலம் புரிவோர் முன்னோர் நரக வேதனையை மாற்றி நற்கதி கொடுத்து விருப்புடன் திருவுடன் இருப்பேன் என்று அருள்செய்து அங்ஙனமே எழுந்தருளியுள்ளான். நீ அங்குச் சென்றால் உன்னைப் பற்றிய பிரம்மஹத்தி சூரியனைக் கண்ட இருள் போல நீங்கிவிடும் என்று உரைத்து அன்னப் பறவைமீது ஏறிப் பிரம லோகம் சேர்ந்தனன். நான் திருமால் எழுந்தருளியுள்ள பிரயாகைக்குச் சென்றேன். அக்கணமே பிரம்மஹத்தியும் பிரம கபாலமும் என்னைவிட்டு அகன்றன. நான் மகிழ்ந்து நதியில் நீராடித் திருமாலின் அடிமலரை வணங்கி இறைவனே! நான் இத்தலத்தில் என்றும் வாழுமாறு அருள்க என்று வேண்டினேன். இறைவனும் மகிழ்ந்து இங்கு உமாதேவியுடன் நீ தவ வடிவம் மேற்கொண்டு உறைவாயாக என்று அருளிச் செய்ய மகிழ்வுற்று அன்று முதல் இன்றுவரை இந்தப் பிரயாகையில் இருக்கின்றேன்" என்று சிவன் சுப்பிரமணியனுக்குச் சொல்லிப் பின்னர் வேங்கட மலையின் பெருமையை உரைத்தனன் என்று. நாரதன் சொல்ல வால்மீக முனிவன் கேட்டுக் களிப்புற்றுச் சதானந்த முனிவனுக்குக் கூறினன். அவனாலே சனக மகா ராசன் அறிந்தான் என்று ஆதி வராகமூர்த்தி பூமிப் பிராட்டிக்கு உரைத்தனர். இவ்வாறு சவுனகர்க்குச் சூத முனிவர் உரைத்த பொருள் வராக புராணத்து உள்ளது.

# 42. சண்முகன் தவம் உரைத்த அத்தியாயம்.

நாரத முனிவர் சதானந்த முனிவருக்குச் சொல்லுவார் ஆனார். சுப்பிரமணியன் தன் தந்தையாகிய சிவன் சொல்லிய சரித்திரம் முழுதும் கேட்டு வணங்கித் தந்தாய்! நான் உலகில் தவம் செய்தற்கு உரிய புண்ணிய தலம் இன்னது எனக் கூறுவீராக என்றான். அதற்குச் சிவன் அஞ்சனகிரி, ஞானமலை, வேங்கடமலை முதலிய பல பெயர்களை உடையதாய் ஆதிசேஷன் வடிவான மலை ஒன்று உண்டு. அத் திருமலையில் திருமால் சுவேத வாரக மூர்த்தியாய்த் தோன்றி இரணியாட்சனைக் கொன்று பூமிப் பிராட்டியைத் தன் கொம்பில் ஏந்திக் கொணர்ந்து தன் மடியில் செம்மையாக இருத்திக் கொண்டு வீற்றிருக்கின்றான்; அத் திருமூர்த்தி முன் சாமி புஷ்கரிணி என்று விளங்கும் தீர்த்தத்தில் நீராடியவர்கள் தாம் நினைத்தவற்றை எல்லாம் பெறுவார்கள். அப் புண்ணிய தீர்த்தத்தின் கரையில் எவ்வுலகையும் காக்கும் தருமன் என்ற பெயருடைய மனு முன்பு அருந்தவம் புரிந்தனன். ஆதி வாரகமூர்த்தி அவனுக்குக் காட்சி கொடுத்துச் சின்னாளில் உலக பாலகர்களில் ஒருவனாய் எம தரும ராசா ஆகிப் பாவிகள் எல்லோரையும் முறையாக ஆய்ந்து தண்டம் செய்து விளங்குவான் என வரம் அளித்து அருளினன். வாயுதேவனும் அத் திருமலையில் மெய்த் தவம் புரிகின்றான். நீயும் அவ்விடத்திற்குச் சென்று அப் பரந்தாமனை நினைந்து தவம் செய்தால் உன்னைப் பற்றிய பிரமஹத்தி தோஷம் நீங்கி விடும் என்று அருளினன். அறுமுகன் தந்தையை நோக்கித் தனக்கு ஒரு மந்திரம் அருளுமாறு வேண்டினன். சிவனும் தாரகப் பிரம மந்திரத்தை வழங்கினன். அதனைப் பெற்றுக் கொண்டு திருமலைக்குச் சென்று அங்கு விளங்குகிற சாமி புஷ்கரிணியின் பக்கத்தில் பத்திமையோடு தவம் புரிகின்ற வாயு பகவானைக் கண்டு தானும் அவ்விடத்தில் திருமாலைத் தியானித்துத் தன் தவத்தை நிறைவேற்றினான் என்று நாரத முனிவர் கூறக் கேட்ட சதானந்தர் சனகனுக்கு இதனை அறைந்தார் என்று சூத முனிவர் கூறினர். இச்செய்தி வாமன புராணப் பொருள் ஆகும்.

## 43. இந்திரன் சாப விமோசனம் பெற்ற அத்தியாயம்.

நாரதர் சதானந்தர் முதலியோருக்கு மேலும் கூறுவார் ஆயி ஞர்: சுப்பிரமணியன் திருமலைமேல் திருமாலை நோக்கித் தவம் புரியச் சென்ற பின் உமையாள் தன் கணவனை நோக்கி மறைகளுக்கு எட்டாத விமல மூர்த்தி சுப்பிரமணியன் விழிகளுக்கு எதிர் தோன்று தற்கு நாள் பல ஆகும் என்று கூறுதலும் சிவன் உமையே! நீ வருந் தாதே: திருமலையில் பல முனிவர் தேவர்கள் திருமாலைக் காணுவதற் குத் தங்கியுள்ளார்கள்: நாள் கழிந்ததும் நாமும் அவ்விடம் செல்லு வோம். திருமலைப் பெருமான் காட்சி கொடுப்பான். எல்லோரும் காட்சி பெற்று இன்புறுவோம் என்று கூறி மேலும் ஒரு வரலாறு கூறத் தொடங்கினன். இந்திரன் அகலியையை இச்சித்ததைக் கௌத மன் அறிந்து சினந்து அவன் உடலில் பெண் குறி கொள்ளச் சபித் தான். அவ்வாறே அவன் உடல் தோன்ற இந்திரன் பெருந்துயர் கொண்டு பிரமன் உலகை அடைந்து மானச தீர்த்தத்தில் மறைந் திருந்தான். இந்திரன் இல்லாமையைத் தானவர் கண்டு திரண்டு வர வானவர்கள் இந்திராணியின் அரண்மனையை அடைந்து அவளை வினவ அவள் தான் அறிந்திலாமையைச் செப்பித் தேவ குரு ஆகிய பிருஹஸ்பதியிடம் கூறுமாறு அனுப்பினுள். வானவர் பிருஹஸ் பதியை அடைந்து இந்திரனைப் பற்றி வினவலும் அவன் ஞானத்தி ஞல் நாடி இந்திரன் தன் தீச்செயலால் உடம்பு எல்லாம் பெண் குறி பெற்று நாணம் கொண்டு பிரமன் உலகில் மானச தீர்த்தத்தினுள் மறைந்து உறைகின்முன் என்று கூற அவனெடு தேவர்கள் ஆங்குச் சென்று நோக்க இந்திரன் அவர்கள் வருகையை அறிந்து பழிப்பாக என் மேனியில் பொருந்திய இக்குறிகள் ஒழிய நீங்கள் ஒரு யாகத் தைச் செய்யுங்கள் என்று வேண்டிக் கொண்டான். வானவர்கள் அரசே! உம்மைத் தவிர்ந்து யாம் யாகம் எவ்வாறு நலம்பெறச் செய்வோம்: தைத்தியர் தீமையால் அஞ்சினேம்; ஊர் அகன் ருேம்; நீர் வந்து அவர்களை வென்ற பின்னர் உம் சாபம் தொலைய யாகம் செய்வோம்: இம் மானச மடுவில் ஒளித்து உறைதல் நன்று அன்று என்று சொல்லக் கேட்டு இந்திரன் எவ்வாறு தேவர் உலகிற்கு வருவேன்; என் உடம்பு முழுதும் இழி குறி அமைந்துள்ளது. கண்டோர் பழி கூறத் தீவினையை விரும்பிச் செய்தது இவ்வாறு ஆனது என்று நாணத்துடன் எதிர் எழுந்து நின்று பிருஹஸ்பதியின் அடிகளில் வீழ்ந்து ஐயனே! முக்காலமும் உணரும் நீவிர் என்

மனுச்செயல் அறிவீர். தேவ காரியமாக முன்பு ஒருநாள் பிருகு முனிவரிடம் சென்றேன்; அங்கு ஒரு சாபம் என்னைச் சார்ந்தது. அஃது என்னெனின் தேவர்களின் ஆண் குறிகள் என்மேனியைச் சாரும்படிச் சபித்தனன் என்று உரைத்து நின்றான். இதனைக் கேட்ட பிருஹஸ்பதி தேவர்களை அழைப்பித்து உங்கள் ஆண் குறிகளை உம் தலைவன் விரும்பினன்: தருவீர்களாக என்று கூற அவர்கள் அதற்கு இசைந்து தர அவன் உடம்பைச் சார்ந்த குறிகள் எல்லாம் மறைந்தன. பின்னர் அவன் அங்கு நின்றும் சென்று தன் பதி சேர்ந்து அவுணர்கள் போரில் கெட்டு ஓடுமாறு வென்று பின்னர் அரம்பையர் இன்பத்தை நிரம்பத் துய்க்கத் தொடங்கிப் பிருஹஸ்பதியை அடைந்து என் உடம்பைச் சார்ந்த தேவர்கள் குறிகள் எல்லாம் நீங்குமாறு அருளுக எனலும் அவன் திருவேங்கட மலையைச் சார்ந்து விச்சுவசேன தீர்த்தக் கரையில் அரிய தவம் செய்யின் நீங்கும் என்றான். இந்திரன் அவ்வாறே திருமலை அடைந்து அத்தீர்த்தத்தில் நீராடி அதன் கரையில் நின்று தன் உள்ளத்தில் இறைவனைத் தியானித்துப் பூசை புரிந்தான். வேதத்தில் உயர்ந்த காயத்திரி மந்திரத்தை உச்சரித்து நிலத்தில் ஒருகால் ஊன்றித் தவம் புரிய இறைவன் அவன் எதிர் தோன்றி நிற்க வணங்கி வழிபாடு செய்து எம்பெருமானே! என் மேனி ஆண்குறி ஒன்று ஒழியப் பிற எல்லாம் நீங்க அருள் செய்க என்று வேண்டினன். இறைவன் அவ்வாறே அருளிச் சென்றான் என்று சிவன் உமைக்கு கூறினன். மேலும் இந்திரன் மேனியினின்று நீங்கிய குறிகள் எல்லாம் மறை முனிவர் உருவு அடைந்து நின்று அவனை நோக்கி நாங்கள் முன்பு இந்திராணியின் இன்பம் விரும்பித் தவம் செய்ய எங்கள் கருத்து உணர்ந்த கௌதம முனிவர் சினந்து உன் மேனியில் குறிகளாய் அமைந்து அவள் இன்பம் புணரக் கடவோம் என்று கூறியவாறு இங்கு உற்றோம் என்று உரைத்தது கேட்ட இந்திரன் நீங்கள் ஆயிரவரும் எனக்கு என்றும் ஆயிரம் கண்களாக அமைவீராக என்ன அவர்கள் பாதலம் சென்று ஆயிரம் கண்களாய் வந்து நிற்க ஏற்றுக் கொண்டு தேவர் புகழத் தன் பதி சேர்ந்து வாழ்ந்தான் என்று சிவன் உமைக்குக் கூறி முடித்ததை நாரத முனிவர் சதானந்தர்க்குச் சொன்னார். அவர் சனகன் கேட்ப விரித்து உரைத்தார் என முடித்தனர். இவ்வாலாறு வாமன புராணப் பொருள்.

## 44. விச்சுவசேனர் உற்பத்தி உரைத்த அத்தியாயம்.

சிவன் சொன்ன வரலாற்றைக் கேட்ட பார்வதி வியப்புற்று விசுவசேன தீர்த்தத்தின் சிறப்பு முழுதும் கூறியருள வேண்டும் எனச் சிவன் கூறினன். அதனை நான் சொல்வேன் என்று நாரதர் தொடங்கினர். முன்பு ஒருகால் இந்திரன் தேவ மாதருள் ஒருத்தி ஆகிய குந்தளையை அழைப்பித்துத் துருவாச முனிவன் தவச்சாலைக் குச் சென்று அவன் தவத்தினைச் சிதைக்கக் கட்டளையிட அவள் அவ்வாறே அம் முனிவன் இருக்கையை அடைந்து அவன் முன்பு தன் மேனிப் பேரழகும் நயப்பும் தோன்ற நின்றனள். அவள் அங் ஙனம் நின்ற நிலையைப் பார்த்த முனிவன் தன் தவத்தைச் சிதைக் கவே வந்தாள் என உட்கொண்டு சினந்து நீ வேட்டுவிச்சி ஆகுக என்று சாபம் இட்டான். அப்போது அவள் அஞ்சி அவன் அடி களில் விழுந்து வணங்கி இந்திரன் ஏவலால் போந்த என் பிழை யைப் பொறுத்திடுக என்று இறைஞ்சினள். முனிவன் நீ இழிந்த வேட்டுவக் குலத்தில் தோன்றிக் குற்றம் அற்ற ஒரு குழந்தையைப் பெற்ற பின்னர் இச் சாபம் நீங்கும் என்று உரைத்தான். அவள் மேலும் வணங்கி மாதவரே! உம் அருளால் யான் பெறும் அக் குழந்தை தீர்க்காயுளும், தத்துவ ஞானமும், பக்தி பலங்களும் உடைய பரிசுத்தன் ஆகி விளங்க அருள் செய்க என்று வேண்டினள். முனிவனும் இரங்கி அவ்வாறே அருளிப் போனன். பின்னர் அவள் வீரவாகு என்று பெயர் பெற்ற ஒரு வேட்டுவன் மகளாய்ப் பிறந்து சுவற்சலை என்ற பெயர் பெற்று விளங்கினள். அந்நாளில் அவன் அவளைப் பத்திரன் என்பானுக்கு மணம் புரிவித்தான். சுவற்சலை பரு வம் அடைந்து ஒரு புண்ணிய நாளில் நருமதை நதியில் முழுகி ஓர் இளமரச் சோலையில் நின்றாள். அப்போது வருண தேவன் அவளை அடைந்து தன் வேட்கை மிகுதியினல் தழுவிப் புணர்ந்து இன்பம் துய்த்து மாதே! நீ விரும்புவது யாது? என்றான். சுவற்சலை "வருண தேவா! ஞான பலம் கீர்த்திகளால் சிறந்த ஒரு புதல்வனை அருள்க" என்ன அவன் அவ்வரத்தைக் கொடுத்து அகன்றான். பின் னர் அவள் கருப்பம் கொண்டு பத்து மாதம் கழிந்தபின் பூச நட்சத் திரமும் கற்கடக ராசியும் சேர்ந்த புண்ணிய நாளில் பொன் மேனிப்

பொலிவு சான்ற ஒரு புதல்வனை ஈன்றாள். அம் மகவு பத்து யாண்டு அடையும்வரை அதனை விருப்பத்தோடு பாதுகாத்து நின்று பின்னர் துருவாச முனிவரால் நேர்ந்த சாபம் நீங்கத் தேவர் உலகம் சேர்ந்தனள். அம் மகனும் பின் தன் தந்தையை நீங்கிக் காசிப முனிவரிடம் சேர்ந்து வேத சாஸ்திர உணர்ச்சி பெற்றுப் பின்னர் அஞ்சனாத்திரி ஆகிய திருமலையை அடைந்து திருமாலின் திருவடிகளைத் தியானித்துத் தவம் புரிந்து தேசு வாய்ந்த சேனை நாயக பதவியை அடைந்தான். ஆதலால் அந்தத் தீர்த்தத்துக்கு அன்று தொடங்கி விசுவசேன தீர்த்தம் என்று பெயர் உண்டாயது. எப் பாவத்தையும் நீக்க வல்ல அதற்கு மேல்பால் அக்கினி தீர்த்தம், பிரம தீர்த்தம், சப்த ருஷி தீர்த்தம், சித்த தீர்த்தம் என்று சொல்லும் பல தீர்த்தங்கள் உள்ளன. பாதாளத்திலிருந்து ஓர் இலிங்கம் நிலத்தைப் பிளந்து கொண்டு மேல்வரக் காமதேனு தீ விழித்து நோக்கித் தன் கொம்புகளினால் குத்திப் பெயர்க்கச் சென்ற போது அவ்விலிங்கம் தெய்வப் பசுவினை நோக்கி எனக்கு இடர் செயல் வேண்டா. இனி வெளிப்படாது உன் குளம்பு முகக் குறியே ஆகப் பெற்று இந்நிலத்து உள்ளேன் என்று கூறியிருந்தது. அந்த இலிங்கம் வந்த பிலத்தின் பெயர் யாது எனின் வெண்மையான பசுவாகித் தோன்றிய முனிவன் பேரினால் கபில தீர்த்தம் என்று ஆயிற்று. அத்தீர்த்தத்தில் கார்த்திகை மாசத்தில் பௌர்ணமி நாளில் பத்து நாழிகைப் பொழுதில் எல்லாத் தீர்த்தங்களும் வந்து சேரும். ஆண்டு தோறும் அப்போது அதில் முழுகுவோருக்கு அயன் உலகும் பிற பேறுகளும் உண்டாகும் என்று நாரதன் சதாநந்தர்க்கு உரைத்தனன். அச் சதானந்தன் சனகனுக்கு உரைத்தான் என்று சூதர் கூறி முடித்தனர். இது வாமன புராணப் பொருள்.

## 45. பெரிய திருவடியையும் வாயுவையும் திருமலையில் நிறுவிய அத்தியாயம்.

சிவன் உமைக்குச் சொல்லிய கதையை நாரதன் சதாநந்தர்க்குச் சொல்லத் தொடங்கினன். வாயுதேவன் முன்பு திருவேங்கட மலையை அடைந்து இறைவனை உள்ளத்தில் தியானித்து நெடு நாள் அருந் தவம் புரிய இறைவன் காட்சி தந்து நீ பல நாள் வருந்தினாய்:

உனக்கு வேண்டும் வரம் தருவோம் என்ன அவன் பணிந்து எழுந்து "ஐயனே! நான் இத் திருமலையில் உன் திருவடி தரிசனம் பெற்றுக் கொண்டு என்றும் தூயவனாய் இருக்குமாறு அருளுக" என்ன இறைவன் "இம் மலையில் யான் எண்ணிறந்த காலம் இருந்து இன்பு உறுவேன்: ஆதலால் நீ இங்கு என்னை வழிபட்டு உறைவாயாக" என்று அருள அங்ஙனமே வாயு வழிபாடு செய்து கொண்டு மண்ணவர் காணுதபடி மறைந்து உறைகின்றான் என்று உமைக்குச் சொன்னான். வலியோன் ஆகிய கருடன் இம் மலையை எடுத்து வைகுண்டத்திற்குச் செல்ல முன்பு ஒரு காலத்தில் தான் நினைத்த அளவில் இறைவன் புள்ளரசனை அருள் கூர்ந்து அழைத்து "நாம் இம்மலையில் வையத்தார்க்கு வாழ்வு அருளத் திருமகளோடு உறைவோம்: ஆதலால் நீ இதன் தெற்கின்கண் உறைவாயாக" என்று கூறி அவ்வாறே சாமி புட்கரிணியின் பாங்கர் எழுந்தருளியுள்ளான் என்று பின்னும் அத் திருமலையின் சிறப்புகள் எல்லாம் சொல்லி நந்தி மீது ஏறித் தன் கணங்கள் சூழச் சென்று திருவேங்கட மலையை அடைந்து வலமாக வந்து வணங்கிச் சாமி புட்கரிணி சேர்ந்து தான் அணிந்துள்ள எலும்பு மாலை முதலியவற்றைக் களைந்து உமையாளுடன் நீராடி மறைப் பொருள் ஆகிய மாதவனைப் பணிந்து வழிபாடு செய்து சுப்பிரமணியன் அங்குத் தவம் புரிவதனைப் பார்த்து மகிழ்ந்து கபில தீர்த்தத்தைக் கண்ணுற்று அங்குத் தங்குதல் நலம் என்று எண்ணி உரு மறைத்து உறைகின்றான் என்று சதாநந்தர்க்கு நாரதன் கூறினான். இதனைக் கேட்ட சதானந்தர் சனக ராசனுக்குச் சொல்லி மேலும் திருமலையின் பெருமையைச் சொன்னார். முன்பு நிமி சக்கரவர்த்தி பெற்ற சனகன் கங்கை நதிக்கரையை அடைந்து தேவர்கள் வியக்குமாறு அசுவமேத யாகம் செய்தான். அந்த யாக சாலைக்கு முனிவர்கள் வந்த போது இம்மைப் பயனை அடைந்ததாகக் கருதி அரசன் அவர்களை வணங்க அம் முனிவர்கள் யாவரும் அங்கு ஒரு நாள் தங்கினர். அப்போது அவர்கள் எல்லாம் உணர்ந்த வாம தேவ முனிவரை வணங்கி "ஆதிசேடன்மீது கருணாயிறு போல் விளங்கும் இறைவன் வரலாற்றினைக் கேட்க விரும்புகின்றோம்: சீநிவாசன் எங்கு உறைகின்றான் கூறியருளுக" என்று வேண்டினர். அதற்கு அம் முனிவர், "இவ்விடத்தினின்று இரு நூற்றுக் காவத தூரம் தெற்குத் திசையின்கண் சென்றால் ஞானம்

அளிக்கும் திருமலையை அடையலாம்: அங்குப் புலகன், நாரதன் முதலிய முனிவர்கள் நாளும் தவம் புரிகின்றார்கள்: முன்பு ஒருகால் நான் அம்முனிவர் தங்கிய திருமலையை அடைந்து திருமாலைக் குறித்துத் தவம் புரிந்த அகஸ்திய முனிவர் தவச்சாலைக்குச் சென்றேன். அவர் மகிழ்வு உற்று என்னை நோக்கிக் கோதாவரிக் கரையில் நான் திருமகள் கேள்வனை உள்ளத்தில் தியானித்துத் தளர்வு இன்றி யோகம் புரிந்தபோது நாரதன் என்பால் வந்தான். நான் உபசரித்து இறைவனைக் காணுமாறு அருளுக என்று வேண்டினேன். அவன் கூறியதாவது நான் பிரமனிடம் சென்று மாயவன் எங்கு உறைகின்றான்: புகல்க என்று வேண்ட அவன் சிவன் முதலாக உயிர் வருக்கங்களைக் காப்பதற்காகத் திருவேங்கட மலைமீது அமர்ந்து அருள்புரிகின்றான்: அவன் திருக்கோலத்தைக் காண விரும்பினால் என்னுடன் வருக என்று கூறி வானவர் தன்னைச் சூழ முனிவர் மறைமொழி பகர அத் திருமலையை எய்திச் சங்கு சக்கரத் திருக் கையனைக் காணுதற்கு அங்குத் தேடிச் சேவை பெறாமையாலே பிரமன் என்னை நோக்கி ஈசன் எப்போது வந்து அருள் செய்வானோ? தெரிகிலன்: அவ்விறைவன் சேவை அளிக்கும் வரை இம் மலையை வலம் செய்வீராக என்று கூறித் தன்னுலகு சென்றான் எனக் கூறினான் என அகஸ்தியர் எனக்கு உரைத்தார் என்று வாமதேவர் உரைக்க அதனைச் சனகன் விரும்பிக் கேட்டான் என்று சதாநந்தர் கூறினர். இவ்வாறு சூதர் நைமிசாரணிய முனிவர்க்கு உரைத்த பொருள் வாமன புராணத்தில் உள்ளது.

## 46. அகத்தியர் முதலிய முனிவர் திருமலை வலம் வந்த அத்தியாயம்.

வாமதேவ முனிவர் சனகனை நோக்கி மேலும் கூறலாயினர். "காமம் முதலிய புலப்பகைகளை வென்ற முனிவர்கள் பிரமன் கட்டளைப்படி ஆதி முதல்வனைத் தியானித்து அத் திருமலையை வலம் வருங்கால் வாயு மூலையில் வெண்மையான பாறைமீது ஒரு புருஷன் நிற்றலைப் பார்த்த அளவில் அகஸ்தியர் வியப்புற்று 'இங்கு வந்த நீ யாவன்? உன் பெயர் யாது? சொல்லுக' என்று வினவ அவன் ஒன்

றும் சொல்லாமல் மறைய முனிவர் இது வியப்பாய் உள்ளது என்று வடக்குத் திக்கினை அடைந்து அங்கு உள்ள ஏழு தீர்த்தங்களில் நீராடிப் பின்பு கடல்போல் பரந்த பங்கஜ தீர்த்தத்தை அடைந்து நோக்கினார்கள். அதனிடத்தில் வித்தியாதரரும் கந்தருவரும் பிற வானவரும் நீராடி இன்புற்றுக் கைகுவித்து உள்ளத்தை முதல்வனிடம் செலுத்தி அமர்ந்துள்ளது கண்டு அயலில் உள்ள ஒரு பூஞ்சோலையை அடைந்தார்கள். தேவர் பலர் அரிய தவம் புரிதலை அகஸ்தியர் கண்டு 'நீவிர் யாவர்? தவம் புரிவது என்னை? கூறுக" என்று வேண்ட அவர்கள் "ஆதிநாதன் ஆகிய திருமாலை உள்ளத்து இருத்தித் தவம் புரிகின்றோம்" என்று உரைக்க, அகஸ்தியர் தவசியரோடு வழிக்கொண்டு நடந்து போம் போது ஒரு மரத்தின் அடியில் ஏழு முனிவர்கள் திருமாலைக் குறித்து அல்லும் பகலும் அருந்தவம் புரிவதைக் கண்டு 'தருப்பாசனத்தின்மீது யாவரைக் குறித்துத் தியானம் செய்கிறீர்கள்?" என அவர்கள் "சங்கத் திருக்கையன் ஆகிய திருமாலை நோக்கித் தியானிக்கிறோம்" என்று கூற முனிவர் யாவரும் கிழக்குத் திசையை அடைந்தார்கள். இருவிகட்கும் நிமி புதல்வன் சனகனுக்கும் வாமதேவ முனிவன் நன்கு கூறித் திருமலை வலம்வந்த முனிவர்களோடு சென்று சேர்ந்தனன் என்று சனகனுக்குச் சதாநந்தர் கூறி மேலும் சொல்லத் தொடங்கினர். அந்தத் திருமலையில் அகஸ்தியன், நாரதன் முதலிய முனிவர் மகிழ்ந்து செல்லும் போது ஒரு செழித்த மரத்தின் அடியில் இந்திரன், சூரியன், குபேரன், இயமன், அஷ்டவசுக்கள், அக்கினி முதலிய தேவர்கள் சூழ வீற்றிருப்பதைக் கண்டு அகஸ்தியர் மற்ற முனிவரோடு அருகு போய்ப் பூசிக்க இந்திரன் முகமன் உரைத்துக் கூடியிருந்த காலை இந்திரனை அகஸ்தியர் அங்குத் தவம் மேற்கொண்ட காரணத்தை வினவினர். இந்திரன் "அரக்கர் செய்யும் கொடுமையால் வாடிப் பிரமனைப் புகல் அடைந்தோம்: அவனும் "திருமகள் கொழுநனைத் திருமலையில் சென்று போற்றிப் பூசித்தால் உம் பகை அறுத்து அருள் செய்வன்" எனக் கூறக் கேட்டு இலக்குமி நாதனைக் கண்ணில் காணுதற்கே இவ்விடம் அடைந்து இடையறாது தியானம் செய்கின்றோம்" என்று சொல்ல அகஸ்தியர் முதலியோர் மகிழ்ந்து தென் கீழ்த்திசையில் செல்ல அங்குத் திருமாலின் ஐம்படைகள் ஆகிய சங்கு, சக்கரம், வாள், கதை, வில் இவற்றின் ஒளித் தோற்றத்தைக் கண்டு வியப்பு அடைந்து

வணங்கிப் பின்னர் தென் திசையை அடைந்து அங்குச் செழித்த சோலைகள் பலவற்றை நோக்கி இறுதியில் நாற்றிசையிலும் மிக்க மணத்தைக் கொடுத்த ஒரு சோலையில் ஒளி மிக்க பிலக்ஷம் என்ற மரத்தின் அடியில் அறுகு, கொன்றை, மதி, நதி, இவற்றை முடியில் அணிந்த சிவன், தவம் புரிவதைக் கண்டு அருகு சென்று ஏத்தி "இந்தத் திருமலையில் எவரைத் தியானித்துத் தவம் இயற்றுகின்றீர்" என்று முனிவர்கள் கேட்கச் சிவன் அன்புடன் அவர்களை நோக்கி "இலக்குமி நாதன் ஆகிய பராபரம் ஆகி வியூகம், விபவம், அந்தரியாமி, அர்ச்சை ஆகிய நிலைகளையுடைய நாராயணனே வழிபாட்டுக்கு உரியன்: வேள்விகளுக்கு உரியன்: தியானிப்பதற்கு உரியன்: அவன் அல்லால் வேறு தெய்வம் இல்லை என்று உள்ளத்தில் தெளிந்து அம் முதல்வன் மகிழ்ந்து எழுந்தருளியுள்ள இத் திருமலையின்மேல் அவனைச் சுருதி முறை தவறாது வழுத்தித் தியான யோகத்தில் இருக்கின்றேன்" என்று விடையளித்தலும் அது கேட்டு மகிழ்ந்து மேற்கு நோக்கிச் சென்றார்கள். செல்லும் போது தென்மேற்குத் திசையில் ஓர் ஆலமரத்தின் கீழ் ஐம்படைகளோடு நான்கு தோள்கள் விளங்கப் பொன் மயமான மேனி ஒளி விட ஊர்த்துவ புண்டரம் திகழ விசுவசேனர் ஸ்ரீநாராயணனைத் தியானித்து அமர்ந்திருப்பதைக் கண்டனர். அங்கு அணுகிப் பணிந்து நிற்றலும் அவர் மகிழ்ந்து "திருமகள் நாதனை விரைவில் தரிசிக்க வேண்டுமேல் இத் திருமலையை விட்டு விலகாது உறைவீர்களாக" என்று கூறி மறைந்தனர். அவர் சென்ற பின் மேற்குத் திசையை அடைந்து அங்குப் புதுமைகள் எல்லாம் கண்டு சிரத்தை அடைந்து அங்குள்ள குமார தாரிகையில் நீராடி அறுமுகனைக் கண்டு ஏத்திப் பிரமன் சொற்படித் திருமாலைத் தியானித்துக் கொண்டு அகஸ்தியர் வாமதேவர் முதலிய முனிவர்கள் அத்திருமலையில் இருந்தனர் என்று சதாநந்தர் சனகனுக்கு உரைத்தார் என்று சூத முனிவர் கூறினர். இது வாமனப் புராணப் பொருள்.

## 47. சங்கராசன் தவமும் உபரிசரவசுவின் கதையும் உரைத்த அத்தியாயம்.

சனக ராசனுக்குச் சதாநந்தர் மேலும் கூறல் ஆயினர். கேகய நாட்டுக்கு அரசன் ஆகித் தருமம், கல்வி, ஞானம் முதலியவற்றில் சிறந்த சங்கன் திருமகள் நாயகனை உள்ளத்தில் அன்புடன் தியானித்தும் எண்ணிறந்த யாகங்களைச் செய்தும் நதி, நதம், தடாகம் முதலிய தீர்த்தங்கள் ஆடியும் சாஸ்திரங்கள் கூறிய விரதங்களை மேற்கொண்டும் மலை, சோலை முதலிய க்ஷேத்திரங்களுக்குச் சென்றும் அகப்பற்று நீங்குமாறு தவம் செய்தும் இறைவனுடைய காட்சி கிட்டாமையால் மிக்க துயரம் அடைந்து வாடும் போது திருமால் வானிடத்தே தோன்றி "அரசனே! ஞானத் திருமலையை அடைந்து என்னைப் பூசித்து ஐம்புலன் அடக்கித் தளராமல் யோகம் புரிந்தாயானால் நீ எண்ணியபடி எண்ணிய எல்லாம் அடைவாய்" என்று அருளிச் செல்ல அந்த அரசன் தன் புதல்வனை உலகு ஆள நியமித்து விட்டுத் திருமலையில் உள்ள கோனேரிக் கரையில் அமர்ந்து எண்ணற்ற காலம் தவம் புரிந்தான். அப்போது அகஸ்தியர் முதலிய முனிவர்கள் எல்லோரும் வந்து திருமகள் கொழுநனைக் காண இயலாதவர் ஆகி அம் மலையின் ஒரு குகையுள் இருந்து வருங்கால் தேவ குரு ஆகிய பிருகஸ்பதியும் அசுர குரு ஆகிய சுக்கிரனும் சூரிய வமிசத்தில் பிறந்து தருமத்தை நிகாற வளர்க்கும் உபரிசாவசு என்னும் அரசனும் அங்கு வந்தனர். அவ்வாறு வந்த உபரிசாவசு அரசன் முன்பு அந்தணர் இட்ட சாபத்தால் பாதாளத்தை அடைந்து தங்கியிருந்து பின்னர்த் திருமகள் கொழுநன் திருவருளால் இங்கு அடைந்தான் என்று சொன்னர். அது கேட்ட சனகன் அவ்வரசன் சாபம் எய்திய வரலாற்றைக் கூறுமாறு கேட்டலும் சதாநந்தர், "நான் வாமதேவரால் தெரிந்த செய்தியைக் கூறுகின்றேன். முன்பு ஒருகால் முனிவர் தேவர் அரசர் இந்திரனேடு கூடி நிலவுலகத்தில் அறத்தை வளர்க்கும் உபரிசாவசு மன்னனிடம் போந்தனர். அவ்வரசன் அவர்களை வணங்கி ஏற்றுத் தன்னை அடைந்த காரணத்தை வினவினன். அவர்கள் தருமநெறி எல்லாம் உணர்ந்த அரசே! உன்பால் குறைவு இல்லாத தர்ம சமயம் கேட்க

வந்தோம் என்று கூற அரசன் "இதன் நிமித்தமாகத்தான் வந்தீர்களோ" என்று சொல்லிய அளவில் அவர்கள் மனதில் சினம் கொண்டு நோக்கிப் "புவி அரசாட்சியை இழந்து பாதாளம் அடைவாய்" என்று சபித்தார்கள். இச் சாபத்தை ஏற்ற வசுவாசனை அயன், அரன் இருவரும் பார்த்து இவன் திருமால் அடியாவும் அரசன்: அந்தணர் சாபத்தால் துயர் உற்றுப் பாதலம் அடைகிறான் என்று இரங்கி, "துவாதசாக்ஷரத் திருமந்திரம் சிறந்தது: அதனை மறந்திட வேண்டா" என்று வானின் நின்று கூறினார்கள். அம் மந்திர மொழியை அவ்வாறே அவ்வாசன் இடையறாது தியானித்துப் பாதலத்தில் உறைகின்ற போது அத்தியானத்திற்கு உவந்த இறைவன் எதிர் நின்ற கருடனை நோக்கி, "உபரிசாவசு அரசன் அந்தணர் சாபத்தால் நில உலகு நீத்துப் பாதாளம் வீழ்ந்து என்னைத் தியானித்துப் பத்தி செய்கின்றான். அவனை இப்புவியில் கொணர்ந்து அவனுக்கு முடி சூட்டுவிப்பாய்" என்று கட்டளையிட அப்பொழுதே கருடன் பாதலம் சென்று வசுவாசனைப் பூமிக்குக் கொணர்ந்து அவன் தேயத்தில் விடுத்து முடி சூட்டுவிக்க அரசன் யாவரும் புகழத் தருமத்தைப் பாலித்து வந்தான் என்று சனகனுக்குச் சதாநந்தர் கூறினர் எனச் சூத முனிவர் நைமிசவன முனிவர்க்கு உரைத்தனர். இது வாமன புராணப் பொருள் ஆகும்.

## 48. அகத்தியர் முதலிய ரிஷிகளுக்கும் தேவர்களுக்கும், குரு, சுக்கிரன் வசு இவர்களுக்கும் சேவை தந்து வரம் கொடுத்த அத்தியாயம்.

சதாநந்த முனிவர் சனகனை நோக்கிச் சொல்லத் தொடங்கினர். உபரிசாவசு என்ற அரசனோடு தேவகுரு ஆகிய பிருகஸ்பதியும் சுக்கிரனும் அந்தத் திருமலையில் மூன்று யாகாக்கினிகள் போலக் கூடியிருக்க அகஸ்தியர் முதலிய முனிவர்கள் அங்கு அடைய அரசன் அவர்களை உபசரித்து நில உலகத்தில் அவர் வருதற்கு உரிய காரணத்தைக் கேட்க, அகஸ்தியர் "ஆதி நாயகனைக் காண விரும்ப நாங்கள் இம்மலையை வலமாக வந்து எண்ணில்லாத அருவிகளிலும் ஆறுகளிலும் நீராடித் தியானித்தும் இன்னும் அப்பெருமானைக் காண

வில்லை" என்றனர். இது கேட்ட உபரிசரவசு, "சங்கன் என்ற கேகய நாட்டு அரசன் சீநாரணனை இரவும் பகலும் உள்ளத்தில் நினைந்து சாமி புட்கரிணிக்கு அருகே ஆராதித்துத் தவம் புரிகின்றான். அவனுக்குக் காட்சி அளிப்பதற்கு ஆதி முதல்வன் திருவுளம் கொண்டுள்ளான். ஆதலால் நாங்களும் அங்குச் சென்றால் அவன் திருவுருவைக் கண்டு சேவிக்கலாம்" என்றான். அவ்வாறே அகஸ்தியர் முதல் யாவரும் கூடிச் சாமி புட்கரிணிக்கு அருகில் அடைந்து அரியாராதனை பூண்ட அரசனைக் கண்டனர். அவனும் இவர்களைக் கண்டு களிப்பு உற்று வணங்கி, "உமது தரிசனையால் என் பழவினை எல்லாம் ஓடின" என்று கூறி உபசாரம் செய்தான். அப்போது வானப் பரப்பு எல்லாம் ஒளி தோன்றக் கோடி சூரியர் உதித்தால் போல இருளைப் போக்கி மாதவர் கூட்டத்திற்கு இறைவன் தன் அற்புதத் திருவுருவைக் காட்டினன். திருமுடியும், மணிக் குண்டலமும், திருத்தோள் வளையங்களும், கவுத்துவ மாலையும், பொன்னுடையும், திருக்கைக் கடகங்களும், சங்கு சக்கரம் சார்ங்கம் கதை வாள் முதலிய ஐம்படைகளும் அளவு இல்லாத ஒளி பரப்பத் திருமகள் திருமார்பில் விளங்க வைசயந்தி வனமாலையும் பிரம சூத்திரமும் துலங்க அடியவர்க்கு அருள் செய்யும் அலர் விழிகளும் பவளம் போன்ற திருவாயும் நீல வண்ணத் திருமேனியும் இலங்க உபரிசரவசு, பிருகஸ்பதி, சுக்கிரன், தேவர்கள், அகஸ்தியர் முதலிய முனிவர்களுக்குக் காட்சி கொடுக்க யாவரும் வணங்கித் திருவடிவைக் கண்டு இன்பு உற்று இன்பக் கண்ணீர் பெருக நின்று ஆடி மறை பாடித் தோத்திரம் செய்தார்கள். இந்த விசேடத்திற்குத் தேவ துந்துபி ஒலித்தது. அதனைச் செவி மடுத்த பிரம தேவன் தான் முன்பு சொல்லி விடுத்த தவசியர்க்குத் திருமகள் கொழுநன் திருவருள் புரிந்தனன் எனத் தெரிந்து சரஸ்வதியுடன் அன்ன ஊர்தியில் ஆங்கு வந்து அடைந்தான். உருத்திரனும் உமையுடன் வந்தான். வானவர்க்கு அரசும் வந்தனன். விச்சுவ சேனரோடு யோக முனிவரும் வந்தனர். சித்தர் விஞ்சையர் முதலியோரும் சேர்ந்தனர். வந்தவர் யாவரும் திருமகள் கேள்வனை வணங்கி உள்ளத்தில் இன்பம் நிறையத் திருவுருவின் பேரொளியைக் கண் கொள்ள இயலாமல் தியானத்தாலே கேசவா, முகுந்தா, சீதரா, நாராயணா என்று பல படப் பாராட்டி "அருட்கடலே! நின் விச்சுவ உருவத்தை யாங்கள்

கண்டு மகாளள எண் இல்லாத விழிகள் வேண்டும்; ஆதலால் சாந்தத் திருவடிவத்தோடு சேவை தந்து அருள வேண்டும்; அன்றியும், அன்பு இல்லாமல் உலகிற்குத் தீமையைச் செய்து வரும் நிசாசரர்களை ஒழித்து அடியவர்களுக்கு அருள் செய்ய வேண்டும்" என்று இறைஞ்சிப் பின்னர் "இம்மலையின்கண் உம் திருவடியைச் சேவித்து மகிழ்ந்த எங்களுக்கு உம் பெரும் பதத்தை அருள வேண்டும்" என்னப் பெருமானும் திருவுளம் செய்து "நீவிர் வேண்டிய எல்லாம் பெறுவீர்: சின்னாள் கழிந்து வைகுண்ட பதத்தை அடைவீர்" என்று அருள் செய்து அயன், அரன், அமரர்கள், அமரர்கோன், அகஸ்தியர் முதலிய அருந்தவர், சுரகுரு, வசு முதலியோர் மீது திருக்கண் சாத்தி வரங் கொடுத்து மறைந்தனன். அப்போது யாவரும் ஆனந்த நிலைய விமானத்தில் இருந்த மாயவனை வணங்கித் தத்தம் உலகிற்குச் சென்றார்கள் என்று சதாநந்தர் சனகனுக்கு உரைத்தனர் என நைமிச முனிவருக்குச் சூத முனிவர் கூறியருளினர். இது வாமன புராணப் பொருள்.

## 49. கங்கையினும் சிறந்தது சாமி புட்கரிணி என்று மார்க்கண்டருக்குப் பிரமன் உபதேசித்த அத்தியாயம்.

சனகராசனுக்குச் சதாநந்த முனிவர் மேலும் கூறல் ஆயினர். வாமதேவ முனிவர் திருமலையிலிருந்து பரம தேவனைக் குறித்துத் தவம் புரிய அவன் எதிர் தோன்றி நிற்க அவனை நோக்கி "உலகு உயிர்களுக்குத் தந்தையே! இந்த வேங்கடமலையில் உள்ள சாமி புட்கரிணியின் சிறப்பினைத் தெரிவிக்க வேண்டும்" என்று வேண்டப் பிரமன் கூறத் தொடங்கினன். சாமி புட்கரிணிக்கு அருகில் சந்திரன் அந்தணப் பெரு மக்களுக்கு மகிழ்ச்சியுடன் நன்மணிப் பணிகளைத் தானம் செய்தமையாலே குளிர்ந்த ஒளியைப் பெற்று எவரும் போற்ற வாழ்கின்றனன். மன்மதன் முன்பு சாமி புட்கரிணியின் அருகில் மறையவர் மகிழ் கொள்ளக் கன்னிகா தானம் புரிந்தமையாலே உலகோர் பாராட்டுமாறு மிக்க அழகும் சுக போகமும் சிறப்பும் பெற்றுக் களிப்புடன் வாழ்கின்றான். குபேரன் வேதியர்களுக்குக் கனகதானம் செய்தற்குச் சாமி புட்கரிணியின் பக்கத்தில்

அடைந்து உபசரித்து உதவியமையாலே அளகாபுரியில் நவநிதியும் பெற்று நலத்துடன் விளங்குகின்றான். இந்தத் திருமலையில் பிருகஸ்பதி சிறந்த மறையோனுக்கு வித்யா தானம் செய்தமையாலே தேவகுரு பதத்தைப் பெற்றான். இவ்வாறு தங்கள் தங்கள் தன்மைக்கு ஏற்பச் சாமி புட்கரிணியை அடைந்து தானம் செய்தவர்களை எண்ணின் அளவு இல்லை என்று பிரமன் விரித்து உரைத்துத் தன் உலகம் சென்றனன் என அம் முனிவனால் நான் அறிந்தேன். மேலும் தவத்தில் சிறந்த மார்க்கண்டேய முனிவன் ஆகாச கங்கைக் கரையின்மேல் பிரமனை நோக்கித் தவம் புரிய அவன் அன்ன ஊர்தியின்மேல் வந்து தோன்றித் தன்னைக் குறித்துத் தவம் இயற்றக் காரணம் வினவினன். முனிவன் தொழுது மூன்று உலகினும் சிறந்த நதிகளின் பெருமையைக் கூற வேண்டினான். பிரமன் "மூன்று உலகங்களிலும் ஆகாச கங்கை சிறந்ததே: ஆயினும் தென் தமிழ் நாட்டில் புலவர்கள் போற்றும் திருவேங்கட மலை என்ற திருமலை ஒன்று உள்ளது: அதன்மேல் சாமி புட்கரிணி என்ற தீர்த்தம் ஒன்று உண்டு: மூன்று உலகிலும் உள்ள நதிகள் எல்லாம் தத்தமக்கு உற்ற பாப சம்பந்தத்தைப் போக்குதற்காக ஒவ்வோர் ஆண்டிலும் மார்கழி மாதம் துவாதசி திதியில் அதனை வந்து சேரும். ஆதலால் அக்காலத்தில் அதில் நீராடுவோர் மூன்று உலகப் புண்ணிய நதிகளிலும் முழுகிய பெரும் பயனைப் பெறுவார்கள்" என்று கூறிச் சென்றான். இது கேட்ட மார்க்கண்டேய முனிவன் ஆகாச கங்கையை நீங்கித் திருமலையை அடைந்து சாமி புட்கரிணியில் நீராடி ஆனந்தித்துத் திருமகள் நாதனைப் பரவி வணங்கி ஆராதனை செய்து சில காலம் அங்குத் தங்குதலும் இறைவன் மகிழ்ந்து அவனுக்கு நீண்ட வாழ் நாளை அளித்தனன் என்று சதானந்தன் கூறினான். இது கேட்டுச் சனகாசன் தன் அமைச்சனோடும் திருமலை அடைந்து சாமி புட்கரிணியில் நீராடிச் சீநிவாசப் பெருமானைப் பணிந்து போற்றித் திருவருள் பெற்றுத் தன் நாடு சென்று அறம் புரிந்து வாழ்ந்தான் எனச் சூத முனிவர் நைமிச முனிவர்க்கு உரைத்தனர். இது வாமன புராணப் பொருள்.

## 50. சுகப்பிரம ரிஷிக்கு ஸ்ரீநிவாசன் சேவை சாதித்த அத்தியாயம்.

தேவலக மறையோன் தேவதரிசன முனிவனை நோக்கி "மூவரினும் முதலான பரம்பொருளின் சிறப்பினை உரைக்க" என்று வேண்ட அவன் கூறல் ஆயினன். முன்னால் மேருமலையின் முடியில் உள்ள மணி மண்டபத்தில் அமைந்த இரத்தின ஆசனத்தில் இருந்த பிரம தேவனைப் பெருந் தவசியர் புகழ்ந்து ஏத்த அவன் மகிழ்ந்து அவர்களுக்கு வேங்கட மலையின் மகிமையை விரித்து உரைத்த போது யாவரும் விரும்பிக் கேட்டனர். அப்போது சுக முனிவர் மிக்க அன்பு கொண்டு அத் திருமலையை அடையக் கருதிப் பிரமனை வணங்கிப் புறப்பட்டுத் தென் திசை சென்று அம் மலையை அடைந்து அங்குத் தவம் புரிந்த பல யோகியர்களைக் கண்டு குமார தாரிகையில் நீராடிப் பின்னர் பாபநாச தீர்த்தம், ஆகாச கங்கா தீர்த்தங்களிலும் முழுகிச் சுவர்ணமுகி நதியினும் முழுகி அதில் உள்ள கமல மலர்களைக் கொய்து பதும தீர்த்தக் கரை அணுகித் தன் உள்ளத்தில் திருமகள் நாதனை இருத்திக் கதலி சண்பகம் ஆமலகம் மந்தாரம் முதலிய மரங்கள் அடர்ந்த வனத்திலிருந்து இறைவன் திரு மந்திரத்தை உச்சரித்துப் பனிக் காலத்தில் நீரினும் வெய்யில் காலத்தில் நெருப்பினும் இருந்து தவம் செய்தான். இதனை அறிந்த இந்திரன் தேவ மகளிரை அழைப்பித்து "நீவிர் நிலவுலகம் சென்று சுவர்ணமுகி நதிக்கரையில் தவம் செய்யும் சுக முனிவன் தவத்தைக் குலைத்திடுவீர்" என்று கட்டளையிட்டு அனுப்பினன். அம் மாதர் அணிகலன்களால் தம்மை அழகு செய்து கொண்டு முனிவன் தவச்சாலையை அடைந்து பாடல் பாடியும் சிலம்பு ஒலிக்க நடந்தும் தென்றல் வரும் திசையில் நின்று மலரும் கலவைச் சந்தனமும் அணிந்தும் எதிரில் மேலாடையும் உடையும் நீக்கி உடுத்தும் கைவளை ஒலிக்குமாறு தம் கூந்தலை அவிழ்த்து உதறி முடித்தும் கண் சிமிட்டியும் நகைத்தும் பரத நூல் முறையால் ஆடி நின்றனர். இவ்வாறு அம் மாதர் சரசம் புரியவும் சுக முனிவன் கண்கள் திறவாமல் இறைவனை உள்ளத்தால் இடையறாது தியானித்துப் பத்திமையாலே கனக மௌலி, ஆரங்கள், குண்டலங்கள், திருத்துழாய் மாலை, நவரத்தின

மணியாரம் முதலிய அணிகலன்களைச் சாத்தி வேத மார்க்கத்தாலே அர்ச்சனை செய்து உள்ளம் அசைவு அற நிற்கத் தேவமாதர் மனம் கலங்கி வான் உலகு சென்றனர்; அப்போது ஸ்ரீமந் நாராயணன் கருடன்மீது அமர்ந்து தன் திவ்விய தேசசு திசை முழுதும் பரவப் பூரண கிருபையுடன் சுக முனிவன் முன் தோன்றினன். தன் அகக் கண்ணால் மட்டும் இறைவனை வழிபட்ட முனிவன் அப்போது புறக் கண்களாலும் திருவுருவைக் கண்டு இன்புற்று வணங்கி வழுத்தின அளவில் இறைவன் அவனை நோக்கி "நீ நாள்தோறும் தவறு இன்றி ஸ்ரீ வைஷ்ணவத் திருமந்திரத்தாலே நினைத்தவற்றை எல்லாம் பெறுவாய்" என்று அருளி மறைந்தான். இறைவன் சென்ற பின்பு முனிவன் தியானம் செய்து கொண்டே அப்பொய்கைக் கரையின் கண் சந்நிதி ஒன்று அமைத்து அதில் உருக்குமிணி தேவியுடன் கண்ணன் திருவுருவை மந்திரப் பிரதிட்டை செய்து நூற்றெட்டு இல்லங்களை அந்தணர்க்கு அமைத்துக் கொடுத்து ஞானமலையை வழுத்தி வழிபாடு செய்து தவசியர் போற்றப் புறப்பட்டு மேரு கிரியைச் சேர்ந்தனன் என்று சூத முனிவர் சௌனகர்க்கு உரைத்த னர். இது பதும புராணப் பொருள் ஆகும்.

## 51. சூலி நரசிங்க உபாசனை செய்ததும் பதுமசரசின் பெருமையும் சுகர் சரித்திரமும் உரைத்த அத்தியாயம்.

தேவதரிசன முனிவர் மேலும் தேவலகருக்குச் சாமி புட்கரிணி தீர்த்தத்தின் அருகில் விளங்கும் ஆதி வராகப் பெருமான் சிறப்பு எல்லாம் எடுத்து உரைத்தார். பின்பு சிவன் நரசிங்கப் பெருமானை அருச்சித்து விரும்பிய பேறு பெற்ற வரலாற்றைக் கூறுவார் ஆயினர். அத் தீர்த்தகிரியின் வடக்குத் திசையில் முப்பது காதத்தில் புலி முதலிய விலங்குகள் செறிந்த காடு ஒன்று உள்ளது. அதன் இடை யில் மலர்ப் பொய்கை ஒன்று உண்டு. அதன் கரையில் அகிர்புத்தினி என்ற முனிவர் இறைவனைத் தியானித்துத் தவம் புரிகின்றார். அதற்கு நேர் வடக்கில் உள்ள மலைக் குகையின் அருகில் ஓர் ஆலமரத்தின் கீழாகப் பெரிய பாறை ஒன்று உண்டு. அதின் மீது சூலபாணி ஆகிய

சிவன் நரசிங்க மூர்த்தியைத் தரிசித்தற்கு விரும்பிப் பாஞ்சராத்ர சாஸ்திர விதிப்படிப் புனிதனாய் அமைந்து தன் உள்ளத் தாமரை மலரில் அப் பெருமானை இருத்தி அன்பு அடங்காத் தன்மையில் பூசனை புரிந்து வைணவ மூல மந்திரத்தை உச்சரித்துத் தியானித்து யோகம் செய்யும் போது அவன் அமர்ந்திருந்த அப் பாறையானது பிளக்க அதினின்றும் நரசிங்கப் பெருமான் பேரொளி மிக்க திருமுடியும், தோளணியும், துளவ மாலையும், மணிக்குழையும், கவுத்துவமும், பொன்னுடையும், கடகம் சூழ்ந்த கைகள் ஆயிரமும் விளங்க மண்ணும் விண்ணும் மறுகும்படி வடவைத் தீயும் வாட்டம் உற அதிர்த்து எழுதலும் சிவன் கண்டு எழுந்து கைகுவித்து வணங்கி மெய்ம்மயிர்க் கூச்சம் கொண்டு அஷ்டாக்ஷரப் பொருளே! ஆதி அமலா! சக்கரக் கரனே! சகல காரணமே! மறை முதலே! என்று பலவாறு பாவி " என்னையும் பிரமனையும் உலகுகளையும் முதலில் படைத்தருளிக் காத்துப் பின்பு ஒரு வாயில் விழுங்குகின்றாய்: பின்பு அவை எல்லாவற்றையும் நின் கொப்பூழ் மலரின்கண் மீளத் தருகின்றாய்: என் அப்பனே! யான் உயிர்களுள் ஒருவன் அல்லனோ? என்னைத் தேடிப் புரந்தருளிய திருவருளின் தன்மை வியப்பே: நான் விதிப்படிப் பூசித்து அருச்சித்த இம் மலைமீது உன் திருவுருவை யாவரும் கண்டு பணிந்து பேறு பெறுமாறு என்றும் காட்சி தருதல் வேண்டும்" என்று இறைஞ்சி வேண்டிப் புகழ்ந்து பூசித்து அங்கு உறைகின்றான். ஆதலால் அம் மலைக்கு நீலகண்ட மலை எனப் பெயர் கூறுவர். அகில் சந்தனம் செறிந்த தனி வனத்தை அகிர்புத்தினி வனம் என்பர். அங்கு உள்ள பொய்கையில் நீராடுவோர்களின் பாவங்கள் நீங்கி விடும். சிவன் பெருந் தவம் புரிந்து மாயவனைப் பணிந்த அப் பிலத்தின் பெயர் அகோபிலம் என்பது ஆம்; அதன் பெருமை அளவிடற்கு அரிது என்று கூறிப் பின்னர் கோனேரியின் சிறப்பினைக் கூறத் தொடங்கினன். அத்திரி, வசிட்டன், ஆரிதன், வியாசன், அகத்தியன், பிருகு, மார்க்கண்டன், சாபாலி, கௌதமன், சாண்டிலியன், போதாயனன், துருவாசன், பராசரன், விசுவாமித்திரன், பிருகஸ்பதி, சயமுனி, சனந்தன், வால்மீகன், காசிபன், பரத்துவாசன், மாண்டவியன், கண்ணுவன், நாரதன், புலகன், காத்தியாயனன், மனுசுகன், சௌனகன், சனாதன், ஆங்கீரசன், சனற்குமாரன், புலத்தியன் முதலிய பல முனிவர்களும் சார்

புட்கரிணி தீர்த்தத்தின் ஏற்றத்தை எடுத்துக் கூறியுள்ளார்கள். ஆங்கு எழுந்தருளிய சீநிவாசப் பெருமானைப் பத்திமையால் போற்றி அத் தீர்த்தத்தில் முழுகினவர்கள் பல பிறவிகளிலும் புரிந்த பாவங்கள் காற்றின் முன் பூளைப் பூப்போல் கடிது நீங்கப் பெறுவர். தம் இஷ்ட காமியங்களைப் பெறுவார்கள். நித்திய இன்ப வீட்டினை அடைவர். இது மெய்ப்மை என்று கூறலும் தேவலர் மேலும் மாயவன் சிறப்பினை விரித்து உரைக்குமாறு வேண்டிக் கொள்ளத் தேவ தரிசனர் கூறல் ஆயினர். அகப்புறப் பகைகளை வென்ற பிருகுமா முனிவர் முன்பு ஒருகால் பரத்துவ நிலையைத் தெரிந்து கொள்ளுதற்காகப் பிரமனிடமும் சிவனிடமும் சென்று அவர்கள் நிலைகளைச் சோதித்து அறிந்து அவர்கள் பரத்துவ நிலைக்கு உரியர் அல்லர் என்று கழித்து விட்டுத் திருமாலினிடம் அடைந்து அவரைத் தம் காலால் உதைக்க, இறைவன் முனிவரைக் கண்டு உபசரித்துக் கனிவாய்ப் பேசுதலும் அம் முனிவர் இவரே பராபரப் பொருள் ஆவார் என்று போற்றிப் பாராட்டிச் சென்றனர், அம் முனிவர் பாதத் தூளியானது திருமகளின் திருமேனியில் சார்ந்ததனால் அவள் மனம் வருந்தி இறைவனை விட்டு நீங்கி விரைந்து சென்று பாதாளம் சேர்ந்து கபில முனிவர் ஆச்சிரமத்தில் அமர்ந்தாள். அவர் தம் தவம் பயன் உடைத்தாயிற்று என்று பாவித் திருமகளின் திருவடிகளை அருச்சனை செய்து நிற்க அங்கே தங்கினள். திருமகள் விலகியதை அறிந்த இறைவன் அவளை மீட்டும் அடைதற்காக வேற்று உருத் தாங்கிச் சென்று பல விடங்களில் நாடிக் கொல்லாபுரம் என்ற தலத்தை அடைய அங்கு அகத்தியன் பூசை செய்த அர்ச்சை உருவத்தில் தங்கிய திருமகளைக் கண்ணுற்றுப் பத்து ஆண்டுகள் தங்கி இருக்க வானிடத்தில் ஆகாய வாணி தோன்றி "புருடோத்தமனே! நம் தாயை விரைவில் காண வேண்டினால் தென் திக்கிலுள்ள சுவர்ணமுகி நதியின் வடபால் சென்று அடைக. அங்கு எண்ணிக்கை இல்லாத தவசியர் அந் நதியைப் பாவித் தங்கியுள்ளனர்: அந் நிலத்தில் குந்தாலிப் படையால் குளிர்ந்த நீர்ப் பொய்கை ஒன்று அமைத்து வானுலகத்தினின்று தாமரைகளைக் கொணர்ந்து வளர்ப்பித்து ஏகாக்ஷர மந்திரம் என்று கூறப்படும் வேத மந்திரத்தை உச்சரித்து அம் மலர்களை அன்னை மகிழும்படித் தானம் புரிந்தால் பன்னிரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர் தன் வெகுளி தீர்ந்து வருவாள்" என்று

உரைத்தது அது கேட்ட இறைவன் ஒரு வேந்தன் உருக்கொண்டு சுவர்ணமுகி நதி தீரத்தை அடைந்து குந்தாலிப் படைக்கலத்தால் ஒரு பொய்கையை உண்டாக்கி வானுலகினின்று தெய்வத் தாமரைகளை வாயு தேவனால் வரவழைத்து அப் பொய்கைக்கண் வளர்ப்பித்து ஆகாய வாணி சொன்னபடி அம் மலர்களாலும் மந்திரத்தாலும் திருமகள் உள்ளம் களி கூரும்படி அன்பு செய்தனன். இவ்வாறு பன்னிரண்டு ஆண்டு கடந்து பதின் மூன்றுவது ஆண்டில் கார்த்திகைத் திங்கள் வளர்பிறைப் பக்கம் ஐந்தாம் திதியில் உத்திராட நட்சத்திரமும் வெள்ளிக் கிழமையும் கூடிய நல்ல நாளில் அப் பொய்கையின் நடுவில் உள்ள தாமரைகளுள் ஆயிரம் இதழ் விரிந்த அரு மலர் ஒன்றின் பொகுட்டின் கண்ணே திருமகள் தோன்றினள். பொன்னணிகளும் பொன்னுடையும் மின்ன உள்ளத்து உவகை பொங்க விழிகளில் அருள் இலங்க முறுவல் பூத்த திருமுகத்தினளாய் அச்சுதனை நோக்கிக் கைகூப்பிப் பணிந்து "பச்சைமா மலை போல் மேனிப் பரமனே! நின்னை இச்சை வைத்து ஏத்தும் பக்தர்களுக்கு நீ எளியன் என்று அறிந்தேன்" என்று பாவி அருகில் சென்று "என் பிழையைப் பொறுத்து அருள்வீர்" என்று வேண்டிக் கொண்டு வானவர் முன்பு செங்கழுநீர் மாலையை இறைவன் திருத் தோள்களில் சாத்தி நிற்க இறைவன் இன்புடன் அவளைத் தன் மார்பில் ஏற்றுக் கொண்டு சீநிவாசன் ஆயினன். இக் காட்சியை வானவர் பார்த்து ஆடிப்பாடி அலர் தூவினர். அச்சுதன் "இப் பதும சரசில் நீராடுவோர் தம் பாவங்கள் அகலச் சிந்தித்த எல்லாம் பெற்று வாழ்வர்" என்று அருள் செய்து கருடன் தோள்மேல் அமர்ந்து சேஷகிரியில் திருக் கோனேரிக் கரை அடைந்து அடியார்க்கு அருள் செய்வான் ஆயினன். ஆதிநாயகன் சொல்லிய பதும சரசில் முழுகியவர் தம் பிறவி தோறும் செய்த பாவங்கள் சூரியன் முன் இருள்போல் அகன்று பெருஞ் சுகம் பெறுவார்கள் என்று ஆங்கீரசன், வசிட்டன், நாரதன், புலகன், அகஸ்தியன், கௌதமன், அத்திரி முனிவன் முதலியோர் சொல்லி உள்ளார்கள்; அதன் பெருமை கூற முடியாது என்று சொல்லி மேலும் கூறுவார் ஆயினர். சுக முனிவர் பிரமன்பால் உபதேசம் பெற்றுச் சிவனைக் காட்டிலும் மிக்க பக்தி கொண்டு இளம்பருவம் முதலே திருமகள் தாய் என்றும் திருமால் தந்தை என்றும் அத்திரு

மால் அடியார்கள் சுற்றத்தார்கள் என்றும் உலகு முழுதும் சுதேசம் என்றும் கருத்துள் கொண்டு பிறிது பற்று இன்றி இன்பு உற்று இருக்குங்காலையில் சூரியனிடம் செல்ல விரும்பி அவ்வாறே அடைய அவன் மகிழ்ந்து மறைகளை நான்காக வகுத்து உரைத்த வியாச ருடைய புதல்வன் என்று அன்பு காட்டி "முன்னையோர் உரைத்த ஆச்சிரம நெறி தவறாத முனியே! பிள்ளை இல்லாதார் தானம், எக்ஞங் கள் செய்தாலும் முத்தி இல்லை என்று சாஸ்திரங்கள் கூறுதலால் விரை வில் உலகிற்குச் சென்று பிதிரர் கடன்களைச் செய்வீராக" என்று சொல்ல அதற்கு இணங்கிச் சுக முனிவர் உலகில் அடைந்து தேவ பிதிரு ஆசாரிய கடன்களைத் தீர்த்தற்கு நினைந்து தன் சாயையை ஒரு சுகன் ஆகச் செய்து உலகின் விடுத்துச் சூரியனிடம் சென்றார். அந்தச் சாயா சுகன் வியாச முனிவரை அடைந்து பணிந்து சிறந்த இலக்கணம் அமைந்த ஒரு கன்னியை மணம் புரிந்து குழந்தைகளைப் பெற்று ஆங்கு அந்தணர்க்கும் தன் புதல்வருக்கும் பிரம்ம வித்தை யைப் போதித்து அவ் வியாச முனிவரால் அஞ்சன கிரியில் எழுந் தருளியுள்ள சீநிவாசப் பெருமான் மகிமைகளைத் தெரிந்து அங்கு அடைந்து அவ் வனத்தில் மறை முறைப்படித் திருமகள் கொழுநனை எழுந்தருளச் செய்து தன் புதல்வர், அந்தணர் இவர்களோடு அத் திருமலையில் விளங்கும் திருக் கோனேரியில் நீராடி இறைவனைத் தொழுது சொல்வான் ஆயினன். "சுத்த சாத்துவிகப் பரம் பொருளே! தொண்டர்க்கு அருளும் சுடரே! எளியேன் புதல்வர் களுக்கும் உடன் போந்த அந்தணர்களுக்கும் உன் திருவிழாவில் உரிய திருப்பணிகளை எல்லாம் பரம்பரை செய்து வருதற்கும் இத் தலத்தினுக்கு என் பெயர் வருதற்கும் வரம் தருவீராக" என்று வேண்டிக் கொள்ள இறைவன் அவ்வாறே அருள் செய்ய அந்த ஞான சுக முனிவன் முன்பு பிரதிட்டை செய்த கண்ணனையும் பல ராமனையும் பதும சரசையும் பணிந்து பிரமன் உலகில் புகுந்தான் என்று தேவ தரிசனர் கூறினர் எனச் சூத முனி நைமிச முனி வருக்கு உரைத்தனர். இது பதும புராணப் பொருள்.

## 52. சுவர்ணமுகி கல்லியை நதி மகிமை உரைத்த அத்தியாயம்.

வேதப்பொருள் தெளிந்த பாரத்துவாச முனிவர் இந்திரன் புதல்வன் ஆகிய அருச்சுனனை நோக்கிக் கூறுவார் ஆயினர். முன்பு புண்ணிய நதிகளின் சிறப்புகள் அனைத்தும் உனக்கு விளங்க உரைத்தேன். அவைகளில் கங்கை என்னும் ஆற்றுடன் யமுனை யாறு சேரும் சங்கமத் தானத்து மகிமையைக் காட்டினும் உயர் கதி தருவதாக விளங்குகின்ற சுவர்ணமுகி ஆற்றுடன் கல்லியை என்ற ஆறு சங்கமிக்கும் தானத்தில் அடைந்து சக்கர பாணியின் திருவடிகளை மனத்துள் தியானித்து முழுகுபவர்களின் பாவங்கள் எல்லாம் நீங்கும். அந்தத் தானத்துக்கு இரண்டு யோசனை அளவுள் வடதிசைக்கண் ஒரு யோசனை உயர்ந்துள்ள வேங்கடகிரி என்னும் பெயர் பெற்றப் புண்ணிய நதிகளுக்கு எல்லாம் மேலான தீர்த்தங்களை உடைய அம்மலைமீது பிரமன், சிவன், இந்திரன் முதலிய கடவுளரும், உலக மக்களும் உள்ளம் கனிந்து சேவிக்கும்படித் திருமகளுடன் திருமால் அடியவர் அருவினை அகற்றி அவர் அவாவிய இஷ்ட காமியங்களை அருளுடன் அளித்து ஆநந்த நிலைய விமானத்துள் எழுந்தருளி இருக்கின்றான் என்று கூறினார். அது கேட்டு அறிந்த அருச்சுனன் மிக மகிழ்ந்து "வேங்கட மலைமேல் வீற்றிருக்கும் பரம்பொருளின் சிறப்புகளை மேலும் சொல்லுவீராக" என்று வேண்ட அவர் கூறல் ஆயினர். ஆதியில் வராக அவதாரம் செய்து கடலுள் ஆழ்ந்து துயர் உற்ற பூமி தேவியைத் தன் வெண் கோட்டால் பொலிவுறும்படி தாங்கிக் கொண்டு வந்து முன்பு போல் வைத்து மானதோத்தர மலை முதலாகிய அட்டகிரிகளும் மேருமலையும் ஆதாரம் உறும்படிக் கருணையால் அமைத்து ஆதிசேடனைக் கீழில் தாங்கும்படிக் கட்டளை இட்டுத் தானும் ஆமையின் வடிவை மேற்கொண்டு ஆதாரமாய்த் தாங்கி வானவர், அரக்கர், மனிதர், விலங்கு, பறவை, ஊர்வன, நிற்பன முதலிய பிறப்புகளையும் உபகரித்து, ஒன்பது கோள்களும் உலகில் நாள்களும் ஒளி உறும்படிக் கால சக்கரத்தினால் நிறுவிப் பொன் மலையைத் தம் கதி வழுவாது சூழ்ந்து வரும்படி பணித்துக் கால விவரங்களையும் உணர்த்தி மறை முதலாகிய கலைகளை அளித்து

அவர் அவர்க்கு உரிய கடன்களை ஆற்றுமாறு அடைவு குன்றாதபடி அருள் செய்து அந்தரியாமியாய் அமருவோன் கல்ப காலந்தோறும் வந்து தன் இச்சையாலே அவதாரம் செய்து எவ்வுலகையும் காத்து அளிப்பான். அந்த அரி இப்பிரம கற்பத்தில் சுவேத வராகமாய்த் தோன்றி வேங்கடகிரியில் பூமி தேவியைத் தன் மடிமீது இருத்திக் கொண்டு எவ்வுலகத்தவர்க்கும் காட்சி அளித்துக் கொண்டு இருக்கின்றான். அதனாலே பெரியோர் இதனைச் சுவேத வாராக கற்பம் என்பார்கள். அப்பெருமானைப் பிரமன் அடைந்து ஆராதித்து "பூமங்கை நாதனே! இப்பெரிய உருவத்தைக் கண்டு சேவிக்க எவர்களும் அஞ்சுவார். ஆதலால் சிறிய சாந்த வடிவத்தை மேற்கொள்ள வேண்டும்" என்று இறைஞ்ச அவ்வாறே சிற்றுருக் கொண்டு விளங்குகின்றான் என்று விசயனுக்கு உரைத்தார் என்று சூதர் நைமிச முனிவர்க்குக் கூறினர். இது காந்த புராணத்துள் தீர்த்த காண்டத்தில் சுவர்ணமுகி நதி மான்மியப் பொருள் ஆகும்.

## 53. சங்கன் சரித்திரமும் அஞ்சனை வரம் பெற்றதும் உரைத்த அத்தியாயம்.

பரத்துவாச முனிவர் அருச்சுனனை நோக்கி மேலும் கூறுவார் ஆயினர். பண்டைக் காலத்தில் கேகய நாட்டு மன்னன் ஆகிய சுருதாபி தானன் என்பான் பெற்ற சங்கன் என்ற அரசன் திருமாலைப் பத்தி செய்து தரிசிக்க விரும்பிப் பல யாகங்கள் செய்தும், நோன்புகள் நோற்றும், மறையவர்களுக்கு மனம் மகிழ நன்கொடை அளித்தும் இறைவனைக் காணப் பெறாது மனதில் மயக்கம் உற்றான். அப்போது வானில் அசரீரியாக "அரசனே! நீ துயரம் நீங்குக. வேங்கட மலையை அடைந்து தவம் புரிக" எனலும் மகிழ்வு உற்றுத் தன் நாட்டைப் புரத்தற்குத் தன் புதல்வன் வச்சிரனுக்கு முடி சூட்டுவித்துப் பின்னர் அம் மலைக்குத் தான் சென்றனன். அங்குக் கோனேரியில் நீராடி அதன் கரையில் தியான யோகத்தில் இருந்தான். அப்போது அகஸ்தியர் முதலிய முனிவாரும் பிருகஸ்பதி முதலிய வானவரும் திருமகள் கேள்வனைத் தியானித்து அங்கு வந்து சேர அரசன் கண்டு அடி பணிந்து உபசரித்தான். அங்கு யாவரும் கூடியிருந்து

திருமாலின் புகழ்களை வழுத்திக் கொண்டிருக்க இறைவன் உவப்பு உற்று அவர்கள் முன்பு தோன்றித் தவசியர்க்கு அருள் செய்து பின் அரசன் சங்கனுக்கு இம்மை அம்மைப் பயன்களை அருளி அவர்கள் கண்ணில் புலப்படாது மறைந்தனன். ஆதலால் திருவேங்கட மலைக்கும் சிறப்பு மிக்க கோனேரிக்கும் நிகர் ஆகப் பிரமாண்டத்தில் புகலுதற்கு ஒன்றும் இல்லை. ஆங்கு எழுந்தருளிய சீநிவாசப் பெருமானுக்கு ஒத்த தெய்வமும் இல்லை என்று கூறிச் சொல்லுவார் ஆயினர். அஞ்சனை என்னும் மாது பெருந் தவம் புரியும் போது மதங்க முனிவர் அவளை அணுகி "என்ன காரணம் பற்றித் தவம் புரிகின்றாய்" என்று வினவ அவள் "புதல்வனைப் பெறுதற்குத் தவம் புரிகின்றேன்" என்றாள். அது கேட்ட முனிவர் "நீ வேங்கட மலைக்குச் சென்று ஆகாய கங்கா தீர்த்தத்தில் முழுகி அதன் கரையில் வாயு தேவனை நாடித் தவம் செய்க. உனக்கு வன்மை மிக்க மகவு தோன்றுவான்" என்று கூறினர். அவ்வாறே அவ்வஞ்சனை அம் மலையை அடைந்து ஆகாய கங்கையில் நீராடிப் புலன்களை அவித்துத் தவம் புரிய வாயுதேவன் தோன்றி வன்மை சால் மகவு வாய்க்கும் என்று வரம் தரப் பெற்று அமர வேதவியாச முனிவர் தோன்றி உலகம் புகழும் ஆண் மகவு பெறுவாய் என அருளினர். இவற்றைக் கேட்ட அஞ்சனை பெரியோர் அருளிப்பாடு பெற்றேன் என்று தவம் புரிந்து அங்ஙனமே புதல்வனைப் பெற்று இன்பு உற்றாள் என்று அருச்சுனனுக்கு உரைத்தார் என்று சூதர் சௌனகர்க்குச் சொன்னர். இது காந்த புராணத்துள் வேங்கட மகிமை உரைத்த பகுதிப் பொருள் ஆகும்.

## 54. மார்க்கண்டர் கருடனால் திருமலை அடைந்த அத்தியாயம்.

திருவேங்கட மலையின் சிறப்பினை மேலும் உரைக்கும்படி சௌனகர் வேண்டச் சூதர் கூறுவார் ஆயினர். மார்க்கண்ட முனிவர் தம் பெற்றோர்களை வணங்கி "யான் உலகில் விசேட திவ்விய ஸ்தலத்தை அடைய எண்ணுகின்றேன். எனக்கு விடை தருவீராக" என்று வேண்டிப் பணிய அவர்கள் "அய்யனே! எம்முடன்

இருந்து எமக்கு உவந்தவற்றை எம் ஏவலின்படிச் செய்து பெரும் பேறுகளை அடைவாய். உன்னைப் பிரிந்து யாம் உயிர் வாழ மாட்டோம்" என்று கூற அவர் பெற்றோர்களை நோக்கி "என்ன பேறு பெறுவது ஆயினும் முதிய பெற்றோர்கள் இனிய அருள் இன்றி ஏகுதல் கூடாது எனப் பெரியோர் கூறுதலால் சிறந்த தலங்கள் தீர்த்தங்களுக்கு விரைவின் யாத்திரை செய்து நம் பிதிர்கள் மேன்மை அடையுமாறு நான் மனத்தில் எண்ணினேன். உவந்து விடை அளித்தால் ஓர் ஆண்டினுள் திரும்புவேன்" என்று பணிந்து கூறினார். அவர்கள் இசைந்து அனுப்ப வான் வழியாய்க் காசி அடைந்து கங்கை நதியில் நீராடிச் சிவன்பால் சில நாள் தங்கிப் பின்பு விண் வழியாய்ப் போம் போது கருடன் எதிர் வரக் கண்டு வணங்கி "இவ்வுலகில் எங்குப் போகின்றாய். விசேட புண்ணிய தலம் எங்கு உள்ளது? கூறுக" என்றார். கருடன் "தென் திசையில் திருவேங்கடம் என்று ஒரு மலை உள்ளது: அதில் முனிவரும் தேவரும் இறைவனை முன்னித் தவம் புரிகின்றனர். புண்ணிய தீர்த்தங்கள் பல உள்ளன. அவற்றிற்கு எல்லாம் சிறந்தது ஆக உள்ள சாமி புட்கரிணி என்று ஒரு பொய்கை உள்ளது. அத் தீர்த்தத்துக்கு மேல்பால் சுவேத வராக மூர்த்தியும் சீநிவாச மூர்த்தியும் சித்தம் உவந்து அடியார் மீது அருள் கூர்ந்து காட்சி அளித்துக் கொண்டிருக்கின்றனர். அத் திருமலைக்குச் சென்று தீர்த்தம் ஆடி வேத விழுப்பொருளை விரைவில் தரிசிக்கலாம்" என்று கூற மார்க்கண்டரும் விருப்பம் உற்றுக் கருடனுடன் அன்பு கொண்டு புறப்பட்டு அம் மலையை அடைந்து அதன் வளம் பலவும் கண்டு இன்னல் அகன்று இருந்தனர் என்று கூறினர். இது மார்க்கண்ட புராணப் பொருள் ஆகும்.

## 55. மார்க்கண்டரும் சுத்தரும் ஸ்ரீநிவாசன் சேவை பெற்ற அத்தியாயம்.

சூத முனிவர் மேலும் கூறுவார் ஆயினர். மார்க்கண்டர் அகஸ்தியர் சீடனுடன் கலந்து அத் திருமலையில் உள்ள தீர்த்தங்கள் எல்லாவற்றிலும் நீராடிப் பின்னர் சாமி புட்கரிணியில் முழுகி வராக மூர்த்தியை வணங்கிச் சீநிவாசனைத் தொழுது மறையால் வாழ்த்தி "பிரணவப் பொருளே! உன்னை அன்றி உலகு இல்லை. அடியேனைத் திருக் கண்ணால் நோக்குதல் வேண்டும்" என்று வேண்ட இறைவன் உவந்து "நீ வேண்டியதைக் கூறுக" என மார்க்கண்டர் உரைக்கல் ஆயினர். "மாதவனே! நான் உன்னை வணங்கி மிக்க ஆயுள் பெற்று உய்ந்தேன். தேவரீர் திருவடிப் பத்திமை எனக்கு இடையறாது இருத்தல் வேண்டும்" என்றார். இறைவன் அவ்வாறே கருணையோடு வரம் கொடுத்து மார்க்கண்டருடன் போந்த அகஸ்தியர் சீடனை நோக்கி, "என் அடிச் சேவை பெற்று ஏத்திய படியால் நீ உன் பாவம் எல்லாம் ஒழிந்து சுத்தன் ஆயினாய். உன் குருவின் ஆசிரமத்தை அடைக" என்று அருள அவன் வணங்கி விடைபெற்றுச் சென்று முனிவர்களை அடைந்து பணிய அவர்கள் "நீ யாவன்?" என்று கேட்டனர். அப்போது அவன் அம் முனிவர்களையும் மார்க்கண்டரையும் நோக்கி "என் இருப்பிடம் திருக் கச்சியூர். வறுமையாலே நான் அந்தணர்க்கு உரிய நித்திய கடன்களை எல்லாம் கைவிட்டு அலைந்து இழிவான துர்த்தானப் பொருளைப் பெற்று என் பெருங் குடும்பத்தைக் காப்பாற்றி வந்தேன். அங்கு உள்ள அந்தணர்கள் என் நடக்கையைப் பழித்துக் கூற என் மனையாள் கேட்டுத் தலையில் கைகுவித்து மனக் கலக்கத்தோடு பிணச் சடங்குகளுக்கு உரிய அரிசி, பசு முதலிய தானம் பெற்று எங்களுக்குக் கொடுத்தலால் இழிவான பாவத்துக்கு ஆள் ஆகித் தூய பிராம்மணர்களின் பழிப்புக்கு இடம் ஆனோம். இவை எல்லாம் ஒழித்து திருமலைக்குச் சென்று சீநிவாசனைத் தரிசனை செய்தவர் பாவம் ஒழிந்து இட்ட காமியங்களைப் பெற்றுப் பூமியில் வாழ்ந்து பின் வைகுண்டம் அடைவார் என்று அறிஞர் கூறுதலால் அங்குச்

சென்று ஒப்பு அற்ற இறைவனை வணங்கி உய்யலாம் என்று சொல்லக் கேட்டு அக்கணமே புறப்பட்டுச் சொன்னமுகி நதிக் கரை அடைந்து அன்போடு அகஸ்தியர் அடியிணை வணங்கி என் செய்கை எல்லாம் சொல்ல அம் முனிவர் நீ வேங்கட மலைக்குச் சென்று திருக்கோனேரியில் நீராடிச் சீநிவாசன் செம்மலர் அடியிணை வணங்கினால் பாவம் எல்லாம் பறந்து ஓடச் சுத்தன் என்னும் பெயர் பெறுவாய் என்று அருளினர். அம்மொழி கேட்டு இம் மலைமேல் அணுகும் போது நொந்து அடைந்த அடியேனுக்கு விரைவில் காட்சி கூடியது. இலக்குமி நாயகனை என் கண்களால் கண்டு வாழ்த்தப் பெற்றேன். அவன் திருவருளுக்கு உரியன் ஆயினேன்" என்று சொல்லி அம் முனிவர் முன்னர் மார்க்கண்டேயரைப் புகழ்ந்து நின்று அவரை நோக்கி "முனிவரே! அகஸ்தியரிடம் இறைவன் சிறப்பைச் கேட்டுச் சொன்னமுகி நதிக்கரையில் சில நாள் தங்கி மகிழ்ந்து இருந்தமையால் அம் முனிவர் சீடன் என்ற பெயர் எனக்கு உண்டாயது" என்றனன். இதனைக் கேட்ட மார்க்கண்டர் "அரிய தவசியாய அந்த அகத்திய முனிவரிடம் நாம் இருவரும் செல்வோம்" என்று சொல்லித் திருமலையினின்றும் இறங்கி அகஸ்தியர் ஆசிரமம் அடைந்து இருவரும் அவரைப் பணிந்தனர். அம் முனிவர் மார்க்கண்டருக்கு முகமன் சொல்லிச் சுத்தனோடு அமரச் செய்து அமுதம் போன்ற திருமாலின் சரிதைகளைச் சொல்லக் கேட்டுப் பின்னர் தான் உறவினரோடு சேர்ந்தான் என்று சூத முனிவர் கூறினர். இது மார்க்கண்டேய புராணத்தில் திருவேங்கட மான்மியத்தில் உள்ள பொருள் ஆம்.

## 56. அருந்ததி தவநிலை உரைத்த அத்தியாயம்.

அருந்ததி வசிட்ட முனிவர் அடி வணங்கி நின்று "குற்றம் அற்ற கற்பு உடைய மங்கையர் தங்கள் நாயகருக்குப் புரியும் தொண்டினும் உயர்ந்த புண்ணியப் பேறு இல்லை என்று பெரியோர் கூறுவர்: ஆகையால் தங்கள் வாய்மொழி அன்றி நான் வேறு அறங்களைச் செய்யின் எனக்கு அவை பயன் உள்ளன ஆக மாட்டா என்று எண்ணிச் சில சொல்லுகின்றேன். அதாவது திருமகள் கேள்வனைக்

குறித்துத் தவம் புரிய எண்ணுகிறேன்; அதற்குத் தேவரீர் விடை தருதல் வேண்டும்" என்று வேண்டிக்கொள்ள வசிட்ட முனிவர் விருப்பத்தோடு "அஞ்சனகிரி என்று யாவரும் பாராட்டுகின்ற திருமலையின் சிறப்பைப் பிரமன் எனக்குக் கூற யான் கேட்டுள்ளேன்; அவ்விடத்திற்கு நீ சென்று தும்புரு என்று பெயர் பெற்ற தீர்த்தத்தில் முழுகித் தவம் புரிக" என்று கூறினர். அம்மொழி கேட்டவாறே அவர் அடி பணிந்து சென்று அத் திருமலை அடைந்து அந்தத் தும்புரு தீர்த்தத்தில் நீராடி இலக்குமி நாயகனைத் தன் உள்ளத்தில் இருத்திப் பன்னிரண்டு ஆண்டு தவசியரும் பாராட்டுமாறு அருந்தவம் புரிந்தாள். அப்போது இறைவன் பங்குனி மாதம் உத்தர நாளில் இலக்குமி சமேதன் ஆகக் காட்சி கொடுக்கக் கண்டு போற்றிப் பணிந்து "வேதமும் அறியா ஆதியே! உன் புகழை ஆதிசேடனும் ஊழிக் காலம் வரை உரைப்பினும் அடங்காது என்றால் யான் எங்ஙனம் உரைப்பேன்" என்று போற்றினாள். அப்போது இறைவன் "நீ ஒன்றிய உள்ளத்தோடு என்னைத் தியானித்து அரிய தவம் புரிந்தனை. நீ விரும்பும் வரம் யாது?" என்று கேட்க அருந்ததி இன்புஉற்றுத் திருமாலைப் பணிந்து "ஐயனே! மூன்று உலகத்தோருக்கும் இந்தத் தீர்த்தம் கொடிய பாதகங்களைப் போக்கிப் புண்ணியப் பேற்றை உதவவும் இத் திருமலையின் சிறப்பைக் கேட்பவர்கள் கூறுபவர்கள் யாவரும் அவர் அவர் சிந்தித்தவைகளைப் பெற்று வாழவும் வரம் அருளுக" என்றாள். அச்சுதன் அவ்வாறே வரம் கொடுத்து "கற்பினால் சிறந்த மங்கையர்களுக்கு எல்லாம் உன் பெயர் உவமானப் பெயராய் எல்லா உலகத்தாரும் சொல்லுவார்கள்" என்று அருள் செய்து மறைந்தனன் என்று சூத முனிவர் சௌனகர்க்குக் கூறினர். இது சாத்துவிக புராணம் எனச் சிறந்த காருடத்தின் பொருள் ஆகும்.

# 57. வீட்டுமாசாரியார் தருமனுக்குத் திருமலையில் ஸ்ரீநிவாசன் வரவு உரைத்த அத்தியாயம்.

தரும புத்திரன் வீடுமரைப் பணிந்து எழுந்து திருமகள் கொழுநன் வேங்கட மலையை விரும்பி அடைந்ததைத் தெரிவிக்க வேண்டும் என்று பிரார்த்திக்க அவர் கூறுவார் ஆயினர். பிரம புத்திரர் ஆகிய நாரதர் ஆதி காலத்தில் செந்தாமரைக் கண்ணன் திருவடிகளைத் தொழும் ஆசையால் போம் போது ஞான வடிவு ஆகிய சுக முனிவர் அகஸ்திய முனிவர் முதலியோர் இடையே கண்டு வணங்கி "வேத முடியில் விளங்கும் பரம்பொருளின் திருவடிகளைத் தொழ விருப்பம் கொண்டு எழுந்தோம். எங்கே சென்றால் காணலாம்" என்று வேண்டினர். அது கேட்ட நாரத முனிவர் "மரகத வண்ணன் ஆகிய மாயன் மண்ணுலகத்து மாந்தர் களுக்கு எல்லாம் பரமபதத்தையும் திருப்பாற் கடலையும் எய்தி வணங்குதல் அருமை என்று திருவுள்ளம் இரங்கி இந் நில உலகத்தில் திருவேங்கட மலையின்மீது கரு ஞாயிறு போன்ற அர்ச்சைத் திரு வுருவம் கொண்டு திருமகள் திருமார்பில் விளங்க எழுந்தருளியுள் ளான். தன் திருவடிகளைப் பக்தியோடு பணிபவர்களுக்கு எல்லாம் திருவருள் பாலிக்கின்றான். நீவிர் கலக்கம் இன்றிச் செல்லலாம்" என்று உரைக்க முனிவர் யாவரும் விரும்பிக் கேட்டுக் கொண்டு இறைவன் எழுந்தருளியுள்ள வேங்கட மலையை நோக்கிச் சென்று ஆங்கு விண்ணவரும் மண்ணவரும் மறையவரும் முறைமையுடன் வந்து உலகு உண்ட மாயவனை நோக்கித் தவம் செய்வது எல்லாம் கண்டு சிந்தையில் அடங்கா மகிழ்ச்சி கொண்டனர். தீர்த்தங்களுக்கு எல்லாம் உயர்ந்த சிறப்பு உடைய சாமி புஷ்கரிணியை அடைந்து உயர் கதிக்கு இதுவே காரணம் என்று மதித்து அதில் நீராடி அதன் கரையில் எழுந்தருளியுள்ள ஆதிவராகப் பெருமானை வணங்கித் தொழுது ஆனந்தம் அடைந்தனர். பின்னர் உதய மண்டலத்தை ஒத்து ஒளிவிடும் மணிகள் விளங்கும் ஆனந்த நிலைய விமானத்தில் எழுந்தருளியுள்ள ஸ்ரீநிவாசப் பெருமானை எதிர் கண்டு இறைஞ்சிப் புகழ்ந்து ஏத்தினர். சிலர் மந்திரங்களால் மலர் அருச்சனை செய்த

னர். சிலர் தியானத்தோடு தூப தீபம் எடுத்தனர். சிலர் கந்த மூல பலங்களை நிவேதித்தனர். இவ்வாறு அவர்கள் இனிது பூசை செய்து போற்ற இறைவன் திருவருள் புரிந்து அவர்கள் விரும்பிய வரம் அளித்து அன்புடை அடியவர்க்காகவே அங்கு மகிழ்வுடன் எழுந்தருளியுள்ளான். ஸ்ரீநிவாசன் திருவடிகளைச் சிந்தை அன்புடன் வந்தித்துப் பரவிப் போற்றுபவர் நிலவுலகில் சந்ததம் பொலிந்து வாழ்ந்து பின்பு ஆனந்த கதியை அடைவர். உலகில் உள்ள புண்ணிய தலங்களுக்கு எல்லாம் சென்று தொழுது வந்தவர்களுக்கு எவ்வளவு நலங்கள் உண்டோ அவ்வளவு நலங்களும் இந்தத் திருமலை இறைவனை வணங்குபவர் பெறுவார்கள் என்று தருமனுக்கு வீடுமர் உரைத்தனர் என நைமிச முனிவர்களுக்குச் சூத முனிவர் கூறினர். இது பாரதத்துள் விரித்துக் கூறப்பட்டு உள்ளது. இந்தத் திருப்பதி மகத்துவத்தைக் கூறுபவர்கள் நன்று என்று இனிது கேட்டு உவப்பவர்கள் யாவரும் நில வுலகில் பழுது அற்ற நன்மை அடைந்து திருமகள் நாயகன் வாழும் வைகுண்ட பதவி பெற்று இன்பு உற்று இருப்பார்கள் என்று சூத முனிவர் மாதவர் யாவரும் கேட்டு வியக்குமாறு வேங்கட மான்மியத்தைக் கூறலும் அவர்கள் நன்று நன்று என்று உள்ளம் உவந்து தம் இருப்பிடங்களுக்குச் சென்றனர்.

திருவேங்கட தலபுராணம் முற்றிற்று.